Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ஜூன்.04-10.,1995
ரூபா 10/00
தினமுரசு வாரமலர்

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 104



# புலிகளுக்கு வந்த இரண்டாவது ஆயுதக் கப்பல்

# இனவாதிகளை வெல்வாரா சந்திரிகா?



## ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்

## நெகிழவைக்கும் தகவல்

# சிறையில் வாடும் சூப்பர் ஸ்டார்

# முரசம்

## சிறந்த ஆயுதம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
"புலிகள் பலவீனப்படுத்தப்படாவிட்டால்
ஏனைய தமிழ்க் கட்சிகள்
புலிகளைவிட அதிகமாகக் கேட்பார்கள்"
என்று சிங்களப் பத்திரிகை ஒன்று
கருத்து வெளியிட்டிருப்பதைக் கண்டேன்.

சென்ற வார முரசில்
அப்பத்திரிகையின் கருத்தை
பிரசுரித்திருந்தோம். படித்திருப்பீர்கள்.

குறிப்பிட்ட கட்டுரையை
எழுதிய நண்பர் முதலில்
அறிய வேண்டிய விடயம் யாதெனில்:
தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகள்
சுக்கோ மிளகோ அல்ல!

தராசும் கையுமாக
பெரும்பான்மை இனம் நின்றுகொண்டு
சுக்கு, மிளகு விற்பது போலவும்
அதிலே இலவசமாகக் கொஞ்சம்
தமிழ் பேசும் மக்களுக்கும்
கொடுக்க நினைப்பது போலவும்
குறிப்பிட்ட நண்பர் நினைப்பது அபத்தம்!

தம்மிடம் இருப்பது எதனையோ
தமிழ் பேசும் மக்கள் பறிக்க நினைப்பதாக
பெரும்பான்மை இனத்திலே சிலர்
பிழையாக விளங்கிக் கொண்டு
பிரசாரமாகவும் நடத்தியதுதான்,
இனப்பிரச்சனை ஊதிப்பருக்கக் காரணம்!

பெரும்பான்மை இனத்தவரிடம்
ஆட்சி அதிகாரம் இருக்கிறது.
நியாயமாக தமக்குள்ள உரிமைகளை
அந்த ஆட்சி அதிகாரம்
தடுத்துக் கொண்டிருக்கிறது என்பதுதான்
தமிழ் பேசும் மக்கள்-
பொறுத்துப் பார்த்துவிட்டுப்
போராட ஆரம்பித்தமைக்கான காரணம்!

தமிழ் பேசும் மக்களது பிரதேசங்கள்
குடியேற்றங்களால் குறுகிப்போயின.
திட்டமிட்ட குடியேற்ற விவகாரத்தில்
எடுத்தது யார் - கொடுத்தது யார்
என்பது உள்ளங்கை நெல்லிக்கனி!

தகராறு செய்தேயாக வேண்டுமென்று
வரலாறுகளை மூடி மறைப்பதும்
இரத்த ஆறு ஓடிக்கொண்டிருக்கையிலும்
பலவாறு பேசி இனப்பிரச்சனையின்
தீவிரத்துக்குக் கொம்பு சீவிவிடுவதும்

ஒற்றுமைக்குப் பாலம் போடுவதாகாது.

இன ஒற்றுமைக்கான பாலம்
இன சமத்துவத்தை ஏற்பது மட்டுமே!
அரசியல் தீர்வு என்பது
கொடுக்கல் வாங்கல் விவகாரமல்ல;
ஒற்றுமைப் பாலம் உறுதிப்படுவதற்கு
அரசியல் தீர்வு ஜனநாயகத் தன்மை
நிறைந்ததாக இருத்தல் அவசியம்.

ஜனநாயகம் என்பதற்கும்
அடிப்படையாக இருப்பது சமத்துவம்தான்.

தோளில் கைபோட்டுக்கொண்டு
சேர்ந்து நடைபோட்டால்
சூது வாதுக்கு இடமில்லை.
சோர்வுக்கும வழியில்லை.

தூரத்தே நின்று ஒருவரை ஒருவர்
சந்தேகமாகப் பார்த்துக்கொண்டிருந்தால்
இருதரப்புக்குமே நிம்மதி இருக்காது.
இனப்பிரச்சனைக்கும் இது பொருந்தும்.

உரியதைப் பெறக்கூட
போராட வேண்டியிருப்பதே
பெரும்பான்மை இனஅரசியல் வாதிகள்
விதைத்த சந்தேகங்களாலும்
சுயநலம் காரணமான இனவாதத்தாலும்
உருவான நிலைதானே!

உரியதைக் கொடுத்தால்
உடைத்துக்கொண்டு போய்விடுவார்கள்
என்ற சந்தேகம் ஏன் எழ வேண்டும்?
சேர்ந்திருப்பதே சுகம் என்று
உணர்த்த வேண்டிய பொறுப்பு
யாரைச் சேர்ந்தது?

சேர்ந்திருக்கத் தமிழ்பேசும் மக்கள்
தயாராகவே இருக்கிறார்கள்.
ஆனால் சேர்ந்திருப்பதற்காக
உரிமைகளை இழந்து
சேர்ந்திருக்க வேண்டும் என்பது
ஐக்கிய உணர்வைக் குறிக்காது.
அது ஆதிக்க உணர்வின் அப்பட்டம்!

போரை வெறுப்பதை வரவேற்கலாம்.
போரில் வெல்வதும்
புலிகளை எதிர்ப்பதும்
உரிமை உணர்வுகளுக்கு உலைவைக்க
என்று இனவாதிகள் சொல்வார்களேயானால்
தீராத யுத்தத்திற்கு அவர்கள்
தோதாகத் தாளம் போடுவதாகவே பொருள்!

இறுதியாக ஒரு சொல்!
சமஷ்டி ஆட்சி முறையைத் தவிர
பிரிவினைக்கெதிரான
சிறந்த ஆயுதம் வேறில்லை!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## பிள்ளைகளே! ஒரு சொற் கேளீர்

பெற்றார்களுக்குப் பிள்ளைகள் மட்டில் ஆற்றப் பட வேண்டிய கடமைகள் இருப்பதுபோல, பிள்ளைகளுக்கும் பெற்றார்கள் மட்டில் நடந்துகொள்ள வேண்டிய வழிமுறைகள் உள்ளன. இது வேதாகமத்தில் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. கீழ்க்காணும் வசனத்தை சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

"பிள்ளைகளே! ஆண்டவருக்குள் பெற்றாருக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; இதுவே முறை.தாய் தந்தையைப் போற்று' என்பதே வாக்குறுதியோடு கூடிய கட்டளைகளுள் முதலாவது. 'அப்பொழுது மண்ணுலகில் நீ நலம் பெறுவாய். நீடூழி வாழ்வாய்" என்பது அவ்வாக்குறுதி. (எபே: 1:1-3)

எனவே, அடிப்படையாக, பிள்ளைகள் நலமாக, நீடூழி வாழவேண்டும் என்றால் உறுதியாக தம் பெற்றாருக்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டும்.

நீதி வாக்குகளில் சொல்லப்பட்டிருக்கும் ஓர் உண்மையையும் பிள்ளைகள் ஞானத்தில் வளர நன்கு மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். ஆம். "பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக் கொடுக்கும்; தன் இஷ்டத்து விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறான்." உலகில் உள்ள பிள்ளைகள் எல்லாருக்குமான பொதுவான உண்மை இது. எனவேதான் மோசேக்கு வழங்கப்பட்ட பத்துக் கட்டளைகளிலும் ஒன்றாக "மாதாவையும் பிதாவையும் சந்தித்திருப்பாயாக" என்று கூறப்பட்டது. பிதாவுக்கும் மாதாவுக்கும் கீழ்ப்படிகின்ற இந்த மேலான பண்பு யேசு கிறிஸ்துவிடம் பூரணமாகக் காணப்பட்டது.

எனவே, பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் இது நியாயம். உங்களுக்கு நன்மை உண்டாவதற்கும் பூமியிலே உங்கள் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உங்கள் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுங்கள், இது வேதாகமம் வழங்கும் உண்மை.

ஏ.பி.வி.கோமஸ்

# ஆன்மீகம்

## சிந்தனைக்குச் சில மொழிகள்

மனிதர்களில் பெரும்பாலானோர் நாவின் மூலமாகவே நரகத்தில் குப்புற வீழ்த்தப்படுகிறார்கள். சில சமயம் மனிதன் ஒரு வார்த்தையைப் பேசுகிறான். அதனை அவன் சாதாரணமானதென்றே நினைக்கிறான். எனினும் இறைவனின் சாபத்துக்குரிய அந்த வார்த்தையின் காரணமாக அம்மனிதன் நரகத்தில் தள்ளப்படுகிறான்.

(நபிமொழி)

★

ஒரு மனிதனின் குணப்பண்புகள் வெளித்தோற்றத்தில் சுவனவாசியைப்போன்று இருக்கும். ஆயினும் இறைவனிடத்தில் அவன் நரகவாசியாக இருப்பான். இன்னொரு மனிதனின் வெளித்தோற்றம் நரகவாசியைப் போன்று இருக்கும். எனினும் அவன் இறைவனிடத்தில் சுவர்க்கவாசி ஆவான்.

(அல் ஹதீஸ்)

★

நபித்தோழர்கள்-இஸ்லாமிய சட்டமேதைகளான இமாம்கள் இயம்பிய இனிய கருத்துக்களை மறுக்காதீர்கள். ஏனெனில் முன்னோர்களை மறுப்பது தனது பெற்றோர்களை மறுப்பதற்கு ஒப்பாகும். ஏனெனில் பாரம்பரிய இஸ்லாமிய வழிமுறைகளை மாற்றியமைக்க முற்பட்ட பலர் அழிவையும்-இழிவையும் தேடிக்கொண்டமை வரலாற்று உண்மையாகும்.

(மாதி ஹுல் ஹுதா)

★

இறை நெருக்கம் பெற்ற ஆத்மீக ஞானிகளின் சிறப்புகளை- மிருகப்பண்புள்ள காமவெறியர்களால் உணர முடியாது. இறைவனின் அன்பினால் தன்னிலை மறந்து பேரின்ப ஒளியில் பிரகாசிப்பவர்களே உத்தமர்கள். ஆயினும் பசி-காமம்-கோபம் ஆகிய சிற்றின்ப ஆசைகளில் சிக்கிச் சீரழிந்து மனோ இச்சைகளில் மூழ்கித்தத்தளிப்பவர்கள் புனித மகான்களான இறை நேசர்களை விமர்சிக்க முற்படுவது ஆழிய கடலை ஆழம் காண சிட்டுக் குருவி முனைந்தது போலாகும்.

(ஆலிமுல் அருஷி)

எம்.எச்.எம்.ஹாரித்

## கவிதைப்போட்டி இல-101

### பரிசுக்குரிய கவிதை

### குருதட்சணை

என்மீது
குற்றம் சுமத்துவதை விடுங்கள்!
ஒரு துரோணரைப் போல்
ஆயுதக்கரங்களின்
அத்தனை விரல்களையும்
குருதட்சணை கேளுங்கள்!

குமுதா சின்னத்துரை- திருகோணமலை.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### யுத்த உலகம்

துப்பாக்கிகள்
வாய் திறக்க
சமாதானம்
ஊனமாகி....இன்னும்
ஊமையான அவலம்...!

ஷர்மி-கண்டி

### என்ன பயன்

புகை வந்து என்ன பயன்
புகழ் வந்து சேரலையே
போடு மச்சான் சூடு.
போட்ட பின்னே ஓடு"

எஸ்.மலர்-தலவாக்கலை.

### தேவையா?

சொல்லும் செயலும் சுகமென்றால்-
மக்களை(க்)
கொல்லும் கருவிகள் ஏதுக்கடா?

ச.மகாலிங்கம்-வெளிமடை குருப்

### புதிய வெண்பா

எஸ் எல். ஆரும்
எம் சிக்ஸ்டீனும் பிஸ்ரோலும்
ஜீ திரியும் கிரேனைட்டும்
மி செல்சும் கவிபரும் நான்தருவேன்
நீ எனக்கு சமாதானம் வாங்கித்தா!

கோட்டைமுனை ஜெயஹரன்.



### அந்தோ பரிதாபம்.

புகைக்கும் உயிர் கொல்லிகள்
புவியினில் உள்ள காலம்வரை
புவிவாழ் உயிரினங்கள்
புண்பட்டே உயிர் நீக்க வேண்டும்.

வே.க.சாமி-கல்குடா.

### "நோக்கமென்ன?"

பாதுகாப்புக்கா யுருவெடுத்து பகைமையினால் உயிர்குடித்து
போர் முனையில் உலகழித்து பார்முழுதும் புகைபரப்பி
சீர்குலைக்கும் கைச்சுழல் துப்பாக்கியே-உனதன்
செயல் திறனை ஆக்கியவர் நோக்கமென்ன?

வாழையூர்-வைரமுத்து.

### சீறுமிந்த துப்பாக்கி

வாழ்ந்து மடிந்தவர்க்கே
குழி பறிக்கும் மண்வெட்டி!
வாழ்வைச் சிதைப்பதற்கே
சீறுமிந்த துப்பாக்கி.

சிவசுப்பிரமணியம் பத்மினி-மட்டக்களப்பு.

### தூது

துப்பாக்கிகளில்
தூது அனுப்பினால்
சேதங்களை
யார் தடுப்பது....?

ஷஹிர்ஷா தாஸிம்-தர்கா நகர்.

### சாத்தானும் நீதானோ?

சீறிப்புகை கக்கி
சீரான வாழ்வுதனை
சிதைத்தது போதாதோ?
சமாதானம் சரிவதற்கு
சாத்தானும் நீதானோ?

கனகசிங்கம் தர்ஷிக்கா-மட்டக்களப்பு.

### பங்கு!

ஓசோன்
படையினை
ஓட்டை
இடுதலில்
ஆயுதங்களுக்கும்
அளப்பெரிய
பங்கோ?

ரேணுகா நிபாய்தீன்-ஏறாவூர்-02.

### அழிவு

வெண்புறாவை அழித்து
செம்புறாவாக்கியது
துப்பாக்கி
வெண்புகை கக்கி.

அருண்சிவா-திருக்கோணமலை.

### சாம்பல்

இந்தக்
குட்டிப் பேய் இங்கே
கொட்டும் பொருள் என்ன?
சமாதானத்தின் சாம்பலா?

சோ.அருளானந்தன்-மட்டக்களப்பு.

### நெருப்பள்ளிப்போட்டாயே!

புகையுள்ள இடமெல்லாம்
நெருப்புண்டு என்றார்கள்
நெருப்பற்ற உன்வயிற்றுக்
குண்டதனால் நிம்மதியின்
வாசலுக்கே நெருப்பள்ளிப்
போட்டாயே!

குழந்தைவேல் சிவசோதி-மட்/கல்லடி.

## கவிதைப் போட்டி இல-104



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 10.06.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 104
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு

முரசே!
உன் சுவை அதிகரித்துக் கொண்டே போகிறது. காரணம் ஒரு வார எல்லைக்குள் ஓராயிரம் அம்சங்களை ஒளிவுமறைவின்றி மிகத் துணிச்சலுடன் தெட்டத் தெளிவாக வாசகர்களின் முன் அர்ப்பணித்து அவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுள்ளாயே! வாழ்க தமிழ்!

குகப்பிரியாவும் வாசகர்களும்-
அட்டாளைச் சேனை-5.

## வாசகர் சாலை

வாரம் தோறும் வாசமலராய் மணம் பரப்பும் முரசே!

"பாத்திரம் அறிந்து பிச்சை போடு என்பார்கள்"

ஆனால் பக்க சார்பற்று கடமை புரியும் உன்னை என்றும் வாசகர்களாகிய நாம் மறேவாம்.

சி.ஸ்ரீரவி-இரத்தினபுரி.

□□

நீ வாரா வாரம் அள்ளி வழங்கும் பல சிறப்பம்சங்களால் சிறியோர் முதல், பெரியோர் வரை அனைவரினது உள்ளங்களையும் தொட்டு விட்டாய்

பர்ஸானா ராஸிக் - மல்வான ஹினனை.

□□

தித்திக்கும் தீன் சுவைப் படைப்புகளை செந்தேன் மொழியில் வண்ண வடிவமைத்து எத்திக்கும் வழங்கிவிடும் வாஞ்சை மிகுந்த முரசே!

நீ சுமந்து வரும் எல்லா அம்சங்களும் இனிமை!

ஏ.எல்.அமீர் ஹுஸைன்-கல்முனை-3

சூப்பர் 'மகாகூலம்'
மகாகூலம் தொடர் வாராவாரம் நம்மை அசத்திவிட்டது.
'இருகூரானுக்கு' சபாஷ்!

எம். ராம்குமார்-பதுளை.

'மகாகூலம்' தந்து நம்மையெல்லாம் பயமுறுத்தி விட்டீரே! அடுத்த தொடரில் என்ன செய்யப் போகிறீரோ. புதிய தொடர் பிரமாதப்படுத்தட்டும்.


வி. சகீலா -புதிய காத்தான்குடி.

மகாகூலத்தின் முடிவு இன்னும் விறு விறுப்பாக எதிர்பார்த்தோம். தொடரை முடிக்கும்போது இருகூரானின் பேனா குளிர்ந்து விட்டதோ.

நா. கோபி-இரத்தினபுரி.

ஹலோ முரசாரே!
புதிய தொடர் 'மகாகூலத்தை' விட தூளாக இருக்கணும். இருக்கும்தானே?....

கே. சௌந்தாயா- கொழும்பு-11.



□□

தித்திக்கும் தினமுரசே!
தெவிட்டாத தேன் அமுதே
பற்றுடன் நீ சுமந்து வரும்
பாங்கான அம்சங்களை -
பருக சளைக்கவில்லை
பெருமையுடன் வாழ்த்துகின்றேன்
பேரன்புடன் போற்றுகின்றேன்
வாழ்க! வளர்கவென!!

யசோதா-பசறை

அன்புடன் தினமுரசு ஆசிரியருக்கு,

தினமுரசு எம்மை மட்டும் கவர்ந்துவிட வில்லை, சிங்கள மொழி பேசும் வாசகர்களையும் கவர்ந்துவிட்டது. நான் தொழில் புரியும் அலுவலகத்தில் என்னுடன் சேர்ந்து சிங்கள மொழி பேசும் அலுவலர்களும் (ஓய்வு நேரத்தில்) படிக்கிறார்கள். அவர்களைக் கவர்ந்தவற்றுள் 'தகவல் பெட்டி' முக்கியமானது.சிங்களப் பத்திரிகைகள் இதுவரை வழங்காத தகவலகளை தகவல் பெட்டி வழங்குகின்றது, பாராட்டுக்கள்.

எம்.என்.எம். நவ்ரஜி, அக்குறணை.

□□

# கிழக்கில் புலிகளின் முக்கிய தலைவர்கள்!

# படைக் குவிப்பைத் தடுக்கவும் திட்டம்!

## முல்லையில் புலிகளின் முக்கிய தளபதி பலி!

(நமது நிருபர்)

**கிழக்கு மாகாணத்தில் தாக்குதல்களை தீவிரப்படுத்துவது மூலம் வடக்கில் படைக்குவிப்பைத் தடுத்து நிறுத்துவதே புலிகளது உடனடியான நோக்கம் என்று அறியப்படுகிறது. இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கும் தாக்குதல்கள் மூலம் அரசின் வடபகுதி தாக்குதல் திட்டத்தை முடக்கிப் போடவும் புலிகள் திட்டமிட்டுள்ளனர்.**

### உளவியல் யுத்தம்

மூன்றாம் கட்ட ஈழப் போர் ஆரம்பித்த பின்னர் கிழக்கு மாகாணத்தில் புலிகள் அமைப்பினர் பாரிய தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதனால் கிழக்கில் தமது படை பலத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

வடக்கில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு அரசு உத்தேசித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகும்போது, கிழக்கில் தமது தாக்குதல்களைப் புலிகள் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

அதே சமயம் வடக்கில் உள்ள முக்கிய இராணுவ முகாம்கள் எந்த நேரமும் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடும் என்பது போன்ற சூழ்நிலையையும் புலிகள் தோற்றுவித்துள்ளனர்.

இதனால் வடக்கில் உள்ள இராணுவ முகாம்களில் உள்ளவர்கள் உளவியல் ரீதியாக பலவீனம் அடைவார்கள் என்று புலிகள் நினைப்பதாகத் தெரிகிறது.

முகாம்களைத் தாக்காமல் எந்நேரமும் தாக்கப்படலாம் என்ற மனோநிலையை ஏற்படுத்துவது உளவியல் யுத்த முறையாகும் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

முகாம்களில் உள்ள இராணுவத்தினரை உளவியல் ரீதியில் பலவீனமாக்கிவிட்டு தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தக்கூடும் என்றும் இராணுவ ஆய்வாளர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை புலிகளது முக்கிய தளபதிகள் சில்ரை பிரபாகரன் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

### யாழ் தளபதி திருமலையில்

புலிகளது யாழ் மாவட்டத் தளபதி செல்வராசா தாக்குதல் பிரிவொன்றுடன் திருமலை மாவட்டத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் செல்வராசா தலைமையிலான அணி திருமலைக்கு சென்றுவிட்டதாக அறியப்படுகிறது.

இதனையடுத்து யாழ் மாவட்ட புலிகளது தளபதியாக ரூபன் என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

கிழக்கில் புலிகள் தாக்குதல்களை மேலும் தொடரும்போது படையினரின் நடவடிக்கைகள் பொது மக்களுக்கு எதிராகத் திரும்புவது புலிகளுக்கே சாதகமாகும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

சமீபத்தில் தாக்குதல் நடவடிக்கைகளின் போது படையினரும், பொலிசாரும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பொது மக்களை பீதியடையச் செய்துள்ளன.

இதேவேளை புலிகள் யாழ்ப்பாணத்தில் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தம்மால் தாக்கப்பட்ட மட்டக்களப்பு தரவைக்குள இராணுவ முகாமில்தான் மட்டக்களப்பு மாவட்ட இராணுவ நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வந்தன என்று தெரிவித்துள்ளனர்.

தரவைக்குளம் இராணுவ முகாம் தாக்கப்பட்ட வேளையில், கூழாவடியில் இருந்து உதவிக்கு விரைந்த இராணுவ அணி தம்மால் தடுக்கப்பட்டதாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

### முல்லையில் மோதல்

27.05.95 அன்று மாலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயாப் பகுதியில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையே நேரடி மோதல் இடம்பெற்றது.

இம் மோதலில் புலிகளின் முல்லைத்தீவு தலைவர்களில் ஒருவரான துணைத்தளபதி லெப்.கேணல் அகிலன் எனப்படும் இராமசாமி இராமச்சந்திரன், புலிகளின் வெலிஓயா பொறுப்பாளர் மேஜர் கோமகன் என்றழைக்கப்படும் அந்தோனிப்பிள்ளை யோகராஜா, லெப்டினன்ட் இளம்தமிழன் என்றழைக்கப்படும் காளிசத்தியசீலன் உட்பட ஆறு புலிகள் பலியானார்கள். இராணுவத்தினர் ஐவர் காயமடைந்தனர் என்று புலிகள் கூறியுள்ளனர்.

### மன்னாரில் மோதல்

26.05.95 அன்று மன்னாரில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் பெண் புலிகள் இருவர் பலியானர்கள்.

2வது லெப்டினன்ட் பாமா (ஜோன் பற்றிக் சசிகலா-மன்னார்), நிக்கலஸ் (விமலா தேவி சின்னராசா-யாழ்ப்பாணம்) ஆகியோரே பலியானவர்களாவர்.

# போருக்குப்பின் 1600 குடும்பங்கள் அகதிகளாயினர்!

## மண்ணெண்ணை அளவும் அரசால் குறைப்பு!

கடந்த ஏப்ரல் 19க்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்தி அறுநூறு (1600) குடும்பங்கள் அகதிகளாகியுள்ளனர்.

தொண்டமனாறு பகுதியில் செல்வச் சந்நிதி கோயில் பகுதியில் வாழ்ந்த குடும்பங்களே இவ்வாறு அகதிகளாகியுள்ளனர்.

தொண்டமனாறு பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது அகதிகளான இக்குடும்பங்கள் மீண்டும் திரும்பிச் செல்ல முடியாமல் உள்ளன.

வல்வெட்டியில் உள்ள இரண்டு பாடசாலைகளில் 600 குடும்பங்களும், பருத்தித்துறை, உடுப்பிட்டிப் பகுதிகளில் 1000 குடும்பங்களும் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

அச்சுவேலிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீண்டும் தமது சொந்தப் பகுதிகளுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர்.

### மண்ணெண்ணை போதாது.

கடந்த 2 மாதத்திற்கு முன்பு வரை ஒன்பது ஆயிரத்து ஐநூறு (9,500) பெரல்கள் மண்ணெண்ணை யாழ்ப்பாணத்திற்கு அரசால் அனுப்பி வைக்கப்பட்டு வந்தது.

ஒரு மாதத்திற்குரிய தேவைக்காகவே அவை அனுப்பப்பட்டன.

ஆனால் தற்போது யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் மண்ணெண்ணையின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாத காலத்திற்கு பின்னர் சமீபத்தில் அரசு மண்ணெண்ணை அனுப்பியது.

4,922 பெரல்கள் மட்டுமே இம்முறை அரசால் அனுப்பப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஒரு மாதத்திற்கு குறைந்தது 12,000 பெரல்கள் மண்ணெண்ணை தேவையாகும்.

இந்நிலையில் ஏற்கெனவே அனுப்பப்பட்ட அளவும் குறைக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் ஒரு லிட்டர் மண்ணெண்ணை 25 ரூபாவிற்கு வழங்கப்படுகிறது. தனியார் கடைகளில் ஒரு லிட்டர் மண்ணெண்ணை 65 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது அனுப்பப்படும் மண்ணெண்ணையில் யாழ் பொது மருத்துவமனை,, யாழ் பல்கலைக்கழகம், யாழ் மாநகர சபை போன்றவற்றின் தேவைகளுக்கும் எடுத்துக் கொள்ளுமாறு அரசால் கூறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நோயால் அவதி

யாழ் பொது மருத்துவமனைக்குத் தேவையான டீசல் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ் பொது மருத்துவமனையில் எக்ஸ்ரே கருவி இயங்க முடியாமல் உள்ளதோடு நோயாளர்களும் அவதிப்படுவதாகக் கூறப்படுகிறது.

உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை இதுவரை தட்டுப்பாடு எதுவும் ஏற்படவில்லை. உணவுப் பொருட்களோடு சென்ற 'கல்யாணி' என்னும் கப்பலும் 31.05.95 அன்று யாழ்ப்பாணத்தில் உணவுப்பொருட்களை இறக்கி விட்டுத் திரும்பியது.

## 'கண்ணி'வெடி அச்சுறுத்தல் கொழும்பில்! 'எல்லாளன் படை' எச்சரிக்கை!




கொழும்பில் கடந்த வருடம் நட்சத்திர விடுதிகள் சிலவற்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளுக்கு 'எல்லாளன் படை' என்னும் அமைப்பு உரிமை கோரியிருந்தது.

நேரடியாக உரிமை கோர முடியாத நடவடிக்கைகளுக்கு 'எல்லாளன் படை' என்னும் பெயரைப் புலிகள் பாவிப்பதாக நம்பப்பட்டது.

தற்போது 'எல்லாளன் படை' என்ற பெயரில் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "ஈழப்போர் மூன்று தொடங்கிய பின்னர் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்களை விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு எதிராக மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர்.

எல்லாளன் படையினராகிய நாங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழ் மக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவதை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசையும், பாதுகாப்பு அமைச்சையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லையாயின் கொழும்பிலும் 'கண்ணி' வெடிகளை வைப்பதன் மூலம் கடும் நடவடிக்கை எடுப்போம்."

இவ்வாறு அந்த அறிக்கையில் எல்லாளன் படையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை தமிழிலும், ஆங்கிலத்திலும் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.

## ஊர்காவல் படையால் ஊர் மக்கள் அச்சம்

## திருமலை லிங்கநகரில் வேட்டுச் சத்தங்கள்

(சஞ்ஜீவன்)

திருக்கோணமலையில் உள்ள லிங்கநகரில் குடியிருக்கும் தமிழ் மக்களது வீடுகள் ஊர்காவல் படையினரால் சோதனையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

29.05.95 அன்று இரவு ஆயுதங்களோடு வந்த ஊர்காவல் படையினரால் லிங்கநகர் மக்கள் மிரட்டப்பட்டனர். வீடுகளைச் சோதனையிட வேண்டும் என்று கூறிக்கொண்டு ஊர்காவல் படையினர் வீடுகளுக்குள்ளும் புகுந்தனர்.

30.05.95 அன்று லிங்கநகருக்கு பின்புறமாகவுள்ள மக்கோ மலைப் பகுதியில் இருந்து வேட்டுச் சத்தங்கள் கேட்டன. வெற்றுத் தோட்டாக்கள் லிங்கநகர் பகுதியில் வந்து விழுந்தன.

ஊர்காவல் படையினரே துப்பாக்கி பிரயோகம் செய்தனர் என்று மக்கள் பீதியடைந்தனர்.

இது தொடர்பாக ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு.சந்திரகுமார் திருமலை பொலிஸ் பொறுப்பதிகாரியோடு தொடர்பு கொண்டு விசாரித்தார்.

"பழைய தோட்டாக்களைப் பரிசீலித்து பார்க்கிறார்கள்" என்று பொலிஸ் பொறுப்பதிகாரி கூறினார் என்று சந்திரகுமார் பா.உ.தெரிவித்தார்.

இதேவேளையில் கல்லாரவ பகுதியில் தாக்குதலுக்கு உள்ளான சிங்களக் குடும்பத்தினர் திருமலையில் 'லவ்லேன்' என்னுமிடத்தில் பாதுகாப்பாக தங்கவைக்கப் பட்டுள்ளார்கள். அவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## தீர்வு திருப்தியில்லை சந்திரசேகரனுக்கு!

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி விடயத்தில் அரசின் தீர்வு திருப்தியளிக்கவில்லை. தனி நபர்கள் மீதோ தனிக்கட்சிகள் மீதோ நம்பிக்கைகொள்ளுமாறு நாம் மலையக மக்களிடம் கூறப்போவதில்லை. பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தால் மட்டும் மலையக மக்களது பிரச்சனைகளை தீர்த்துவிடலாம் என்று நாம் உத்தரவாதமளிக்கவும் முடியாது. இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பிரதி அமைச்சருமான சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் ஈ.பி.டி.பி, புளொட், மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் நடத்திய சந்திப்பின் போதே மலையக அரசியல் நிலைகுறித்து அவர் விளக்கமளித்தார்.

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி பிரச்சனை போன்ற மலையக மக்களது பொதுப் பிரச்சனைகளில் தமிழ் கட்சிகளும், முஸ்லிம் காங்கிரசும் பொது ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மலையக மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் காதர், மலையக தமிழ் மக்களுக்கு அவர்கள் மலையகத்தில் வாழும் நிலப்பரப்புக்களை உள்ளடக்கிய பிரதேசங்களது சுயாட்சி அதிகாரம் தொடர்பாக விளக்கமளித்தார்.

# பேச்சுவார்த்தையில் புலிகள் கலந்தது ஏன்?

## விடுதலைப் புலிகளின் சஞ்சிகை விளக்கம்

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டு கழகத்தால் வெளியிடப்படும் மாத சஞ்சிகையின் பெயர் 'வெளிச்சம்'.

வைகாசி மாத வெளிச்சம் சஞ்சிகை ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது. பேச்சுவார்த்தைகள் தொடர்பான புலிகளது நிலைப்பாடு அதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அதில் உள்ள முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு;

"சமாதானத்திற்கு காத்திருந்தோம் விடிவு பிறக்கவில்லை." என்றும், அமைதிக்காக அடைகாத்தோம், அது பொரிக்கவில்லை என்றும் இங்கு சிலர் அங்கலாய்க்கின்றனர். இதன் அர்த்தம் என்ன? சிங்கள அரசிடம் இவர்கள் எப்படியான சமாதானத்தை அமைதியையும் எதிர்பார்க்கின்றனர்?

பேசிப் பெறுவதும், கேட்டுவாங்குவதுமே சமாதானம் என்றால் போராடியே பெறவேண்டிய 'தாயக மீட்பு' என்ற தாரக மந்திரத்தின் நிலை என்ன?

சலுகைகள், உரிமைகள் என்பவற்றில் மயங்கியுள்ளவர்களுக்கே வெடிச்சத்தம் கேட்காத பூமி விடுதலைபெற்ற நாடாகத் தெரியும்.

பெற்றோலும், வேறு பொருட்களும் சுதந்திரத்தின் தோற்றுவாயாகத் தெரியும். ஆனால் பூரண விடுதலை என்பது இது அல்ல. அந்த விடுதலையை எந்தச் சிங்கள அரசும் எமக்குத் தரப்போவதில்லை.

சரி; அப்படியாயின் பேச்சுவார்த்தையில் புலிகள் ஏன் கலந்துகொண்டனர்?

சிங்கள அரசுகள் உலகத்தை ஏமாற்றத் திட்டமிட்டு சமாதானப் பிரியர்கள் என்று தங்களைக் காட்ட முற்பட்டார்கள்.

நாங்களும் எங்கள் நியாயத்தையும் அதிலிருக்கும் தர்மத்தையும் உலகுக்குச் சொல்லவும், எதிரியின் தந்திரோபாயங்களை தவிடுபொடியாக்கவுமே பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள நேரிடுகின்றது.

உயிர் விலை கொடுத்துப் போராடும் எம் தேசத்திலிருந்து பி.பி.சி ஆனந்திக்கு படித்தவர்கள் எனப்படும் சிலர் வழங்கிய செவ்விகள் எம்மைத் திகைக்கவைத்தன.

கல்விப் பெருந்தகைகள் எனப்படும் இவர்களது அறியாமையை என்னவென்று அழைப்பது? நாட்டுப்பற்றின்மை என்பதா? அல்லது பரிதாபப் படுவதா?

நேற்று நிலத்தையும் நீலக்கடலையும் கட்டுப்படுத்தி வல்லமை பெற்றோம். இன்று எதிரியின் ஆகாய பலத்தையே அழிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளோம்.

இத்தனைக்குப் பின்பும் மாயமான்களுக்கு ஆசைப்படுவது போராட்டத்தையே படுகுழிக்குள் தள்ளி விடும்."

இவ்வாறு 'வெளிச்சம்' சஞ்சிகை விளக்கியுள்ளது.

# சவூதியில் ஆரம்பித்த இலங்கை-கேரளக் காதல்!

## ஏறாவூரில் நஷ்டஈட்டுடன் முடிவுக்கு வந்தது

(ஏறாவூர் நிருபர்)

இலங்கை ஏறாவூர் வாசியொருவருக்கும் இந்திய கேரளப் பெண்ணொருவருக்கும் சவூதி அரேபியாவில் அவர்கள் தொழில் வாய்ப்புப் பெற்றிருந்த சமயம் ஆரம்பித்த காதல், மட்டக்களப்பு விஷேட குற்றவியல் விசாரணைப் பிரிவு வரை சென்று கேரளப் பெண்ணுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுத்ததுடன் முடிவுற்றது.

இந்தக்காதல் தொடர்பு பற்றித் தெரிய வருவதாவது: மேற்படி இருவரும் சவூதியில் நெருக்கமான காதலர்களாக இருந்த சமயம் தத்தமது நாடுகளுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது. தனது ஊருக்குச் சென்ற கேரளப் பெண் காதலனுக்கு கடிதங்களை அனுப்பியிருக்கிறார். எனினும் சவூதியிலிருந்து ஏறாவூர் வந்த காதலன் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துவிட்டார். தான் அனுப்பிய கடிதங்களுக்கு பதில் கிடைக்காததைக் கண்ட கேரளப் பெண் இந்தியாவிலிருந்து ஏறாவூர் வந்து தனது காதலனைப் பற்றி விசாரித்தபோது அவர் வேறொரு பெண்ணைத் திருமணம் முடித்திருப்பது தெரிய வரவே தன்னை தனது காதலன் ஏமாற்றிய விவரத்தை கேரளப் பெண், பொலிஸ் விஷேட குற்றவியல் விசாரணைப் பெண் பிரிவுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இப்பெண்ணின் முறைப் பாட்டை விசாரித்த மட்டக்களப்பு பொலிஸ் விஷேட குற்றவியல் விசாரணைப் பிரிவு இப்பெண்ணின் காதலனை ரூபா முப்பதினாயிரம் நஷ்டஈடாக வழங்குமாறு கோரி உடனடியாகவே ரூபா பதினேழாயிரத்தை அப்பெண்ணுக்குப் பெற்றுக் கொடுத்ததாகவும் தெரிய வருகிறது.

இது இவ்விதமிருக்க, காதலனைக் கைவிட மறுத்த இரு காதலிகளையும் காதலன் பதிவுத் திருமணம் செய்துள்ள சம்பவமொன்று செங்கலடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

எட்டுவருடங்களுக்கு முன்னர் இருந்து ஒரு ஆசிரியையும், நான்கு வருடங்களாக மற்றொரு பெண்ணையும் காதலித்து இரண்டாவதாகக் காதலித்த பெண்ணை முதலிலும் முதலில் காதலித்த பெண்ணை அடுத்தும் இவர் பதிவுத் திருமணம் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. இவர் இரு பெண்களைக் காதலித்த விடயங்கள் அந்த இருபெண்களுக்கும் தெரிந்திருந்ததென்றும், அவர் முதலில் திருமணம் செய்தது மற்றைய பெண்ணுக்குத் தெரிந்ததென்றும், இருவருமே காதலனை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை என்றும் அறியக் கிடைத்தது.

## அம்மா கொடும் பாவியை மகள் எரித்தார்

தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆளுநர் மீது புகார் கூறினார் அல்லவா? இதனைக் கண்டித்தார் தமிழக சட்டமன்ற உறுப்பினர் பொன்னம்மாள்.

ஆளுநரை நொண்டி என்று ஜெயலலிதாவின் ஆட்கள் சொல்கிறார்கள். அப்படிப் பட்ட ஆளுநர் ஜெயலலிதாவிடம் எப்படி தவறாக நடக்க முடியும் என்று பொன்னம்மாள் கேட்டார்.

பொன்னம்மாளின் பேச்சைக் கண்டித்து ஜெயலலிதா கட்சி சட்டமன்ற உறுப்பினர் சுப்புரத்தினம் கொதித்தெழுந்தார். பொன்னம்மாளின் கொடும்பாவியையும் எரித்தார்.

இந்தக் கொடும்பாவி எரிப்பில் சுப்புரத்தினத்தின் மனைவி சாந்தியும் முன்வரிசையில் நின்றார். சாந்தி யார் தெரியுமோ? கொடும்பாவியாக எரிக்கப்பட்ட பொன்னம்மாளின் மகள்.

## அகதி உலர் உணவு முத்திரைக்குப் பதிலாகப் பணம்.

(ஏறாவூர் நிருபர்)

அகதிகளுக்காக இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த உலர் உணவு முத்திரைக்குப் பதிலாகத் தற்போது மட்டு மாவட்டமெங்கும் பணம் வழங்கப்பட்டு வருகிறது.


இந்நடவடிக்கையால் கூட்டுறவுக் கடைகளிலிருந்து பாவனைக்கு உதவாத பொருட்களையும் வேண்டாத பொருட்களையும் பெற நிர்ப்பந்திக்கப் படுவது இனிமேல் நடவாது என்றும், தமக்கு வேண்டிய தரமான பொருட்களை தாம் விரும்பிய நேரத்தில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள வழியேற்பட்டுள்ளது என்றும், கூட்டுறவுக் கடைகளில் இடம்பெறும் (குறிப்பாக அகதிகளின் நிவாரணப் பொருள் விநியோகத்தில்) அளவை நிறுவை மோசடிகள் இடம் பெற முடியாதென அகதிகள் தெரிவிக்கிறார்கள்.

உலர் உணவு முத்திரைக்குப் பதிலாக பணம் வழங்கும் நடவடிக்கையால் சில கூட்டுறவுக் கடைமுகாமையாளர்களும் சில கிராம சேவையாளர்களும் தமது "சுருட்டல் கைங்கரியங்கள்" இனிமேல் நடவாதென்பதால் முகம் சுழித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க; தாம், ஏற்கெனவே வேலைப் பளுவால் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும்போது நிவாரணப் பணம் வழங்கும் அலுவலும் தம்மிடையே ஒப்படைக்கப் பட்டிருப்பதால் தாம் மேலதிக வேலைப் பளுவால் திண்டாடுவதாக பல பிரதேச செயலக அலுவலர்கள் தெரிவிக்கிறார்கள்.

தூர இடங்களிலிருந்து நிவாரணப் பணம்பெற தமது கணவன்மார் பிரதேச செயலகங்களுக்கு வரும்போது படையினரால் அவர்கள் வேலைக்காக அழைத்துச் செல்லப்படுவதாகவும் அகதிகள் தெரிவிக்கிறார்கள்.

## அயலக அரசியல்




## தகாத முறை என்றால் என்ன?

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும், ஆளுநர் சென்னா ரெட்டிக்கும் இடையே கடும் மோதல் தொடர்ந்துவருவது தெரிந்ததே.

ஆளுநர் தன்னிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டார் என்று தமிழக சட்டசபையில் முதல்வர் புகார் கூறினார். இதனையடுத்து பலத்த சர்ச்சை ஏற்பட்டது.

கடுமையான வார்த்தைகளை ஆளுநர் பிரயோகித்தமையைத்தான் முதல்வர் அப்படிக் கூறினார் என்று அமைச்சர் எஸ்.டி.எஸ். தெரிவித்துள்ளார்.

ஆனாலும் ஜெயலலிதாவின் புகார் குறித்து வாதப் பிரதிவாதங்கள் இன்னும் முடிந்த பாடில்லை.

ஜெயலலிதாவின் புகார் குறித்து தி.மு.க.ஆதரவு பத்திரிகை வெளியிட்ட கருத்தோவியம்தான் மேலே உள்ளது.


**BRIGHT ன் கல்வித்திட்டம்**

**90 DAYS SPOKEN ENGLISH & SINHALA**

3 ஒலிப்பதிவு நாடாவுடன் கூடிய தபால் மூலக்கல்வி
POSTAL TUITION WITH THREE AUDIO CASSETTES

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்துள் இலகுவாக எளிய நடையில் மாணவர்களின் விருப்புக்கு ஏற்றமுறையில் நவீன உளவியல் முறையில் ஆங்கில/சிங்கள பேச்சு மொழி கற்றுத்தரப்படும்.

எமது பாடத்தொகுப்புடன் ஒவ்வொரு மாதமும் ஒரு கசெட் ஆக 3 ஒலிப்பதிவு நாடாவும் இணைவதனால் உங்களை ஓர் ஆங்கில/சிங்கள சூழலிலேயே இருப்பவர்கள் போன்ற இயல்பை உருவாக்கி, உங்களின் வெட்கம், பயப்பாடு ஆகியவற்றை அகற்றி ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி காட்டுகின்றது.

**METHOD OF BOOK KEEPING**
**கடைக் கணக்கு எழுதும் முறை**

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இப் பயிற்சிநெறியை மேற்கொள்வது மூலம் Book-Keepers, Accounts Clerk, Audit Clerks, Bank Clerks, Cost Clerks ஆகிய தொழில்களை பெற்றுக்கொள்ளக் கூடிய தொழில் நுட்பகல்வி நெறியாகும். இப்பயிற்சியை திறம்பட முடிப்பவர்கட்கு நற்சான்றிதழும் வழங்கப்படும்.

**G.C.E. (O/L) முன்னோடி பயிற்சி - 1000 வினாவிடை**
ஆண்டு 5 புலமைப்பரிசில் முன்னோடிப்பயிற்சி – புதியபாடத்திட்டம்

பரீட்சை எடுக்கும் மாணவர்கட்கு சிறப்பு சித்தியை (D) பெற்றக்கொடுக்கும் பாடப்பொழிப்பு, விளக்கம் ஒவ்வொரு பாடத்திற்கும் 1000 வினாவிடை கொண்ட பாடத்திட்டம். ஆண்டு 5 மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கேற்ற முறையில் அதிக புள்ளியை பெற்றுத்தரும் முன்னோடிப் பயிற்சித் திட்டம். பரீட்சையில் சித்திபெறும் அனைத்து மாணவர்களுக்கும் BRIGHT ன் வெகுமதி வழங்கப்படும்.

**இத்தோடு வெளிவந்துவிட்டன**
**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான**

| | |
|---|---|
| ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 4,5 குரிய பாடநூல் 75/= | ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 5 செயல்முறைப் பயிற்சி 60/= |

800 மாதிரி வினா, 500 பொது அறிவு கேள்வி பதில், 250 விவேக கணக்குகள் 9 பாடங்களை உள்ளடக்கிய கேள்வி களுடன் கூடிய மாதிரி வினா நூல் 100/=

(புத்தகங்களை 20/- பெறுமதியான முத்திரை அனுப்பி V.P.P யில் பெற்றுக்கொள்ளலாம்)
மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**
S - 27, FIRST FLOOR, P. O. BOX - 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO - 11. T.P 434770





**அற்புத மலையாள மாந்திரீகம்**

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு-13
T.P. 342463, 342464,344831,344832.
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052-2508, 3093, 3336.
FAX 0094523093 EXT 28



**நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!**

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 505/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 258/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 132/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

| | |
|---|---|
| தினமுரசு வாரமலர் | THINAMURASU VAARAMALAR |
| த.பெ.இல:1772 | P.O.BOX: 1772 |
| கொழும்பு | COLOMBO |

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


## தலைவரை எதிர்க்கும் உறுப்பினர்கள்

## நகரசபைத் தலைவர் பாடு திண்டாட்டம்.

(சஞ்சீவன்)

திருகோணமலை நகரசபையில் உள்ள ரெலோ உறுப்பினர்கள் நகர சபைத் தலைவருக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தியுள்ளனர்.

நகரசபைத்தலைவர் திரு.சூரியமூர்த்தியும் ரெலோ சார்பில் நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமலை நகரில் தனியார் காணிகளில் குடியேற்றம் செய்வதற்கு நகரசபைத் தலைவர் திட்டமிட்டிருந்தார். இதனையறிந்த நகரசபை உறுப்பினர்களான ரெலோ முக்கியஸ்தர்கள் குறிப்பிட்ட காணி உரிமையாளர்களை அழைத்துக்கொண்டு பொலிஸ் நிலையம் சென்றனர்.

நகரசபைத் தலைவர் தனியார் காணிகளில் அத்துமீறி குடியேற்றம் நடத்துவதாக பொலிசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து குடியேற்றத் திட்டத்தை கைவிடுமாறு நகரசபைத் தலைவருக்கு கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ந்கரசபைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு அதிருப்தியாளர்கள் யோசித்து வருகின்றனராம்.

கொண்டுவந்தால் மண்கவ்வுவார்கள் என்று சொல்கிறது நகரசபைத் தலைவர் வட்டாரம்.

இவர்களின் மோதலால் குறிப்பிட்ட காணிகள் யார்கைக்கோ போகப் போகின்றனவே என்று விஷயமறிந்தவர்கள் வேதனை தெரிவிக்கிறார்கள்.

## விளைந்த நெல்லை விற்பதற்கு வசதியில்லை பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராமுகம்

நெல் கொள்வனவு நிலையம் ஒன்றேனும் இல்லாததால் மூதூர் விவசாயிகள் பெரிய கஷ்டத்தை எதிர்நோக்கி வருகிறார்கள். விவசாயப் பூமியான மூதூரில் ஏற்கெனவே இயங்கி வந்த நிலையங்கள் பிரச்சனையான காலங்களில் மூடப்பட்டதால் இந்த நிலைமை தோன்றியுள்ளது.

அரசால் நெல் கொள்வனவுக்கான வசதி ஏற்படுத்தப்படாததால் முதலாளிகள் கொள்ளை இலாபம் பெறும் நிலை உருவாகியுள்ளது. கஷ்டப்பட்டு கடன்பட்டு விளைவித்த நெல்லை குறைந்த விலைக்கு முதலாளிமார்களுக்குக் கொடுத்து விட்டு விவசாயிகள் மேலும் கடன்காரர்களாகியுள்ளனர்.

திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இந்த விடயத்தில் அக்கறை காட்டுகிறார்களில்லையே என விவசாயிகள் குறைபடுகின்றனர். உடனடியாக நெல் கொள்வனவு நிலையம் ஒன்றையேனும் அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி அரசை கேட்டு மகஜரொன்றை கட்டைபறிச்சான் முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு.க.குணநாயகம் அனுப்பி வைத்துள்ளார்.

## சீர் குலைந்துள்ள படகுச் சேவை

திருக்கோணமலை மூதூர் படகுச் சேவையும் சீர்குலைந்துள்ளது. தினசரி மூன்று படகுகள் அடிக்கடி வேலை செய்து கொண்டிருந்த நிலைமை மாறி தற்போது ஒரு படகு மட்டுமே பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளது. ஏனைய இரண்டு படகுகளும் பழுதடைந்துவிட்டனவாம். மூதூர் மக்களுக்கு திருகோணமலையைத் தொடர்பு படுத்தும் பிரதான மார்க்கம் இதுவாகும். இதனால் பயணிகள் கியூவில் கால்கடுக்க நின்றும் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பு கருதி குறிப்பிட்ட அளவு பயணிகள் மட்டுமே படகில் அனுமதிக்கப்படுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புலிகளுக்கு வந்த இரண்டாவது ஆயுதக் கப்பல்



பொதுசன முன்னணி அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இரண்டு தடவைகள் புலிகளுக்கான ஆயுதக் கப்பல் வடக்கே வந்து திரும்பியிருக்கிறது.

முதலாவது ஆயுதக்கப்பல் முல்லைத்தீவுக் கடலுக்கு 24.09.94 இல் வந்து சென்றது. இதுபற்றி ஏற்கனவே எக்ஸ்ரே ரிப்போட்டில் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது ஆயுதக் கப்பல் வந்தது. தமிழ்-சிங்கள புத்தாண்டு தினத்தில்.

போர் தவிர்ப்பு அமுலில் இருந்தமையால் கடலில் அதிக கண்காணிப்பு இருக்கவில்லை.

அது தவிர சித்திரைப் புத்தாண்டு சிங்கள மக்களைப் பொறுத்தவரை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

கடற்படையினரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தில் ரோந்துகளில் ஈடுபடுவதைக் குறைத்துக் கொண்டாட்டங்களில் மூழ்கியிருப்பார்கள்.

ஏப்ரல் 19ம் திகதியைப் புலிகள் தமது காலக்கெடுவின் இறுதிநாளாகக் குறிப்பிட்டிருந்த போதும், மேலும் 'காலக்கெடு' நீடிக்கப்படும் என்றே அரச தரப்புக் கருதியிருந்தது.

எனவே-சூழலைச் சரியாகக் கணக்கிட்டு சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று வடமராட்சிக் கடல் பரப்புக்குள் நுழைந்தது புலிகளது ஆயுதக் கப்பல்.

ஆயுதங்கள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு இரகசிய இடங்களுக்கு கொண்டு செல்லப்படும் பணிகளை புலிகளது தலைவர் நேரடியாக வந்து கண்காணித்துக் கொண்டிருந்தார்.

ஆயுதக் கப்பல் வரும் திகதியையும் உள்ளடக்கியதாகவே புலிகளது காலக்கெடு நீடிப்பு ஏப்ரல் 19ம் திகதி என்று நிர்ணயிக்கப்பட்டது.

இரண்டாவது கப்பல் வந்து சேர்ந்த பின்னர் புலிகளது முக்கிய உறுப்பினர்கள் மத்தியில் உற்சாகம் கரை புரண்டது.

"போர் மூழ்வது நிச்சயம். மூன்றாவது ஈழப்போர் மூண்டால் இங்குள்ள அரச படைகளை சரணடையச் செய்வோம்" என்று புலிகளது முக்கிய பிரமுகர்கள் தமக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்திருந்தார்கள்.

கிழக்கு மாகாணத்தை நோக்கி புலிகளது தலைவரால் அனுப்பப்படவிருந்த புலிகளுக்கும், இரண்டாவது ஆயுதக் கப்பல் வந்து போன பின்னரே ஆயுதங்களும் போதிய ரவைக் கூடுகளும் வழங்கப்புட்டன.

ஏப்ரல் 19 காலக்கெடுவுக்கு முன்னரே கிழக்கு மாகாணத்திற்குச் சென்று சேர்ந்து விடக் கூடியதாக ஆயிரத்திற்கு மேற்பட்ட புலிகள் அனுப்பப்பட்டனர்.

வடக்குக்கும் கிழக்குக்கும் இடையிலான புலிகளது கடல் மூலமான போக்குவரத்து போர் தவிர்ப்புக் காலத்திலும் தடங்கலின்றியே நடைபெற்றுக் கொண்டிருந்தது.

புலிகளது கிழக்கு மாகாணத் தலைவர் கரிகாலன் மட்டக்களப்பில் இருந்து பேட்டி கொடுப்பார். மறுநாளே யாழப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டிருப்பார்.

கடல் வழியான போக்குவரத்து மூலமாகவே கரிகாலனின் பயணம் நடந்தது.

கடலில் கண்காணிப்பு பலமாக இருந்தது. அதனால் புலிகளது ஆயுதக் கப்பல் எப்படி வந்து போயிருக்க முடியும் என்று யாருக்காவது சந்தேகம் வரலாமல்லவா? அதற்காகத்தான் கரிகாலன் விடயத்தைக் குறிப்பிட்டேன்.



# மெல்லத் தலை காட்டும் இனவாதம்!

வடமராட்சியில் வல்வெட்டித்துறையில் மணற்காடு என்றொரு இடம் உண்டு.

இங்கிருந்து கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்ல தயாரான போதுதான் குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் முன்பு கைதுசெய்யப்பட்டனர்.

மணற்காட்டுக்கு சமீபமாகத்தான் புலிகளது இரண்டாவது ஆயுதக்கப்பல் வந்து நங்கூரமிட்டு நின்றது.

ஏப்ரல் 13ம் திகதி நள்ளிரவில் கப்பல் வந்து நங்கூரமிட்டு விட்டதாகத்தான் தகவல். இரவோடு இரவாக பல நூற்றக்கணக்கான பாரிய பொதிகள் படு வேகமாக இறக்கப்பட்டன.

நங்கூரமிட்டு நின்ற கப்பலுக்கு கரும்புலிப் படகுகள் நான்குக்கு மேற்பட்டவை பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தன.

தற்செயலாக கடற்படையினர் ரோந்து வந்தால் கப்பல் தரித்து நின்ற பகுதிக்கு வருவதற்கு முன்னரே இடையில் மடக்கி மோதி வெடிக்கத் தயாராக கரும்புலிப் படகுகள் கடலில் சுற்றிக் கொண்டிருந்தன.

ஏப்ரல் 14ம் திகதி குறிப்பிட்ட ஆயுதக் கப்பல் வடமராட்சிக் கடலை விட்டு விலகி சர்வதேசக் கடற்பரப்பில் பிரவேசித்து விட்டது.

எவ்வகையான ஆயுதங்கள், ஆயுதத் தளபாடங்கள் தருவிக்கப்பட்டன என்பதை அறியமுடியவில்லை.

சாதாரண நாட்களிலேயே கடல் பரப்பு முழுவதையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது கஷ்டமான காரியம். அப்படியிருக்க கொண்டாட்டக் காலங்களில் உள்ள நிலமை எப்படியிருக்கும் என்று ஊகிக்க முடியுமல்லவா?

□□

கிழக்கில் தொடரான தாக்குதல்கள் மூலம் புலிகளது கைகள் மேலோங்கியுள்ளன.

பிரபாகரனால் நேரடியாகத் தெரிவு செய்து அனுப்பப்பட்ட தாக்குதல் பிரிவுத் தலைவர்கள் அணிகளை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தை விடுவிக்கவும் புலிகளது தலைமையைப் பாதுகாக்கவும் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் பலியாக்கப் படுகிறார்கள் என்றொரு அதிருப்தி மெல்லப் பரவியிருந்தது.

அந்த அதிருப்தியை உடைத்துப் போடவே கரிகாலனுக்கு முக்கிய பொறுப்பைக் கொடுத்தார் பிரபாகரன்.

இப்போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் கிழக்கில் நின்று போரிட அனுப்பப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் பிரதேசவாதம் எழாது தடுப்பதோடு, கிழக்கில் புலிகளுக்கு ஒரு பிடியும் கிடையாது என்ற அரசின் பிரசாரத்தையும் முறியடிக்கும் முன் முயற்சியையும் பிரபாகரன் மேற்கொண்டுள்ளார்.

வடக்கில் உள்ள தமது படை முகாம்களை மேலும் விஸ்தரிக்க வேண்டிய தேவை படையினருக்கு இருக்கிறது.

கடலோர முக்கிய பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய அவசியமும் படையினருக்கு இருக்கிறது.

அப்படிச் செய்தால்தான் முகாம்களுக்கான விநியோகத்தை தொடர்ச்சியாகப் பேண முடியும்.

ஆனால், அதற்கெல்லாம் பாரிய படைபலத்தை பிரயோகிக்க வேண்டும்.

முகாம்களில் இருந்து முன்னேறி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை செல்வதுகூட பிரச்சனையில்லை.

முன்னேறிச் சென்று கைப்பற்றும் பகுதிகளை பாதுகாத்து வைத்திருப்பதுதான் பாரிய பிரச்சனை.

முன்னேறி வந்து முகாம் அமைக்கும் வரை விட்டுக் கொடுத்துவிட்டு, எதிர்பாராத தருணத்தில் புலிகள் கெரில்லாத் தாக்குதல் நடத்தலாம்.

முன்னேறிச் செல்லும் படையணியைத் தாக்குவதை விட முகாம் அமைத்து தங்கும் படைகளைத் தாக்குவதால் புலிகளுக்கு இரண்டு வகையான லாபம்.

ஒன்று: எதிர்பாராத தாக்குதல் நடத்துவதால் படையினரது பதிலடி நடவடிக்கையில் திட்டமிட்ட வேகம் இருக்காது.

இரண்டு: நேரடி மோதலில் என்றால் ஆயுதங்களோடு படையினர் பின்வாங்கிச் செல்வர். திடீர் முகாம் தாக்குதல் என்றால் படையினர் ஆயுதங்களைக் கைவிட்டுத் தப்பிச் செல்ல வேண்டியிருக்கும். அந்த ஆயுதங்கள் புலிகளுக்கு லாபம்.

அதுமட்டுமல்ல, படையினரின் முன்னேறிச் செல்லும் நடவடிக்கைகளில் குறுக்கிடும் போது புலிகளுக்கு ஏற்படும் இழப்பைவிட முகாம் தாக்குதல்களில் ஏற்படும் இழப்புக்கள் குறைவாகவே இருக்கும்.

புலிகளது இத்தகைய யுத்த தந்திரத்தை எதிர்கொள்ள வேண்டுமானால் படை பலம்-குறிப்பாக-ஆட்பலம் இராணுவத் தரப்புக்கு அவசியம்.

தற்போதுள்ள ஆட்பலத்தை வடக்கில் ஒன்று குவிக்கலாம் என்றால் அதற்கும் வழியில்லை.

கிழக்கில் தமது நிலைகள் பறிபோவதைத் தடுக்க வேண்டிய நிலை படைகளுக்கு ஏற்பட்டுவிட்டது.

யுத்தப் புயல் இப்போது வடக்கில் இருந்து நகர்ந்து கிழக்கில் மையம் கொண்டுள்ளது.

இதுதவிர எல்லைக் கிராமங்களில் சிங்கள மக்களைப் பாதுகாக்கும் பணியும் மேலதிகமாகச் சேர்ந்துள்ளது.

ஏற்கனவே திம்புலாகல தேரர் கொலை விடயம் அரசுக்கு தலைவலியாக வந்திருக்கிறது.

இக்கொலைக்கு யார் காரணம் என்று இதுவரை கண்டறியப்படவில்லை.

என்றாலும் ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் ராஜ உபசாரம் பெற்றிருந்தவர் அந்தத் தேரர்.

திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு மறைந்த காமினி திசாநாயக்காவின் பக்க பலத்தோடு பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு பிரபலமான மதகுரு அவர்.

அவர் கொல்லப்பட்ட விடயத்தை அரசியலாக்க முனைந்து பாராளுமன்றத்தில் பிரச்சனையும் கிளப்பியிருந்தது ஐ.தே.கட்சி.

இதுதவிர குடியேற்றத் திட்டங்களில் இருந்த சிங்கள மக்களும் புலிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறான சம்பவங்கள் தொடரும் போது புலிகள் மீதான வெறுப்பு அரசு மீதான அதிருப்தியாகவும் விரிவடையலாம். எனவே எல்லையோர கிராமங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான காரணங்களால் ஒருமுகப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை வடக்கில் மேற்கொள்வதில் அரசுக்கு சிரமங்கள் இருக்கின்றன.

தொண்டமானாறு வரை முன்னேறிய இராணுவத்தின் நோக்கம் வடமராட்சியைக் கைப்பற்றுவதுதான்.

வடமராட்சியெங்கும் அரசால் ஊரடங்கு உத்தரவும் போடப்பட்டது.

அதே சமயம் கிழக்கில் நடந்த பாரிய தாக்குதல்கள் படையின் உயர் மட்டத்தின் கவனத்தைத் திருப்பிவிட்டது.

ஆயினும், கிழக்கில் என்ன நடந்தாலும் புலிகளது முதுகெலும்பான பிரதேசம் என்று கருதப்படும் வடக்கில் பாரிய நடவடிக்கையொன்றை அரசு மேற்கொண்டேயாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

அதன்மூலம் 'யுத்தத்தில் நாம் ஒன்றும் சீரியஸ் இல்லாமல் இருக்கவில்லை. பலத்த அடி கொடுத்திருக்கிறோம் பாருங்கள்' என்று தென்னிலங்கையிலும் வெளியுலகிலும் சொல்லிக் கொள்ள அரசு நினைக்கும்.

தன்து உறுதியையும், இராணுவத்தின் நம்பகத்தன்மையையும் வெளிப்படுத்த வடக்கில் பாரிய தாக்குதல் ஒன்று நடத்துவதுதான் அரசின் திட்டம். ஆனால் அதனை எவ்வாறு நடத்துவது? பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிய கதையாக இல்லாமல் இருக்க வேண்டுமே என்பதுதான் திட்டம் ஒருபுறமும் தயக்கம் மறுபுறமும் என்ற தற்போதைய நிலைக்குக் காரணம்.

**யுத்த புயலை கிழக்குக்கு நகர்த்தியுள்ளது மூலம் அரசும் படைகளும் ஒரே இலக்கு நோக்கித் தமது முஷ்டியை மடக்கி பலம் கொண்டு குத்தமுடியாமல் செய்திருப்பது பிரபாகரனின் யுத்த தந்திரம்.**

தெற்கில் இனவாத சக்திகள் மீண்டும் தலைதூக்க முற்படுவதை அவதானிக்க முடிகிறது.

புலிகள் ஏமாற்றிவிட்டார்கள் என்று கதையை ஆரம்பிப்பது; பின்னர் தமிழர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்று கதையை முடித்து வைப்பது என்பதுதான் இனவாத உயிர்ப்பின் அடிப்படை.

நாட்டின் பிரதான தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இனவாதத்தைக் கண்டித்தே வருகிறார்கள்.

ஆனால், தமது கட்சிகளுக்குள் மெல்ல தலைதூக்கும் இனவாதம் பற்றி அவர்கள் எந்தளவு அக்கறையோடு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க இனவாதம் குறித்து சாடும் போதே, அவரது கட்சிக்குள் இருந்த திலக் கருணாரத்ன போன்றவர்கள் இனவாதத்தை உரத்துப் பேசுகிறார்கள்.

வரலாறுகளை திரிபுபடுத்தி தமிழர்கள் இந்த நாட்டிற்குச் சொந்தக்காரர்கள் அல்ல என்று நிரூபிக்க திலக் கருணாரத்ன போன்றவர்கள் ஒற்றைக் காலில் நிற்கிறார்கள்.

'ஹெலஉறுமய' என்னும் அமைப்பு முன்னர் சுதந்திரக் கட்சியில் ஆரம்பித்து பின்னர் ஐ.தே.கட்சியோடு இரண்டறக் கலந்தது. அந்த அமைப்பின் முக்கிய தூண் திலக் கருணாரத்ன.

இதே போல பொதுஜன முன்னணியின் தென் மாகாண முதல்வரும் 'இது ஒரு பௌத்த நாடு' என்று பேசியதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

தென் மாகாண சபையை பொதுஜன முன்னணி கைப்பற்றிய போது அதனை இன வாதத்தின் மீதான வெற்றி என்று அப்போது பலரும் வர்ணித்திருந்தனர்.

தென் மாகாண முதல்வர் பகிரங்கமாக தமிழர்களுக்கு எதிராகப் பேசவில்லை. ஆனால் இந்த நாடு குறித்து அவர் எவ்வாறான கண்ணோட்டம் கொண்டிருக்கிறார் என்பது முக்கியமானது.

இந்த நாடு பௌத்த நாடுதான்,

**நாரதர்**

ஆனால் தமிழர்களுக்கும் உரிமை கொடுக்கலாம் என்ற கருதுகோளும் ஒரு வகையில் இன மேலாதிக்க உணர்வுதான்.

இது தவிர தற்போதைய யுத்தத்தில் படையில் சேர் பௌத்த மதகுருமார் முன்வந்துள்ளனர். தாம் என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுப்பது அவர்களது உரிமை.

ஆனால், பௌத்த மதகுருமார் படையில் சேர முன்வந்துள்ளமையை ஒரு பிரசாரமாக்குவது யுத்தத்துக்கு வேறுமாதிரியான அர்த்தங்களை ஏற்படுத்திவிடலாம்.

பிரச்சனைகளுக்கு இனவாத முலாம் பூசப்படுவதால் ஜனாதிபதிக்கு எதிரான பிரசாரமாகவும் பின்நாளில் மாறலாம். ஏனெனில், சமாதானம் பற்றி அவர்தான் உரத்துப் பேசியவர் என்பதால் இனவாத சக்திகளை ஒரு கருவியாக்கி அவரது அரசியல் செல்வாக்கை கிள்ளிவிடும் முயற்சியும் நடக்கலாம்.

ஜனாதிபதி எவ்வாறு நிலமையைக் கையாளப் போகிறார் என்று கவனமாகக் கவனிக் கிறார்கள் அரசியல் அவதானிகள்.

## அதிரடி அய்யாத்துரை



கனடாவில் பிரஜா உரிமை பெற்ற தமிழர் ஒருவர் வந்திருக்கிறார். சீருடையினர் மடக்கி விசாரிச்சவையாம். 'நான் கனடா சிற்றிசன்' எண்டு அவர் சொன்னவராம். அதுக்கு சீருடையினர் சொன்ன பதில்: "நீர் கனடா சிற்றிசனாக இருக்கலாம்; ஆனால் தமிழர்தானே. அதாலை நடவும் ஸ்ரேசனுக்கு." கனடா சிற்றிசனும் கம்பிகளுக்குப் பின்னால்தான்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெண்கள் கல்லூரி அதிபர் ரெண்டு எழுத்தார் கல்லூரிக்குள் பிரசாரம் செய்ய மறுப்புத் தெரிவித்துப் போட்டாவாம். மருந்தாகும் மரம் ஒன்றின் பெயருடன் சம்பந்தப்பட்ட பெண்கள் கல்லூரியாம் அது. அனுமதி மறுத்த விடயத்திலை ரெண்டு எழுத்தார் கோபத்திலை இருக்கிறதாகத் தகவல்.

பச்சை உடைத் தரப்புக்கு சாதாரண நிலையில் சேர போட்டி போட்டு ஆட்கள் வாறது உண்மைதான். ஆனால் உயர் நிலைகளுக்கு தகுதியான லெவல் உள்ளவை சேர முன்வருகினம் இல்லையாம். வேறு வேலைகளுக்கு போகலாம் எண்டு நினைக்கினமாம். அது ஒரு புறமிருக்க, உயர் நிலைக்கு வரக் கற்றுக் கொண்டிருந்த பலர் கூட நழுவித் தலைமறைவாகிற விவகாரம் பச்சை உடை உயர்மட்டத்துக்கு கவலை கொடுக்குதாம்.

'வோய்ஸ் ஒஃப் அமெரிக்கா' விடயத்திலை தமிழ் கட்சிகள் அனைத்தும் வெகுஜன சபையில் ஆதரவளிக்க மறுத்துப் போட்டினமல்லோ. 'இடது' வட்டாரத்தில் வரவேற்பாம். இப்படியே பொது விசயங்கிலும் ஒன்றுபட்டா எவ்வளவு நல்லாயிருக்கும். என்ன நான் சொல்லுறது சரிதானே.

கைது விடயங்களில் 'ரிப்போட்' வரவேணும் எண்டு சொல்லுகினம். பிறகு 'ரிப்போட்' வந்தாலும் அதை இதைச் சொல்லி இழுக்கினம். அலையுற சனத்துக்கு வாழ்க்கை வெறுக்குது. யார் வரம் கொடுத்தாலும் பூசாரிமார் மனம் வைக்க வேணுமல்லோ.

பச்சை அணிக்குச் சார்பாக பிரபல பத்திரிகை நிறுவனங்கள் வேலை செய்யுது எண்டு அதிகார மட்டத்தில் முணுமுணுப்பாம். இதே மாதிரி முன்பு பச்சை அணியும் முணுமுணுத்தது பாருங்கோ. அதென்னவோ யார் அதிகாரத்திலை இருந்தாலும் இப்படி ஒரு பிரச்சனை வந்து தொலையுது.

கட்டின புருசனைப் பாம்பு கடிச்சப்போட்டுது. மூன்று பிள்ளைகளும் உண்டு. குடும்பப் பொறுப்பு மனைவியின் தலையில். வெளிநாடு போகலாம் எண்டு தலைநகருக்கு வந்தவராம். பஸ்சில் போகும் போது செக்கிங்கில் மாட்டினவராம். நிலமையை எடுத்துச் சொல்லியும் அழைத்துச் சென்று தடுத்துவைச்சவையாம். ஒரு குற்றவாளி தப்பக் கூடாது என்பதற்காக நூறு நிரபராதிகளை சிக்க வைக்கிறது சரியோ யுவர் ஆனர்? யார் கேட்கிறது.

ரெண்டு எழுத்தார் பயணிகளையும் சேர்த்து தாக்குதல் நடத்துறதாலை பஸ்சிலை பயணம் செய்யுற ஆட்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் பயணம் நடத்த வேண்டியிருக்கிறது, தாக்குதல் நடத்த வேணும் எண்டதற்காக குடி மக்களுடன் சேர்த்துக் குறிவைக்கலாமோ? கேட்டால் கோபம் வருமாக்கும்.

திருவான மலை வெகுஜனப் பிரதிநிதி பாரதூர சம்பவங்கள் நடக்கும்போது அந்தப் பக்கமே போறது கிடையாதாம். 'யாரை நம்பி நாம் பிறந்தோம் போங்கடா போங்க' எண்டு திருவாளர் பொதுஜனம் பாடவேண்டியதுதானாக்கும்.

தொலைக்காட்சி நிறுவனம் ஒண்டு தமிழ் படம் போடுகிறது எண்டு சொல்லிக் கொண்டு மறு நிறுவனம் போட்ட படங்களைத் திருப்பிப் போடுது. அல்லது தாங்கள் முன்னர் போட்ட படங்களையே திருப்பிப் போடுது. தமிழ் படங்களுக்கென்ன பஞ்சமோ?

"இரவல் புடவையில் கொய்யகம் எதற்கு? அய்யாத்துரையார் தானாக ஒரு ஹைக்கூ கவிதை எழுதக்கூடாதோ" எண்டு கடிதம் போட்டவர்கள் மீது பழியைப் போட்டுவிட்டு நான் எழுதிப் பார்த்த ஒரு ஹைக்கூ.

அனுபவம் தேவையில்லை
அனுமதி இலவசம்
மரணம்!

என்ன திருப்தியோ - அல்லது திட்டலோ?

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



இந்திரா காந்தி

## தாக்குதல்

**1984** ஏப்ரல் 10ம் திகதி மாலையில் யாழ் குடா நாடெங்கும் அரசாங்கம் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் இருந்த பொலிஸ் நிலையத்திற்குள் புகுந்தனர் புலிகள்.

திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத பொலிஸார் பின் வாங்கித் தப்பிச் சென்றனர்.

அதன் பின்னர் பொலிஸ் நிலையம் இருந்த கட்டிடத்திற்குப் புலிகள் தீவைத்தனர்.

போராளிகளது நடவடிக்கைகள் நாளும் பொழுதும் வளர்ந்து வருவதை அவதானித்த ஜே.ஆர். அரசு அடக்கு முறைகளை அதிகப்படுத்தியது.

யாழ்குடாநாட்டில் இராணுவம் வைத்ததே சட்டம் என்றாகியது.

யாழ் அரசாங்க அதிபரைவிட வட மாகாண இராணுவ பிரிகேடியர் அதிகாரமுள்ளவராக விளங்கினார்.

இரவு நேரங்களில் யாழ் குடாநாட்டு வீதிகளில் மக்கள் நடமாடவே அஞ்சினார்கள்.

ஆனையிறவு, பலாலி இராணுவ முகாம்கள் வட மாகாணத்தின் ஆட்சி மையங்களாக மாறியிருந்தன.

ஆயுதமேந்திய இயக்கங்களை ஒழித்துக்கட்ட ஜே.ஆர். அரசு வெளிநாட்டு உதவிகளை நாடியது.

போராளிகளுக்கு இந்தியா உதவியதால் ஜே.ஆர். அரசு அமெரிக்காவின் உதவியைக் கேட்டது.

அமெரிக்காவின் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுக் குழுவின் தலைவராக இருந்த

சீனா-பாகிஸ்தான் போன்ற நாடுகளும் இலங்கைக்கு உதவ முன்வந்தன.

பாதுகாப்பு அமைச்சராக இருந்த அத்துலத் முதலிக்கு ஒரு யோசனை வந்தது.

இஸ்ரேலிய உளவுப் பிரிவான 'மொஸாட்' அழித்தொழிப்புக்களில் பெயர் பெற்றது.

பாலஸ்தீன விடுதலைக்கு போராடிய பல தலைவர்களை வேட்டையாடிப் பிரபலம் பெற்றிருந்தது மொஸாட்.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.யும் மொஸாட்டும் அண்ணன், தம்பிகள் போல அப்போது இணைந்து செயற்பட்டு வந்தன.

## பயங்கரமான யோசனை.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. இலங்கை அரசுக்கு உதவி செய்ய முன்வந்திருந்தது.

முன்வந்தது மட்டுமல்லாமல் ஒரு பயங்கரமான யோசனையையும் சி.ஐ.ஏ. தெரிவித்தது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

50 ஆயிரம் தமிழ் இளைஞர்களை ஒழித்துக்கட்டினால் தீவிரவாதத்தை 'ஃப்பூ' என்று ஊதி அணைத்திடலாம் என்பதுதான் சி.ஐ.ஏ. சொன்ன யோசனை.

சி.ஐ.ஏ. நெருக்கமாகிவிட்டது; இனி மொஸாட்டும் வந்துவிட்டால் போராளிகளை ஒழித்துவிட்டது மாதிரித்தான் என்று கனவு கண்டார் அத்துலத்முதலி.

மொஸாட்டும் உதவ முன்வந்தது. கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் 'இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு' இயங்கும் என்று அறிவிக்கப்பட்டது.

சமூகங்களுக்கிடையில் தீவிரமான எதிர்ப்பு இருந்து வருகிறது.

எம்மைப் பொறுத்தவரை எமது கடலெல்லையோரத்தில் இருக்கும் சிறிலங்காவில் அந்நியர் தங்க இடமளிக்கப்படுவது எமக்கெல்லாம் ஒரு பயமுறுத்தலாகும்.

**கேள்வி:** இஸ்ரேல், லெபனான் பிரச்சனை போல இலங்கையிலும் உருவாகி வருவதாக சிலர் கூறுகின்றனரே; நீங்கள் அதை நம்புகிறீர்களா?

**இந்திரா:** இஸ்ரேலியர்களை சிறிலங்கா இறக்குமதி செய்திருப்பதன் உண்மையான நோக்கம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. பயங்கரவாதிகளைச் சமாளிக்கவே அவர்களை தாங்கள் வைத்திருப்பதாக ஜெயவர்தனா கூறுகிறார்

ஆனால் முன்பு நடைபெற்றது போல பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

பிரதமர் இந்திராவின் கருத்து இந்தியாவின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டியது.

கூட்டணி கூறிய காரணம்.

## நீலன்மீது கண்டனம்

1983ல் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீதர் திரையரங்கம் முன்பாக மேதினக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

ஈழ மாணவர் பொது மன்றம் (G.U.E.S) நடத்திய அந்த மே தினக் கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் மு.டேவிற்சன். தனது பேச்சில் டேவிற்சன் ஒரு கேள்வி எழுப்பி விட்டு பதில் சொன்னார், அது இதுதான்;

"யார் இந்த நீலன் திருச்செல்வம்?"

அமெரிக்க சி.ஐ.ஏயின் ஆள்தான் இவர்!"

1984 இல் புலிகள் தமது "விடுதலைப் புலிகள்" பத்திரிகையில் நீலன் திருச்செல்வம், ஏ.ஜே.வில்சன் போன்றோர் குறித்து இப்படி எழுதியிருந்தனர்;

"அமெரிக்கா சார்பான சி.ஐ.ஏ. உளவு ஸ்தாபனத்துடன் தொடர்புடைய தமிழ் அரசியல்வாதிகள், பிரமுகர்கள் இருந்து வருவது தெரிந்த விசயமே. அரசியல் யாப்பு நிபுணர்களாக, சட்ட ஆலோசகர்களாக,

நடவடிக்கையில் ஒரு கட்டமாக-தகவல் சேகரிப்பிலும் பாதுகாப்பு படையினரும் பொலிசாரும் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

1984 மே மாதம் இரண்டாம் திகதி, பருத்தித்துறை பஸ்நிலையத்தில் சைக்கிள்களில் வந்திறங்கினார்கள் இளைஞர்கள்.

அவர்கள் யாரையோ தேடினார்கள். தேடப்பட்டவர் பஸ்ஸில் ஏறத் தயாராகிக் கொண்டிருந்தார்.

இளைஞர்களில் ஒருவர் அவரை நோக்கிச் சுடத் தொடங்கினார். பஸ் நிலையத்தில் காத்திருந்த மக்கள் ஓடத் தொடங்கினார்கள்.

சுடப்பட்டவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது பெயர் நவரத்தினம். யாழ் விசேட பொலிஸ் பிரிவில் சார்ஜன்டாக இருந்தவர்.

இயக்கங்கள் தொடர்பான தகவல் சேகரிப்பில் சிறப்பாக செயற்பட்டதால் சப்-இன்ஸ்பெக்டர் பதவி அவருக்குக் கிடைக்க இருந்தது.

1984 மே 4ம் திகதி இன்னுமொரு




1984இல் ஆனந்த விகடன் வெளியிட்ட கார்டூன்

## வந்து குவிந்த வெளிநாட்டு உதவிகள்




1984இல் ஐலன்ட் வெளியிட்ட கார்டூன்.

# அத்துலத்முதலியின் அபாரயோசனைகள்



அற்புதன் எழுதுவது

அரசியல் தொடர்

திரு. ஜோசப் அடாப்பூவின் தலைமையில் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று இலங்கை வந்தது.

அதனையடுத்து அமெரிக்காவின் பிரதி உதவி வெளிநாட்டமைச்சர் திரு.ஹோவர்ஹட் பிஷாபர் 21.2.84 அன்று இலங்கைக்கு விஜயம் செய்தார்.

இலங்கை அரசுக்கு 7 கோடியே 38 இலட்சம் டொலர்களை உதவியாக வழங்குவோம் என்று ஹேவர்பட் பிஷாபர் உறுதியளித்தார்.

இந்த அறிவிப்பு தமிழ் மக்கள் மத்தியில் அமெரிக்காவுக்கு எதிரான உணர்வுகளை ஏற்படுத்தியது.

பிரிட்டிஷ் அரசாங்கமும் இலங்கைக்கு உதவ முன்வந்தது.

பிரிட்டிஷ் அரசுக்கு சொந்தமான 'ஷோட்ஸ் பிரதர்ஸ்', பிரிட்டனிலுள்ள தனியார் நிறுவனமான ஹெறாட்ஸ்பர் ஆகியவற்றிடமிருந்து பல கோடிக் கணக்கான ரூபாய்களுக்கு ஆயுதக் கொள்வனவு மேற்கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டது.

20 கவச வண்டிகள், இருட்டில் தெளிவாகப் பார்த்துச் சுடக்கூடிய தானியங்கித் துப்பாக்கிகள், உப இயந்திரத் துப்பாக்கிகள் (S.M.G), எளிய இயந்திரத் துப்பாக்கிகள் (L.M.G), வலுமிக்க கைக் குண்டுகள், றிவோல்வர்கள், பிஸ்டல்கள், ஆகியவை அரச படைகளுக்காக தருவிக்கப் பட்டன.

## மொஸாட்டும் வந்தது.

மனித உரிமை மீறல்களுக்கு பெயர் பெற்ற நாடாக அப்போதிருந்தது தென்னாபிரிக்கா. கறுப்பின மக்களை காலடியில் போட்டு மிதித்துவைத்துக் கொண்டிருந்தது.

தென்னாபிரிக்காவின் நிறவெறியரசு மீது நாகரீக உலகம் காறி உமிழ்ந்து கொண்டிருந்தது.

ஜே.ஆர். அரசு அந்தத் தென்னாபிரிக்கா அரசோடு கைகுலுக்கிக் கொண்டது. ஆயுத உதவியும் கோரியது.

தென்னாபிரிக்காவும் உதவ முன்வந்தது.

1970இல் பதவியில் இருந்த சிறிமா அரசு இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்வதாக அறிவித்திருந்தது.

உறவை முறித்துக் கொண்டதோடு நில்லாமல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் உத்தியோக பூர்வமாக அங்கீகரித்திருந்தார், அப்போது பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா.

14 ஆண்டுகள் கழித்து 1984 இல் இஸ்ரேலுடன் இனிய உறவை ஆரம்பித்தது ஜே.ஆர். அரசு.

ஜே.ஆர். அரசின் நடவடிக்கையை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி கண்டித்தது.

"இஸ்ரேலியர்களை வரவழைத்தது அரபு நாடுகளின் முகத்தில் அடித்தது போன்ற செயல்" என்று சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

சவுதி அரேபியா, லிபியா, சிரியா, ஈரான், ஜோர்தான் போன்ற நாடுகள் கடும் ஆட்சேபம் தெரிவித்திருந்தன.

வடக்கு-கிழக்கில் முஸ்லிம் மக்கள் இஸ்ரேலியர் வருகைக்கு எதிராக ஆர்பாட்டங்களை நடத்தினார்கள்.

போராட்டம் நடத்திய முஸ்லிம்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு வேடிக்கை பார்த்தது ஜே.ஆர் அரசு.

## இந்திரா பேட்டி

இலங்கையில் அந்நிய சக்திகளின் வருகை இந்தியாவை விழிப்படையச் செய்தது.

அப்போது இந்தியப் பிரதமராக இருந்தவர் இந்திரா காந்தி.

ஃபிரான்சின் தலைநகரான பாரிஸில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் ஒன்று 'லீ பிகாரோ'.

அந்தப் பத்திரிகையின் சிறப்பு நிருபர் இந்தியப் பிரதமர் இந்திராவைப் பேட்டி கண்டார். அதில் ஒரு பகுதி இது;

**கேள்வி:** கொழும்பில் அமைக்கப் பட்டுள்ள இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு ஒரு தொல்லை என்று கருதுகிறீர்களா?

**இந்திரா:** இஸ்ரேலியப் பிரிவைக் கொழும்பில் புகுத்தியது சம்பந்தமாக இலங்கையில் உள்ள பல்வேறு

இதனால் எல்லாம் ஜே.ஆர். ஒன்றும் அசந்துவிடவில்லை. ஜே.ஆர் என்ன கூறினார் தெரியுமா? அவர் கூறியது இதுதான்.:

**"பயங்கரவாதிகளை அழிப்பதற்கு எந்தப் பேய் பிசாசுகளின் உதவியைப் பெறுவதற்கும் நாம் தயார்"**

## கூட்டணியின் நிலை

இந்த வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ன செய்து கொண்டிருந்தது என்று கேள்வி வரும்.

1978ல் அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சின் விருந்தினராகச் சென்றவர் அமிர்தலிங்கம்.

அமெரிக்காவின் தீவிர விசுவாசி என்று இயக்கங்களால் கூறப்பட்ட நீலன் திருச்செல்வத்துக்கு கட்சியில் இடமளித்தவர் அமிர்தலிங்கம்.

தமிழரசுக் கட்சி தலைவர்களில் ஒருவராக இருந்த திருச்செல்வத்தின் மகன்தான் நீலன் திருச்செல்வம்,

தமிழர் போராட்டம் எதிலும் ஈடுபடாமல் அடிபடாமல், உதைபடாமல், சட்டை கசங்காமல் கூட்டணிக்குள் இடம்பிடித்தவர் நீலன் என்று விமர்சிக்கப்பட்டது.

அரசியல் சட்ட அறிவு இருக்கிறது என்பதுதான் நீலனைக் கட்சிக்குள் சேர்க்க

ஜெயவர்தனாவின் நண்பர்களாக இவர்கள் இயங்குகிறார்கள்.

இவ்வாறான இனத்துரோக சக்திகளின் செயற்பாடுகள் பற்றி விடுதலை அமைப்புக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்."

இவ்வாறான பின்னணியில் கூட்டணியும் அமெரிக்க சார்பானதாகவே தமிழ் போராளி அமைப்புக்களால் கண்டிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்த நேரத்தில் ஒரு தகவல்: அமெரிக்க சி.ஐ.ஏ. உளவு நிறுவனத்தின் சின்னமும் கழுகு.

அமெரிக்க, இஸ்ரேலிய உளவு நிறுவனங்களோடு நல்ல நட்பும், அபிமானமும் கொண்டிருந்தவர் அத்துலத் முதலி.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் தனிக் கட்சி தொடங்கினார் அல்லவா அத்துலத் முதலி? அப்போது தனது கட்சியின் சின்னமாக அவர் விரும்பியிருந்தது கழுகுச் சின்னம்.

தமது கட்சிப் பத்திரிகைக்கும் இராஜாளி (கழுகு) என்றுதான் பெயர் வைத்தார்கள் அதுலத் முதலி அணியினர்.

பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது அத்துலத் முதலி போட்டிருந்த புத்திசாலித்தனமான திட்டங்களில் ஒன்று கூட்டணியைப் பலப்படுத்துவது.

ஏன் பலப்படுத்த வேண்டும்? அவரே அதற்கான விளக்கமும் சொல்லியிருந்தார். அது இது தான்;

**"மிதவாதிகள் பலவீனமாகிவிட்டார்கள். தீவிரவாதிகள் பலமாக இருப்பதாலேயே கூட்டணியினர் எம்மோடு அரசியல் தீர்வுக்கு வரத் தயக்கம் காட்டுகிறார்கள். நாம் இப்போது செய்ய வேண்டியது, தீவிர வாதிகளை பலவீனப்படுத்திவிட்டு மிதவாதிகளைப் பலப்டுத்துவதுதான்."**

## வந்தனர் - கண்டனர்

தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டும்

பொலிஸ் உத்தயோகஸ்தர் யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் உள்ள மீசாலை என்னுமிடத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்..

கான்ஸ்டபிள் சுப்பிரமணியம் என்பது அவரது பெயர். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றியவர்.

**இவர் ஏன் சுடப்பட்டார்.**

புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர் சாள்ஸ் அன்ரனி (சீலன்.)

1983 ஜூலை 15ம் திகதி சாள்ஸ் அன்ரனியும், அருள் நாதன் (ஆனந்தன்) என்னும் போராளியும் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டனர்.

திடீர் சுற்றிவளைப்பு. தப்பியோடிய போது படையினரின் துப்பாக்கிகள் சீறின. சீலனின் நெஞ்சில் ரவைகள் பாய்ந்தன.

இனியும் தப்பும் முயற்சி சாத்தியமில்லை என்றுணர்ந்த சீலன் ஒரு முடிவுக்கு வந்தார்.

தன்னோடு ஓடிவந்த சக போராளியிடம் சீலன் கூறினார்,

**"என்னைச் சுடடா-சுடு"**

அந்தப் போராளி தயங்கினார். சீலன் விடவில்லை. வற்புறுத்தினார். இராணுவத்தினர் நெருங்கிக் கொண்டிருந்தனர்.

சீலனின் தலையில் துப்பாக்கியால் சுட்டார் அந்தப் போராளி.

அதேசமயம் ஆனந்தன் மீதும் இராணுவத்தினரின் துப்பாக்கிகள் ரவைகளைப் பொழிந்தன.

சீலனும், ஆனந்தனும் உயிரிழந்தனர்.

1983 ஜூலை 15ல் நடந்தது அது. சீலனும் ஆனந்தனும் மீசாலையில் தங்கியிருந்த வீடுபற்றிய தகவலைத் திரட்டிக் கொடுத்தவர்தான் கான்ஸ்டபிள் சுப்பிரமணியம்.

*(தொடர்ந்து வரும்)*

# காரெத்தின் கரத்தை கைப்பற்ற விரும்பாத ஆட்சியாளர்கள்

அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் திரு.காரெத் இவான்ஸ் கடந்தவாரம் கொழும்புவந்து சென்றிருந்தார்.

ஆசியப் பிராந்தியத்தில் அவுஸ்திரேலியாவின் ஒத்துழைப்பை அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகளை ஆராய்வதாக திரு.காரெத்தின் சுற்றுப் பயணம் விளங்கியிருந்தது.

திரு.காரெத் இவான்ஸ் தமது சுற்றுப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அவுஸ்திரெலியாவில் இருந்து கருத்து வெளியிட்ட போது இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மத்தியஸ்தம் வழங்குவதில் தமக்குள்ள ஆர்வத்தை வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து கொழும்பு வந்து 24 மணி நேரம், அதாவது ஒரு நாள் மட்டுமே தங்கியிருந்த போதிலும் இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக இலங்கையின் பல்வேறு அரசியல் பிரமுகர்கள், மற்றும் முக்கியஸ்தர்களைச் சந்தித்து திரு.காரெத் உரையாடியிருந்தார்.

அவுஸ்திரேலியா மட்டுமல்ல உலக நாடுகள் பலவும் இன்றைய நிலவரம் குறித்துப் பெரிதும் கவலை வெளியிட்டிருந்தன. ஆனால் இலங்கையில் இந்த சர்வதேச அனுதாபங்கள் மற்றும், சமரச முயற்சிக்கான ஒத்துழைப்பு ஆகியன உதாசீனம் செய்யப்பட்ட தன்மையே காணப்படுகின்றது.

திரு.காரெத் இவான்ஸ் ஒரு சர்வதேச கீர்த்தி பெற்ற இராஜதந்திரி என்று வர்ணிக்கப்பட்டுள்ளார். கம்போடியப் பிரச்னையில் கூட இவர் பொதுநலவாய அமைப்பினூடாக சிறந்த இராஜதந்திரப் பங்களிப்பை வழங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் இன்று, நேற்று மட்டும் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வில் ஆர்வம் காட்டவில்லை, முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்திலிருந்தே அவுஸ்திரேலியா இலங்கைப் பிரச்னையில் தனது கரிசனையை வெளியிட்டு வந்திருந்தது.

ஆனால் அன்றைய ஆட்சியாளர்கள் எவ்வகையிலும் வெளிநாட்டு உதவியுடன் வீடு தேடி உதவி செய்யவந்தவரையும் திருப்பி அனுப்பி வைத்த பாங்கிலேயே சந்திரிகா ஆட்சியாளர்கள் நடந்து கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்கு நிலவரம் மீண்டும் முருங்கையில் வேதாளம் ஏறிய, கதையாக இருக்கக் காணப்படுகின்றது.

இத்தடவை கிழக்கிலங்கையில் எல்.ரி.ரி.ஈயினர் தமது கைவரிசையைக் காட்டியிருக்கும் அதேவேளை, வடக்கே வடமராட்சிப் பிரேதசத்தை ஆயுதப்படையினர் தமது முற்றுமுழுதான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கைகளில் குதித்திருக்கக் காணப்படுகின்றனர்.

வடமராட்சி என்றதும் எல்.ரி.ரி.ஈயினரின் முதுகெலும்பே அப்பிரதேசம் என்று ஆயுதப்படையினர் கருதுகின்றனர். எல்.ரி.ரி.ஈ தலைவர் வே.பிரபாகரன், மற்றும் எல்.ரி.ரி.ஈயின் முக்கியஸ்தர்கள் பலரதும் பிறப்பிடமாக வடமராட்சிப் பிரேதசம் இருப்பதனாலேயே அப்பிரேதசத்தை புலிகளின் மூலஸ்தானமாக படையினர் எண்ணியிருக்கின்றனர்.

இறுதியாக தமது பயணத்தை முடித்துக் கொண்டு புறப்படுமுன்னர் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக அவுஸ்திரேலியா கொண்டுள்ள கரிசனையை திரு.காரெத் இவான்ஸ் வெளியிட்டிருந்தார்.

இருந்தபோதிலும் திரு.காரெத் இவான்ஸ் கூறியவை 'ஒரு கை ஓசை'யாக மட்டும் ஒலித்தனவே தவிர எவ்வகையிலும் அவரது உதவிக்கரத்தை தகுந்த முறையில் எமது ஆட்சியாளர்கள் கரம்பற்றத் தவறியிருந்தனர்.

திரு.இவான்ஸுக்கு இலங்கை இனப்பிரச்னையின் இன்றைய நிலவரம் பற்றி மட்டும் விளக்கிக் கூறப்பட்டதே தவிர எவ்வகையிலும், அப்பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கான உதவியை இலங்கையின் ஆட்சியாளர்கள் திரு.காரெத்திடமோ அல்லது அவர் மூலமாக அவுஸ்திரேலிய அரசாங்கத்திடமோ கோறவில்லை.

இந்நிலையில் கொழும்பைவிட்டுப் புறப்படுமுன்னர் திரு.காரெத் இவான்ஸ் தாம் நடத்திய பத்திரிகையாளர் மகா நாட்டில் இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டாலன்றி தாம் தனிப்பட்டரீதியாகவோ, அல்லது அவுஸ்திரேலிய அரசாங்கமோ எவ்வகையிலும் இலங்கைப் பிரச்னையில் தலையிடப் போவதில்லை என்று கூறியிருந்தார்.

கூடவே அவர் கருத்து வெளியிடுகையில் இலங்கை இனப்பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் உதவுவதற்கு தமது அரசாங்கமும், தாமும் மிக விருப்புக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 19ம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில் சமரசத்தை மீண்டும் கொண்டுவருவதற்கான அறிகுறிகள் எவ்வகையிலும் தென்படாதுள்ளன.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததையடுத்து கவலை வெளியிட்ட முதலாவது நாடாக அவுஸ்திரேலியா விளங்கியிருந்தது.

இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் மீண்டும் சமரச நடவடிக்கைகளில் ஈடுபட்டு சமாதானத் தீர்வை நோக்கிச் செல்ல வேண்டு மெனவும் அவுஸ்திரேலியா வலியுறுத்தியிருந்தது.



இனப்பிரச்னைத் தீர்வு குறித்துப் பரிசீலிக்கவில்லை. இந்திய உதவியில் ஏற்பட்ட தோல்வியையடுத்து இலங்கையின் ஆட்சியாளர்கள் வெளிநாட்டு உதவி குறித்துப் பிரஸ்தாபிப்பதைத் தவிர்த்திருக்கக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் தற்போது திரு.காரெத் இவான்ஸும் இலங்கை வந்து தமது உதவி, ஒத்துழைப்புக்கு ஆதரவு கிடைக்காத நிலையில் நாடுதிரும்பியுள்ளார்.

திரு.காரெத் இவான்ஸுக்கு இன்றைய நிலவரத்தை விளக்கியதோடு, எல்.ரி.ரி.ஈ யினரே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டதாக மட்டும் இலங்கையின் ஆட்சியாளர்கள் தெரிவித்தனரே தவிர, அவருடைய உதவியையோ, ஆலோசனையையோ தீர்வு முயற்சிகள் குறித்து ஆட்சியாளர்கள் கோரவில்லை.

## அலசுவது—இராஜதந்திரி

# யுத்த நிறுத்தமின்றி சாத்தியப்படாது அரசியல் அணுகுமுறைகள்!

கடந்தவாரங்களில் பலாலி இராணுவத்தளத்திலிருந்தும் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வடமராட்சியிலிருந்தும் அகதிகளாகக். குடிபெயர்ந்திருப்பதாக வடக்கேயிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு தசாப்த காலயுத்தத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதியாக வடமராட்சிப் பிரதேசமே விளங்குகின்றது.
இங்கே திரும்புமிடமெல்லாம் கட்டிடங்கள் சிதைந்தும், சின்னா பின்னமாகியும் இருப்பதையே காண முடியும். எல்.ரி.ரி.ஈதலைவர் வே.பிரபாகரனின் கிராமம் மற்றும் அதனை அண்டிய அயல் கிராமங்கள் யாவும் தவிடு பொடியாகியிருப்பதையே காணமுடியும். வீடுகள் யாவும் அத்திவாரக்கற்களே பிடுங்கி எறியப்பட்ட நிலையில் தகர்ந்து போயிருக்கக் காணப்படுகின்றன.

1987ம் ஆண்டு ஒப்பரேஷன் (Operation Liberation) என்ற பெயரில் இலங்கையின் ஆயுதப்படையினர் முதல் தடவையாக வடமராட்சியில் எல்.ரி.ரியினருக்கு எதிராக பாரிய மோதலில் குதித்திருந்தனர்.

இலங்கையின் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி உட்பட இலங்கை பாதுகாப்பு படையின் முக்கியஸ்தர்கள் பலரும் நேரடியகாவே அன்று வடமாராட்சி ஒபரேஷன் இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இன்று மீண்டும் எட்டு வருடங்களின் பின்னர் வடமராட்சி பெருமளவிலான இராணுவ கெடுபிடிக்குள்ளாகியிருக்கக் காணப்படுகின்றது.

1987ம் ஆண்டு 'வடமாராட்சி ஒபரேஷன்' இடம் பெற்றபோது இந்திய விமானப்படை விமானங்கள் யாழ் குடாநாட்டின் ஆகாயப்பரப்பில் தோன்றி உணவுப் பொட்டலங்களைப் போட்டு இலங்கைப் படையினரின் இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்தின. இந்திய விமானங்கள் அன்று உணவுப் பொட்டலங்களைப் போட்டு பறந்து சென்ற வேளை யாழ் குடா நாடுமுழுவதும் குதூகலித்திருந்தது.

இலங்கை ஆயுதப்படையினரின் கெடுபிடிக்குள்ளாகும் அச்சுறுத்தலில் இருந்தும் விடுபட்ட உணர்வில் குடாநாட்டு மக்கள் அன்று மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர்.

ஆனால் இந்த மகிழ்ச்சி ஆரவாரமும், குதூகலமும் மிகச் சொற்ப காலமே நீடித்தன. இலங்கை படையினரின் கெடுபிடிகளுக்கு அஞ்சிய குடாநாட்டு மக்கள், உலகில் நான்காவது ஸ்தானத்தில் இருக்கும் இந்தியப் படையினரின் இரும்புப் பிடிக்குள் சிக்கலாயினர்.

வடமாராட்சி ஒபரேஷன் நடவடிக்கை முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது எட்டு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன.

இந்த எட்டுவருட காலத்தில் வடக்கு-கிழக்கு நிலவரம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட அணுகுமுறைகளை நன்கு ஆராயும் பட்சத்தில், அரசியல் ரீதியிலான அனைத்து தீர்வு முயற்சிகளும் வெறும் கண்துடைப்பாகவே இருந்து வந்துள்ளன. அத்துடன் உறுதியான முறையில் அரசியல் அணுகுமுறைகள் முன்னெடுக்கப்படாதிருப்பதை அறியமுடிகின்றது.

போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை என்று ஆரம்பிக்கப்பட்ட அனைத்துமே மிக, மிகக் குறுகிய காலம் வரை மட்டுமே நீடித்திருந்தன.

பிரேமதாச அரசு எல்.ரி.ரி.ஈயினருடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தது. எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களுக்கு 'ஐந்து நட்சத்திர' உபசரணையை வழங்கி அவர்களை எவ்வாறு 'சமாளிக்கலாம்' என்று மட்டுமே அன்று பிரேமதாசா ஆட்சியாளர்கள் எண்ணினரே தவிர, வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான தீர்வுத்திட்டம் பற்றி எவ்விதத்திலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை பிரேமா ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவில்லை.

பிரேமதாசாவுக்கு வடக்கு-கிழக்குப் பிரச்னை தீர்வை விட 'கம்உதாவ' கொண்டாட்டங்களே முக்கியமாக இருந்தது.

வடக்கு-கிழக்கில் இரத்த ஆறு ஓடிக்கொண்டிருந்த சமயம், ஜனாதிபதி பிரேமதாசாவும், அவரது அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் 'கம்உதாவ'க் கொண்டாட்டங்களை நடத்தி 'குடைராட்டினங்களில்' (MERRY-GO-ROUND) சுழன்று வந்தனர்.

பொது மேடைகளில் பேசும் போது மட்டும் 'மாரிக்காலத் தவளை' போல திரு.ஆர்.பிரேமதாசா தொண்டை கன்க்க அரசியல் தீர்வு பற்றிக் கத்தினாரே தவிர எவ்வகையிலும் ஒரு நிரந்தரத் தீர்வுக்காக அவர் பாடுபடவில்லை.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு யுத்தம் மேலும் மோசமடைந்ததே தவிர, அதன் கடும்போக்கு எவ்வகையிலும் தணியவில்லை.

இன்று ஜனாதிபதி சந்திரிகா அரசு எல்.ரி.ரி.ஈயினருடன் ஒரு முற்று முழுதான யுத்தத்தை எதிர்நோக்கியிருக்கின்றது.

கடந்த எட்டுமாத காலமாக சந்திரிகா அரசுக்கும், எல்.ரி.ரி.ஈயினருக்குமிடையில் நிலவிய அன்னியோன்னியம் தற்போது நிலைகுலைந்து போயுள்ளது.

கொழும்பில் தனது அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப் போவதாக சந்திரிகா ஆட்சியாளர்கள் தெரிவித்து வருகின்றனர். தமிழ் அரசியல் கட்சிகள் உட்பட அரசியல் கட்சிகள் பலவற்றையும் அழைத்து ஜனாதிபதி சந்திரிகா தமது தீர்வுத் திட்டம் பற்றி விளக்கிவரக் காணப்படுகின்றார்.

விரிவான அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தையே தாம் முன்வைக்கப்போவதாக சந்திரிகா ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர்.

தீர்வுத்திட்டம் எதுவாகவுமிருக்கலாம்; ஆனால் இன்றைய உடனடித் தேவையாக இருப்பது யுத்தநிறுத்தமாகவே இருக்கின்றது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வழிவகைகளையே ஆட்சியாளர்கள் தற்போது முன்னெடுக்கவேண்டும்.

முழு அளவிலான யுத்தம் ஒன்று இடம்பெறும்போது அரசியல் தீர்வுத் திட்டத்தை எவ்வகையிலும் பலாத்காரமாகத் திணித்துவிட முடியாது.

பதுங்கு குழிகள், அகதிமுகாம்களுக்குள்ளிருக்கும் ஆயிரம் ஆயிரம் மக்கள், மற்றும் தமது கோரிக்கைகள் தொடர்பாக போராட்டத்தில் குதித்துள்ள எல்.ரி.ரி.ஈயினர் கூட யுத்தம் ஒன்றின் மத்தியில் அரசு முன்வைக்கும் தீர்வுத் திட்டத்தை சரிவரப் பரிசீலிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எத்தகையதொரு தீர்வு முயற்சிக்கும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டியது அடிப்படைத்தேவையாகின்றது. இதன் மூலமே அரசியல் அணுகுமுறைகளை அர்த்தபுஷ்டியானதாக மாற்ற முடியும்.



# யுத்த களத்தில் விரிக்கப்பட்ட வலை

இரண்டாம் உலகப் போர் உலகை ஆட்டிப்படைத்து க் கொண்டிருந்த பூகம்ப நாட்கள்,

ஆளப்பிறந்தவர்கள் ஜெர்மனிய மக்கள் என்று ஆர்ப்பரித்த ஹிட்லரின் படைகள் மடை திறந்த வெள்ளமென பிற நாடுகள் மீது பாய்ந்து கொண்டிருந்த காலம்,

ஜெர்மன் படைகளால் சிறைப்பிடிக்கப்பட்ட பிற நாட்டு வீரர்கள் சித்திரவதைகளால் சக்கையாகப் பிழியப்பட்டுக் கொண்டிருந்த மரணப் பொழுதுகள்,

ஹிட்லரை எதிர்த்தவர்கள் அவரது கருத்து க்களோடு கைகுலுக்க மறு த்தவர்கள் வதை முகாம்களில் உண்ணவும் உணவின்றி, உடுக்கவும் து ணியின்றி மெல்ல மெல்ல உயிர் பறிக்கப்பட்டுக் கொண்டிருந்த நரக நாட்கள்.

அப்போது தான் ஹிட்லரின் கோட்டைக்குள் ஒரு சதிவலை விரிக்கப்பட்டது .

திடுக்கிட வைக்கும் அந்த சதி இங்கே விபரிக்கப்படுகிறது . ஒரு வித்தியாசமாக இருக்கட்டுமேன் என்று நடந்த கதை நாடக வடிவில் தரப்படுகிறது . சுவையும் உண்டு. சூடும் உண்டு. இனி அந்த சதி நாடகம்.

# ஹிட்லரின் தளபதியும் சயனைட் குப்பியும்

## காட்சி1

ஜெர்மன் அதிபர் ஹிட்லர்- ஹிட்லரின் காதலி ஈவா ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். தளபதி றொம்மெல் வந்து நாஜிகளின் வழக்கப்படி வணக்கம் தெரிவிக்கிறான்.

ஹிட்லர்: வா றொம்மெல்! இணையற்ற வெற்றி வீரன் நீ! பிரான்ஸ் நாட்டுக்கு ஜெர்மனின் வீரம் எப்படியிருக்கும் என்று கற்றுக் கொடுத்துவிட்டு வெற்றிச் செய்தியோடு திரும்பி வந்து விட்டாய்!

றொம்மெல்: வில் வளைத்து அம்பு தொடுத்தவர் இருக்கும்போது, குறியில் துளைத்த அம்பை வியப்பதோ?

ஹிட்லர்: (இருக்கையை விட்டு எழுந்து றொம்மெல்லின் அருகில் வந்து) தொடுத்தது நான்தான்! ஆனால், தொடுக்கப்பட்டதும் சாதாரண அம்பல்லவே!

றொம்மெல்: இந்த அம்பைத்தெரிந்தெடுத்ததும் தாங்கள்தான்!

ஹிட்லர்: சிறப்பாக இருந்ததால்தானே தெரிந்தெடுத்தேன்.

ஈவா: (றொம்மெல் மீது பார்வையை செலுத்தியபடி எழுந்து வருகிறாள்) தளபதிக்கு புகழ்ச்சி தாங்காது போல் இருக்கிறது.

ஹிட்லர்: புகழுக்குரியவன் நான் ஒருவன் மட்டுமே என்பதால், தளபதி தான் புகழ்வதை விரும்ப மறுக்கிறான். என்ன சரிதானே றொம்மெல்!

றொம்மெல்: (அவசரமாக) "ஆமாம்....ஆமாம்"

ஹிட்லர்: ஆளப்பிறந்த ஆரிய இனம் சீறியெழுந்துவிட்டது! சீறியெழுந்து விட்ட செய்தி திசையெங்கும் எட்டியும் விட்டது!

றொம்மெல்: செய்தி எட்டினால் மட்டும் போதாது; எட்டுத் திசையிலும் நாஜிக்கொடி வானை வருடிக் கொண்டு பறக்க வேண்டும் பட்டொளிவீசி!

ஹிட்லர்: பட்டொளி வீசிப் பறக்கும் நம் கொடி! எட்டுத் திக்கின் செவிகளிலும் நமது வெற்றிப் பாட்டொலி கேட்கும்! கேட்கும்!! றொம்மெல், என் வீரத் தளபதியே நமது வீரர்களின் இதயத்தில் பொறிக்கப்பட வேண்டிய வாசகம் என்ன தெரியுமா?

றொம்மெல்: வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

ஹிட்லர்: தவறு றொம்மெல் தவறு! வெற்றி தான் நமது குறி! ஆனால் இதயத்தில் குறிக்கப்பட வேண்டிய வாசகம் அதுவல்ல றொம்மெல் அதுவல்ல!

ஈவா: தளபதி குழம்பி விட்டார். தங்கள் வாயால் சொல்லி விடுங்கள் அந்த வாசமான வாசகத்தை!

ஹிட்லர்: எதிரியைக் கொன்று விடு- அல்லது எதிரியால் கொல்லப்படு! எப்படி இருக்கிறது றொம்மெல் வாசகம்?

றொம்மெல்: கொல் அல்லது கொல்லப் படுவாய்! ஆகா... அற்புதமான மந்திரம்! வெற்றிக்கு இதுவே தந்திரம்!

ஹிட்லர்: இது வியக்கப்படுவதற்காக சொல்லப்பட்ட வாசகம் அல்ல.

றொம்மெல்: ஆரிய இனத்தின் இதயத்தில் குறிக்கப்படுவதற்காக தங்களால் கூறப்பட்ட வாசகம்.

ஹிட்லர்: இது எனக்கும் பொருந்தும், உனக்கும் பொருந்தும்! வெற்றிக் கனியை சாறு பிழிந்து அருந்தும் எவருக்கும் பொருந்தும்!

ஈவா: போதும், அவருக்கு கொடுக்க இருப்பதை கொடுத்து விடலாம் அல்லவா!

ஹிட்லர்: (ஈவாவின் பக்கம் திரும்பி) உனக்கு அவசரமா ஈவா? (உரத்து நகைக்கிறார்) றொம்மெல் ஃபிரான்ஸ் நாட்டைப் புரட்டி எடுத்து ஜெர்மனுக்கு பெருமை சேர்த்தாய். உனக்கு நான் தரப்போகும் பெருமை என்ன தெரியுமா? ஃபீல்ட் மார்ஷல்!

றொம்மெல்: (தலை வணங்கி விட்டு) தாங்கள் தருவது எதுவோ அதனை வாங்கிக் கொள்வது என் கடமை! இது பெரும் பதவி! என் தோள் தாங்குமா?

ஹிட்லர்: தாங்கும், தாங்கமாட்டாமல் தவிக்கப் போவது எதிரிகள் தான். (நகைப்பு) படைகளை தயார் படுத்து! ஆபிரிக்கா நோக்கிப் புறப்படட்டும் புயல்! வசப்படட்டும் களம்! வதைபடட்டும் அங்குள்ள பிரிட்டிஷ் படைகள்!

(றொம்மெல் விடைபெற்றுக் கொள்ளுதல்-ஈவாவை அணைத்தபடி ஹிட்லர் உள்ளே செல்கிறார்.)



ஹிட்லருடன் றொம்மெல்

## தருவது ரசிகன்

## காட்சி2

ஹிட்லர் கட்டிலில் சாய்ந்திருக்க அருகே மெல்லிய ஆடையில் அழகி ஈவா)

ஹிட்லர்: என்னைக் கண்டு உலகமே நடுங்குகிறது. நீயோ என்னையே நடுங்க வைக்கிறாயே ஈவா?

ஈவா: போர்க்களத்தில் நீங்கள் தலைவர்.

ஹிட்லர்: பூக்களமான பள்ளியறையில் நீ தலைவி.

ஈவா: நீங்களே சொல்லி விட்டீர்களே.

ஹிட்லர்: எதிரியின் விமானங்கள் வானத்தில் வட்டமிடுவது போல, உன் விழி வண்டுகள் என் மேலே வேவுப் பார்வைகளை வீசுகிறதடி ஈவா! வேவுப் பார்வைகள் மட்டும் தானா?

ஈவா: வேறு என்ன பார்வைகள்?

ஹிட்லர்: ஏவுகணைகள் கூட குறி தவறலாம். உன் விழிக் கணைகள் குறி தவறுவதேயில்லையடி! கவச வாகனத்தை சிதறடிக்கும் குண்டு போல என் இதயப் பிடிவாதத்தையெல்லாம் இரு எழில் பந்துகளால் பந்தாடிக் கொண்டிருக்கிறாயே ஈவா!

ஈவா: அடேயப்பா! வெளியே சர்வாதிகாரி. உள்ளே சரச சல்லாபி! பொல்லாத ஆள் நீங்கள்!

ஹிட்லர்: போரில் சதுரங்கமாடும் என் மூளைக்கு உன் சரசம் தானே சாமரம் வீசுகிறது!

ஈவா: இந்த தாமரை மொட்டு விரிந்தது யாருக்காக?

ஹிட்லர்: யாருக்காக?

ஈவா: வேலைப் பளுவால் வெப்பமாகும் உங்கள் மூளையை மோகத்தில் மூழ்கும் தெப்பமாக்கத்தானே!

ஹிட்லர்: போதும் ஈவா பேசியது. விலகப் போகிறது இரவுத் திரை! இப்போது விலகட்டும் இந்த மெல்லிய திரை!

ஈவா: யுத்தம் வேண்டுமா?

ஹிட்லர்: இரத்தம் சிந்தாமல், திசைகள் அதிராமல், சித்தம் இனிதாகி, தசைகள் இதமாகி, சுகங்கள் பரிமாறும் யுத்தம்! அதுதானே நீ கேட்கும் யுத்தம் என்பதன் அர்த்தம்? அதுதான் வேண்டும்- ஈவா வா!"

## காட்சி 3

(ஹிட்லர் கோபத்தோடு அங்குமிங்கும் நடந்துகொண்டிருத்தல், எதிரே ஹிட்லரின் நம்பிக்கையான ஜெனரல் ஒருவர்)

ஹிட்லர்: நீர் சொல்வது உண்மைதானே ஜெனரல்!

ஜெனரல்: நிச்சயமாக!

ஹிட்லர்: வளர்த்த கடா மார்பில் பாய வருகிறதா? றொம்மெல் நீயா நிறம்மாறிக் கொண்டிருக்கிறாய்?

ஜெனரல்: சதித் திட்டம் இருப்பதாகவும் தகவல்.

ஹிட்லர்: கற்றுக் கொடுத்தவன் மீதே கத்தி வீசிப் பார்க்க நினைக்கிறானா றொம்மெல்!



றொம்மெல்

ஜெனரல்: கத்தரித்து விட வேண்டியது தான்.

ஹிட்லர்: கத்தரித்துவிட றொம்மெல் ஒன்றும் கிளையல்லவே, மரம்! அதனால் ஜெனரல் கேள்! நாம் முதலில் செய்ய வேண்டியது கிளைகளை வெட்டுவதுதான்.

ஜெனரல்: அதாவது...?

ஹிட்லர்: றொம்மெல் மீது விசுவாசமுள்ள படை அதிகாரிகளைப் பற்றி முதலில் தகவல் திரட்டு! பின்னர் அவர்களின் தலைகளை உருட்டு! கடைசியாக அடி மரத்தில் வெட்டு!"

ஜெனரல்: புரிகிறது! ஆனால்.... அடி மரத்தை எப்போது வெட்டத் தொடங்குவது?

ஹிட்லர்: கிளைகளை வெட்டிவிட்டு வா. மரத்தை சாய்ப்பதற்கு சரியான வழியும், முறையும் நான் சொல்கிறேன். அதற்கு முன் ஒரு காரியம் செய்ய வேண்டும்.

ஜெனரல்: என்ன காரியம்?

ஹிட்லர்: புகழ் வாய்ந்த ஒருவனை அழிக்க வேண்டுமானால் முதலில் அவன் புகழை அழிக்க வேண்டும். அதன் பின்னரே அவன் உடலை அழிக்க வேண்டும். (நகைக்கிறார்) றொம்மெல் ஆபிரிக்க போர் முனையில் வெற்றிக் கனிகளை கொய்தது குறைவல்லவா?

ஜெனரல்: ஆம்....மிகக் குறைவு!

ஹிட்லர்: அந்தச் செய்திகளை ஜெர்மனியரின் செவிகளில் ஏற்று! றொம்மெல் வீரத்தை தொலைத்துவிட்டு தோல்வியைச் சுவைத்துக் கொண்டிருக்கிறான் என்று நம்ப வை! எதிரிகளை பீரங்கி வாயில் போட்டுப் பிணமாக்காமல் றொம்மெல் பின்வாங்கிக் கொண்டிருக்கிறான் என்று பிரசாரம் செய்!

ஜெனரல்: போர் முனையில் இருந்து உதவி கேட்டு றொம்மெல் செய்தி அனுப்பினார்....

ஹிட்லர்: உதவிக்கு படை அனுப்பாதே மடல் எழுதி அனுப்பு!

ஜெனரல்: என்னவென்று?

ஹிட்லர்: எதிரியைக் கொல், அல்லது எதிரியால் கொல்லப்படு என்று! கலங்காதே ஜெனரல் கையொப்பம் நான் போடுகிறேன்! இப்போது நீ போகலாம்!

(ஜெனரல் விடைபெற்றுச் செல்கிறார். ஹிட்லரின் மூளையில் பயங்கரத் திட்டம் ஒன்று உருவாகிறது. சட்டைப் பையில் கைவிட்டு எதையோ எடுக்கிறார். அது சயனைட் குப்பி! அதைப் பார்த்தபடி உரத்து நகைக்கிறார்)

(சதி தொடரும்)

---

அறிந்து கொள்ளுங்கள்–ஆரோக்கியம் பெறுங்கள்–ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## மூளைக்கு வயதாகிறதா...?

உடற்பயிற்சி, சரியான உணவு வகைகள், தேவையான ஓய்வு மூலம் உடலை இளமையாக வைத்திருக்கிறோம். ஆனால் வயதாக, ஆக மூளையை இளமையாக வைத்திருக்க என்ன செய்கிறோம்? வயதாகும் போது ஏற்படக்கூடிய கண்பார்வைக் குறைவு ஒலியை கிரகிப்பதில் செவிகளுக்கு ஏற்படும் மந்த நிலை போன்றவை மூளையின் ஆற்றலையும் மந்தமடையச் செய்கிறது. தவிர நரம்பணுக்கள், இரத்தக் குழாய்களில் ஏற்படும் மாறுதல்கள், சுற்றுப்புற சூழ்நிலைகளின் பாதிப்புகள் அதிகமான குளிரான இடத்தில் வாழ்வது போன்றவையும் வெவ்வேறு வகையான பாதிப்புகளை உண்டாக்கலாம்.

மூளையின் ஆரோக்கியத்தையும் இளமையாகச் செயல்படும் ஆற்றலையும் அதிகரிக்க உலகப் புகழ் பெற்ற நரம்பியல் நிபுணர் டாக்டர் B.ராமமூர்த்தி தரும் ஆலோசனைகள். வயதாகிறதே என்று முடங்கி விடாதீர்கள். புதிதாக ஒரு மொழி, கணக்கு புதிர்கள் என்று மூளைக்கு வேலை கொடுக்கும் பொழுதுபோக்குகளில் ஈடுபடுங்கள். உண்ணும் உணவை சத்து மிகுந்த சரிவிகித (Balanced) உணவாக அமைத்துக் கொள்ளுங்கள். தினமும் காலையிலும் மாலையிலும் 5-லிருந்து 15 நிமிடம் வரை தியானம் செய்யுங்கள். உடற் பயிற்சியும் அவசியம்.



## நீரிழிவு ஏன்–எப்படி!

ஆயுர்வேதத்தில் நீரிழிவு நோய்க்கு 'ப்ரமேஹம்', மதுமேஹம்' போன்ற பெயர்கள் உண்டு.

ப்ரமேஹம் (நீரிழிவு) மூன்று தோஷங்களின் (வாதம், சித்தம், கபம்) சீற்றத்தால் ஏற்படுகிறது.

### நீரிழிவு நோயின் முற்குறிகள்

தலைமயிரில் சடைவிழுதல், வாயில் இனிப்பு, கை கால்களில் உணர்வின்மை, எரிச்சல், வாய், தாடை, தொண்டை இவை அடிக்கடி உலர்ந்து போதல், தாகம், சோம்பல், உடலில் அதிக அழுக்கு சேருதல், உடலில் உள்ள துவாரங்களில் அழுக்கு சேருதல், உடல் முழுவதும் எரிச்சல், உடல் உறுப்புகளின் உணர்வின்மை, வண்டுகள் எறும்புகள் உடலிலும் சிறுநீரிலும் மொய்த்தல், சிறுநீரில் மற்ற நோய்கள் வந்துசேருதல், உடலில் கெட்டவாடை, அதிக உறக்கம், எக்காலத்திலும் சுறுசுறுப்பின்மை, என இவையாவும் மூன்று தோஷங்களின் சீற்றத்தால் தோன்றும் நீரிழிவு நோய்களின் முற்குறிகளாகும்.

### நீரிழிவு நோய் தோன்றக் காரணங்கள்


1. நீரில் வாழும் பிராணிகளின் மாமிசத்தை அதிகமாகப் பயன்படுத்தல் .

2. மாவு பண்டங்கள், பாயாசம், அரிசி, பயிறு, உளுந்து, பால்நெய், கரும்பின் சாற்றில் இருந்து செய்யப்படும், வெல்லம், சர்க்கரை, கற்கண்டு, உறையாத தயிர், புத்துக்கள் இவற்றை அதிகமாக பயன்படுத்துவதாலும்.


3. உடற் பயிற்சியின்மை, அதிக நேரம் தூங்குதல், கண் விழித்தல், சுறுசுறுப்பின்மை, புகை பிடித்தல், இரத்தத்தை வெளியேற்றுதல், மலத்தையும், சிறுநீரையும் தடுத்தல், பொதுவாக இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு சுவைகளை கொண்ட பொருட்களை அதிகமாக பயன்படுத்துவதாலும்.

4. பலாப்பழம், கிழங்கு வகைகளை அதிகளவில் உண்பது.

மேற்கண்ட காரணங்களால் தோஷங்கள் சீற்றமுற்று நீரிழிவு நோய் ஏற்படுகிறது.



## சர்பத்



நீங்கள் 'சர்பத்' சாப்பிடுபவரா? சர்பத் சாப்பிடும் போது 'ஸ்ட்ரோ' போட்டு உறிஞ்சி சாப்பிடுங்கள். ஏனென்றால் சர்பத் போட்டுத் தருகின்ற கண்ணாடி டம்ளரை வெந்நீரால் கழுவுவதில்லை. அப்படி வெந்நீரால் 10% டம்ளரை கழுவினால் டம்ளர் உடைந்து விடும். 'ஸ்ட்ரோ' இல்லாமல் குளிர்பானம் அருந்தினால் மற்றவருக்கு உள்ள நோய் நமக்கும் தொற்றக்கூடும். பானம் அருந்திய பின்பு ஸ்ட்ரோவை முறித்து ஏதாவது ஒரு குப்பைத் தொட்டியில் வீசினால் மறு படியும் ஸ்ட்ரோவை யாரும் உபயோகப் படுத்த முடியாது. அது நமக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் நன்மையே!

# நீ எங்கே என் நினைவுகள் அங்கே?

இந்தச் சிம்பன்சி குரங்காரின் முகத்தில் ஏன் இப்படி அடர்ந்த சீற்றம்? அது ஒரு சோகக் கதை. சுருக்கமாகச் சொல்கிறோம். இவர் பெயர் றோம். ஜெர்மன் நாட்டில் பெர்லின் நகரில் உள்ள மிருகக் காட்சிச்சாலையில் இருக்கிறார். அங்கே பெண் சிம்பன்சியார் ஒருவரை ரொம்ப ஆசையாகக் காதலித்தார். ஒரு நாள் அல்ல, ஒரு நொடி கூட பார்க்காமல் இருந்தால் பைத்தியம் பிடித்துவிடுமளவுக்கு லவ், பெண் சிம்பன்சிக்கு ஏதோ நோய் வந்து விட சிகிச்சைக்கு அழைத்துப் போய்விட்டார்கள். அந்தக் கோபத்தில் சினந்த நேரத்தில் குறும்புக்கார கமராக்காரர் ஒருவர் 'கிளிக்' செய்துவிட்டார். பிரிவுத் துயர் பொதுதானே!



## நகமும் சதையும்

வெளிநாடுகளில் இயந்திர வாழ்க்கை. பெற்றோருக்கு பிள்ளைகளுடன் விளையாட நேரமில்லை. காவல் நாயாருக்கு குழந்தை அழாமல் பார்க்கும் வேலையும் சேரும்.



## தகவல் பெட்டி



## ஆட்டுக்கும் உண்டோ கை?

படத்தில் இருப்பது லாமா வகை ஆடு. சரி அதிருக்கட்டும் ஆட்டுக்கு எப்படி கை வந்தது 'காதிலை பூ' தானே என்று கேட்பீர்கள். கைகள் ஆட்டுக்குச் சொந்தமல்ல, அது ஆட்டின் எஜமானருக்குச் சொந்தம். எஜமானார் ஏதோ வேலையாக இருக்கும் போது ஆடு எட்டிப் பார்க்க, அத் தருணம் பார்த்து புகைப்படம் எடுத்து விட்டதால் இப்படியொரு அற்புதக் காட்சி!

## கற்றுக்கொள்ளவோ கண்ணுறங்கவோ?



இத்தாலியில் எடுக்கப்பட்ட 'கிளிக்' இது. வீட்டில் செல்லமாய் வளரும் நாயார். வீட்டுப் பிள்ளைகள் மேசையில் இருந்து படிப்பதைக் கவனித்துவிட்டு, தானும் ஒரு நாள் முயன்று பார்த்தார். கற்றுக் கொள்ள நினைத்த ஆசையை 'ஹாயாக' கண்ணுறங்கும் ஆசை வென்று விட்டது.




## தேடுகிறார் வலை போட்டு!

ஆயிரம் பொய் சொல்லியும் ஒரு கல்யாணம் செய்யலாம் என்றும் சொல்லுவார்கள். அது சரிதானா? என்பதெல்லாம் ஒரு புறமிருக்கட்டும்.

படத்தில் சுவர் விளம்பரம் அருகில் நிற்கிறார் பாருங்கள் மிஸ்டர் டென்னிஸ் பவல். அரை அங்குலம் பொய் கூட சொல்லாமல் கல்யாணம் செய்ய நினைக்கிறார்.


உண்மையை ஆயிரம் பேர் அ்றியச் சொல்லி பிடித்தமான பெண் தேடுகிறார். இவர் சொல்லும் உண்மை என்ன? "விரக்தியால் மனம் நொந்து போய் இருக்கிறேன். என் வயது 33. எனக்குத் தேவை 22 வயது இளம் பெண். என் விரக்தியைப் புறங்கையால் அலட்சியமாக தள்ளி விடக் கூடிய பெண் விண்ணப்பிக்கலாம்" என்று சுவரில் எழுதி வைத்திருக்கிறார்.

சுவரைப் பார்த்துவிட்டு இதுவரை 50 பெண்கள் தமது விண்ணப்பத்தை கவரில் போட்டு அனுப்பினார்கள். 50 பேரையும் அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தினார். ம்ஹீம். ஒருவரும் தேறவில்லை. தேடுதல் வேட்டை தொடர்கிறது.

## சங்கீதாவுக்கு யோகம்

'எல்லாமே என் ராசாதான்' படம் திரைக்கு வந்து வெற்றிகரமாக ஓடுவதால் கதாநாயகி சங்கீதாவுக்கும் யோகம். பார்த்திபனோடு நடித்து விரைவில் வெளிவரும் படம் 'புள்ள குட்டிக்காரன்' படமும் நன்றாக ஓடினால் சங்கீதா பிஸியாகிவிடுவார்.

'செந்தூரம்' என்னும் படத்திலும் கதாநாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார் சங்கீதா. தாசி குடும்பத்து இளம்பெண் பற்றிய கதையாம். சங்கீதாவுக்கு ஜோடியாக புதுமுகம் தினேஷ் நடிக்கிறார். பாடல்கள் வைரமுத்து. இசை, சிற்பி.



முகப்பில்

ராம்கி-ஊர்வசி

படம்-மாயாபஜார் 1995

# 104



மஞ்சல் வண்ண
வெயிலில் பட்டு
கொஞ்சம் வண்ண
வஞ்சிச் சிட்டு
அஞ்சி அஞ்சிக்
கொஞ்சம் போது
ஆசையில்லையா?

கவிஞர் கண்ணதாசன்



# சினி விசிட்

## மினி சினி

* பிரபுவுக்கு ஜோடியாக 'மிஸ்டர் மெட்ராஸ்' படத்தில் நடிக்க ஒப்பந்தமாயிருக்கும் சுகன்யா, விரைவில் சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார்.
* மலையாளத்தில் ஜெயராம் நடித்த 'மழவில்காவடி' தமிழில் 'சுப்பிரமணிய சுவாமி' என்ற பெயரில் படமானது. இதன் பின்னர் பாண்டியராஜன் தான் நடிக்கும் படங்களுக்கு மலையாளத்தில் வெற்றி பெற்ற படங்களின் கதையைத் தேர்வு செய்கிறார்.
* தமிழில் பிஸியாக நடித்துவரும் மீனா, தெலுங்கில் கோதாண்டராமி ரெட்டி இயக்கும் 'புண்ணிய பூமி நா தேசம்' என்ற படத்தில் நடிக்கிறார். இப்படத்தில் மீனா ஏற்றிருப்பது புரட்சிகரமான பத்திரிகையாளர் வேடம்.
* சரத்குமார் தற்போது நடித்துவரும் 'ரகசிய போலீஸ்' படத்திற்கு முதலில் 'இதயம் பேசுகிறது', 'எச்சரிக்கை', 'சூர்யோதயம்' எனப்பல பெயர்கள் சூட்டப்பட்டு மாற்றப்பட்டன.
* இளையராஜா இசையில் 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் ஒரு பாடலைப் பாடிய வடிவேலு, ஏ.ஆர். ரகுமான் இசையில் 'மிஸ்டர் ரோமியோ' படத்திலும் ஒரு பாடலைப் பாடுகிறார். தற்போது வடிவேலு, தேவாவின் இசையில் 'தாய்க்குலமே தாய்க்குலமே' படத்திலும் பாடல் ஒன்றைப் பாடவுள்ளார்.
* டி.ராஜேந்தரின் 'தாய் தங்கை பாசம்' படத்தைத் தொடர்ந்து 'மைனர் மோசஸ்', 'சன்னதிப் பூக்கள்', 'வெற்றி முகம்' 'காதல் விழா' உட்பட எட்டுப் படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறார் கீர்த்தனா.
* அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க, பிரபல மலையாள இயக்குநர் சங்கீத் சிவன் இயக்கவிருந்த 'புலிகேசி' என்ற படம் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.
* பானுப்பிரியா கதாநாயகியாக நடிக்கும் புதிய படமொன்று வருகிறது. மலையாளத்தில் வெற்றி பெற்ற 'ஹைவே' படம் தான் தமிழில் மொழிமாற்றமடைகிறது. இதில் சுரேஷ்கோபிக்கு ஜோடியாக பானுப்பிரியா நடிக்கிறார்.
* கோ. வி.மணிசேகரனின் 'யாகசாலை' படத்தில் கதாநாயகனாக நடித்த பழனிஸ்வரன், பல வருடங்களுக்குப் பின்னர் 'பொன்மலர்' என்ற புதிய படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தில் ரோமா என்னும் பம்பாய் பெண்ணை கதாநாயகியாக்கியுள்ளார் பழனிஸ்வரன்.



ராமராஜன்-குஷ்பு
படம்-தேடிவந்தராசா

## அக்ஷய்குமாரை அதிரவைத்த பெண்!

ஆங்கிலப் பட ஹீரோக்கள் போல உடலமைப்பு இருப்பது அக்ஷய் குமாருக்கு வாய்ப்பாகிவிட்டது.

இந்திப் படவுலகின் கனவு நாயகர்களில் ஒருவர் அக்ஷய்குமார். இளம் நடிகைகள் அக்ஷய் குமாருடன் இணைந்து நெருங்கி நடிக்கப் போட்டி போடுகிறார்கள்.

சமீபத்தில் ஒரு விருந்தில் நடிகை மம்தா அக்ஷய்குமாருக்கு எதிர்பாராத இச் கொடுத்துவிட கூடியிருந்தவர்களுக்கு இன்ப அதிர்ச்சி.

நடிகைகளும், இரசிகைகளும் அக்ஷய் குமாரை துரத்தித் துரத்தி இம்சை செய்தாலும் அவருக்கு ஒரு மறக்கமுடியாத அனுபவம் மட்டும் மனதில் பதிந்துள்ளதாம்.

நடிகராக முன்னர் தாய்லாந்தில் உணவு விடுதி ஒன்றில் அக்ஷய் குமார் வேலை செய்தார். அப்போது உணவு விடுதிக்கு வாடிக்கையாக வரும் தாய்லாந்துப் பெண் ஒருவருக்கு அக்ஷய் குமார் மீது ஒரு கண். ஒரு நாள் திடீரென்று அக்ஷய் குமாரைப் பிடித்து அழுத்தமான 'இச்' கொடுத்துவிட்டாராம். இப்போது நினைத்தாலும் புல்லரிக்கிறது. மறக்க முடியவில்லை" என்கிறார் அக்ஷய் குமார்.

உடலைக் கச்சிதமாக வைத்திருக்க தினமும் பயிற்சி செய்து வருகிறார் அக்ஷய்.

## ...ாதகம்

...தேவா(ஒரிஜினல் பெயர்)
...யான 23
...ன் நிமிர்ந்து பார்க்க வசதியாக 6 அடி
...கள் தூக்கக்கூடியதாக 60 கிலோ மட்டும்.
...ன்னால் நம்பமாட்டீர்கள், கூச்ச சுபாவம்.
...டித்த படங்கள்: 'மவுனராகம்', 'இதயம்',
...தி', 'ஜென்டில்மேன்'; 'வால்டர் வெற்றிவேல்';
...ண்டிருக்கும் படங்கள்:
...ல் பேட்ஸ்'; 'மிஸ்டர் ரோமியோ'.
...டி பிரியாணி என்று நினைக்காதீர்கள்,
... அறுகாவும்.
... தனிமை
... அறுவை.

## வா மாமா வா

கிராமத்துக் கட்டிளம் காளை ரத்னவேல். வசதியான குடும்பம். வைரமான உடல். அவனைக் காதலிக்கத் துடிக்கிறார்கள் இரண்டு பெண்கள்.

ஒரு நாள் ரத்தினவேல் வயலில் உழுது கொண்டிருந்தான். அங்கே வருகிறாள் ஜோதி: "மாமா! வடை கொண்டு வந்திருக்கேன், கடச் சுட வடை இருக்கு, வந்து வாங்கிக்கோ மாமா" என்று சத்தம் போட்டு அழைக்கிறாள்.

அப்போது அங்கு வருகிறாள் பாரதி. "மாமோய் பணியாரம் கொண்டு வந்திருக்கேன். ரொம்ப ருசியாக இருக்கும். வந்து எடுத்துக்கோ மாமோய்," என்று அவளும் அழைக்கிறாள்.

ரத்னவேல் அவர்கள் அழைப்பை அலட்சியம் செய்துவிட்டு வேலை செய்து கொண்டிருக்கிறான். இரு பெண்களும் அவனை நோக்கிச் சேற்றில் இறங்கி ஓடுகிறார்கள். ஓடியவர்கள் சேற்றில் மாட்டிக் கொள்கின்றனர்: "மாமா தூக்கி விடு" என்று அபயக் குரல் எழுப்புகின்றனர்.

இக் காட்சி படமாக்கப்பட்டது 'பெரிய குடும்பம்' படத்திற்காக! ரத்னவேலாக பிரபு நடிக்க, பாரதி-ஜோதியாக கனகாவும், விவிதாவும் நடித்தனர். வேகமாக வளர்ந்து வருகிறது.

## ...் திரும்பும் ராமராஜன்

...ரன்' படத்தால் உச்சத்துக்குப் போயிருந்தவர் ...னர் யார் கண் பட்டதோ சோர்ந்து ...ர், தற்போது 'தேடிவந்த ராசா' படத்தில் ...டித்து வருகிறார். இடையிலே நின்ற ...மீண்டும் தூசுதட்டித் தொடர்ந்து எடுத்து...

...இருக்க, ராமராஜனை ஜெயலலிதாவோடு மீண்டும் சேர்த்துவிட ஒரு முயற்சி ...னரும் ராமராஜன் ஜெயலலிதா கட்சியில் இருந்தவர்தான். வாயைப் பத்திரமாக ...படுத்தத் தெரியாமல் அப்படி இப்படிப் பேசினார் ராமராஜன். தனக்கும் செல்வாக்கு ...மரைத்' தூக்கி விட்டுக்கொண்டார், அம்மாவுக்கு வந்தது கோபம், கட்சியை விட்டே ...விட்டார். இப்போது ராமராஜன் மனம் வருந்தி வருந்தினால் அம்மா அடைக்கலம்...

## ...ரத்னத்தின் 'ஆசை'

...தை அடுத்து மணிரத்தினத்தின் ஆலயம் நிறுவனம் வெளியிடப் ...ம் 'ஆசை'. ஆனால் இயக்கியிருப்பது மணிரத்னமல்ல. 'ஆசை' ...ரு வசந்த்.
...யாரிப்பில் இருந்த 'ஆசை' விரைவில் திரைக்கு ...ன் கதாநாயகன் 'அமராவதி' படத்தில் ...் கதாநாயகி புதுமுகம் கல்கத்தாவைச் ... சுவலட்சுமி. முக்கிய வேடத்தில் ...கிறார். பாடல்கள், வாலி, ...தேவா.



## இரட்டை வேடத்தில் செந்தில்

பாண்டியராஜன் கதாநாயகனாக நடிக்கும் படம் 'நீலக்குயில்'. இப்படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறார் செந்தில். கதாநாயகியாக நடிக்கும் ராஜஸ்ரீக்கு ஜோடிப் பெண் பாத்திரம்.

வண்ணமுக வெட்டழகி
வட்டவிழிக் கட்டழகி
சின்னஞ்சிறு பொட்டழகி
தெரியுமா- அவ
அன்னநடை மின்னலிடை
அத்தனையும் சேர்ந்த ஒரு
பொண்ணா வந்து
பொறந்திருக்கா புரியுமா?

பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம்



## கிச்சு முச்சு..... கிச்சு முச்சு.....

அவள் பெண்தான், ஆனால் ரவுடிப் பெண். அவளோடு இளம் பெண்கள் படை. ரவுடி ராணிக்கு விஜய் மீது காதல் மயக்கம். ஒருநாள் விஜய் முன்பாக வழி மறித்து ஆடுகிறாள் ரவுடி ராணி. பாடல் ஆரம்பிக்கிறது இப்படி: "என் தேகம் ரோஜாத் தோட்டம்...கிச்சுமுச்சு...கிச்சுமுச்சு சாங்..." இக் காட்சியும் பாடலும் இடம்பெறும் படம் 'வசந்த வாசல்' ரவுடி ராணியாக தீவா நடிக்கிறார். விஜயாக விஜய் நடிக்கிறார். 'கிளைமாக்ஸ்' காட்சிக்காக ஐந்து நாட்களாக பயங்கர சண்டைக் காட்சியை படமாக்கியுள்ளார்கள். படப்பிடிப்புக்கள் முடிவடையும் கட்டத்தில் உள்ளன.

## தேவா பாடிய பாடல்.

இசையமைப்பாளர் தேவா பல படங்களில் பாடியிருக்கிறார். இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன் பாணியில் படுவதுதான் தேவாவுக்கு பிடிக்கும்.

தேவா தற்போது பாடியுள்ளது 'கம்மா இருங்க மச்சான்' படத்திற்காக.

"சந்திரனும் ஒன்னுதான், சூரியனும் ஒன்னுதான். ஆண்டவனும் ஒன்னுதான். ஆத்தாளும் ஒன்னுதான். பெண்டாட்டியும் ஒன்னுதான்..." என்று தொடங்கும் பாடலைப் பாடியிருக்கிறார் தேவா.

## சிறையில் வாடும் சூப்பர் ஸ்டார்.

'கல்நாயக்' படத்தின் பிரமாத வெற்றியால் பம்பாயின் சூப்பர் ஸ்டாரானார் சஞ்சய்தத். நிறையப் படங்களில் ஒப்பந்தமானவரை மீண்டும் சிறையில் போட்டுவிட்டனர். சிறையில் வாடும் 'சஞ்சய்தத்' எப்படி இருக்கிறார். என்ன செய்கிறார் என்று அறிய பல்லாயிரம் இரசிகர்களுக்கு ஆவல்.

சஞ்சய்தத்தோடு சிறையில் இருந்த பியாராசிங் என்பவர் விடுதலையாகியுள்ளார். சஞ்சய்தத் பற்றி அவர் சொன்ன தகவல்கள் இவை;

பம்பாய் மாநிலத்தில் உள்ள மராட்டியத்தில் இருக்கும் சிறையில் சஞ்சய்தத் அடைக்கப்பட்டுள்ளார். அவர் இருக்கும் சிறை ஒரு குகை மாதிரி இருக்கும். ஒரு ஜன்னல் கூடக் கிடையாது. 10 சதுர அடி பரப்பளவு கொண்ட அந்தச் சிறிய அறையின் உள்ளேயே கழிப்பறையும் இருக்கும்.

கழிப்பறையில் உள்ள ஒரே ஒரு நீர் குழாயும் பழுதாகியே இருக்கும். அதனால் இரவும் பகலும் சிறை முழுவதும் சிறுநீர் நாற்றம் அடிக்கும்.

சஞ்சய்தத் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னைச் சிறைவாழ்க்கைக்குப் பழக்கப்படுத்திக் கொண்டார்.

சஞ்சய்தத் வீட்டில் 'ஷவர்பாத்'தில்(குழாய் குளியல்) குளித்துப் பழகியவர். சிறையில் தண்ணீரை மொண்டு குளிக்க முதலில் மிகவும் சிரமப்பட்டார், பலமுறை கையில் இருந்து வாளி நழுவி விழுந்தது.

தலைமுடியையும், தாடியையும் நீளமாக வளர்க்க ஆரம்பித்தார். காரணம் கேட்டால், "நான் விடுதலையாகி திருப்பதி போய் வந்த பிறகுதான் 'ஷேவ்' செய்வேன்" என்று கூறுவார்.

தன்னோடு நடித்த நடிகைகள் பற்றியெல்லாம் கூறுவார். சிறையில் சஞ்சய்தத்துக்கு நிறையக் கடிதங்கள் வருகின்றன. பெரும்பாலான கடிதங்கள் இரசிகைகளால் எழுதப்பட்டிருக்கும். அக்கடிதங்கள் தான் சிறையில் அவருக்குள்ள சந்தோஷங்கள்.

அவர் அடிக்கடி 'சிகரெட்'பிடிப்பார். ஒரு நாளில் ஒரு 'பாக்கெட்' ஊதித் தள்ளிவிடுவார்.

பாதிவேகவைத்த உணவுதான் கிடைக்கும். வேறு வழியின்றி நாம் அதனைச் சாப்பிடுவோம். சஞ்சய்தத் தனது வீட்டில் இருந்து உணவு தருவித்தார். பின்னர் அதை நிறுத்திவிட்டார்.

"என் நண்பர்களாகிய நீங்கள் ரொட்டியை உண்ணும் போது, நான் மட்டும் அறுசுவை உணவை வரவழைத்து சாப்பிடுவதா?" என்று கூறி மறுத்துவிட்டார்.

"தன்னைச் சதிவலையில் சிக்கவைத்துவிட்டார்கள்" என்று கூறி வருத்தப்படுவார். இவ்வாறு பியாராசிங் கூறியுள்ளார்.





சஞ்சய் தத்

...மியோ
...-பிரபுதேவா

## ... நடிகர்


...நடிக்க ...வந்தார்? ...போது "மகனே ... இனிமேல் ...சொன்ன், அது ...ராம். ... நிறைவேற்ற ... தானே ... வருகிறார்

... ஜோடி ... வந்தது. ...டிக்குள் ...பிரேம் ...மேன்' ...பாக ... திரைக்கு

## ...் கோடி

... தொழில் ... காதலித்து ... உடல். ... என்று ...
... 35 கோடி ...சொத்துக்களை ...எழுதிவைக்க
... ஒரே ...ளைத்தாவை ...டார். ...போதுமே ... ஒரு ...' என்கிறார்

# வெய்யில் காலத்தில் உங்கள் கையில் இருக்க வேண்டிய யோசனைகள்



★ கண்களைப் பாதுகாக்க கூலிங்கிளாஸ் அணிந்து வெளியில் செல்லலாம்.

★குளிர்ந்த காலைப் பொழுதிலேயே உங்களது பெரும்பாலான வீட்டு வேலைகளை முடித்துக் கொள்ளுங்கள். துணி துவைப்பது, வீட்டைக் கூட்டிப் பெருக்கித் துடைப்பது போன்ற வேலைகளை வெய்யில் ஏறும் முன்பே செய்து விட்டால் அவ்வளவு அசதி ஏற்படாது.

★ கோடை காலத்தில் ஃப்ரிட்ஜ் இல்லாத வீடுகளில் காய்கறிகள் வாடிவிடும். அதைப் புதுப்பிக்க வினிகர் கலந்த குளிர்ந்த நீரில் ஊற விடுங்கள் புத்தம் புதியனவாக மாறிவிடும்.

★ கோடைகாலத்தில் முட்டைகள் விரைவில் கெட்டு விடும். ஆனால் வேப்பிலைக்குள் முட்டைகளைப் போட்டு வைத்தால் அதிக நாட்கள் கெட்டுப் போகாமல் இருக்கும்.

★ எலுமிச்சம்பழ சர்பத் தயாரிக்கும் போது சீனியுடன் ஒரு சிட்டிகை உப்பையும் சேர்த்துக் கலக்கி அருந்துங்கள். துவர்ப்பு நீங்கிச் சுவை மிகுந்திருக்கும். உடம்புக்கும் நல்லது.

★ கோடையில் நீர்மோர் தயாரிக்கும் போது நீர்மோரில் இஞ்சி, பச்சை மிளகாய்க்குப் பதிலான மிளகை ரசப்பொடியைச் சேர்த்துப் பாருங்கள். சுவையாக இருக்கும்.

★கோடையில் அதிகமான ஐஸ் கட்டிகள் தேவைப்படும். ஐஸ் ட்ரேயில் கொதித்து ஆறிய நீரை ஊற்றி ஃப்ரிஜில் வைத்தால் விரைவாக ஐஸ் கட்டியாகும்.

★ உடலின் வியர்வையை வெளியேற்றக் கூடிய பருத்தி, வொயில் துணிகளால் ஆன ஆடைகளை அணிவதே நல்லது, பொலியஸ்டர், நைலக்ஸ் துணிகளைத் தவிர்ப்பது நன்மை பயக்கும்.

★ வெய்யில் காலத்தில் அதிக அளவில் காரம், மசாலா இல்லாமலும், அசைவ உணவுகளைக் குறைத்துச் சாப்பிடுவதும் நல்லது. சைவ உணவு நல்லது. உணவில் அதிக அளவில் கீரைகள், வெள்ளரிக்காய், தக்காளி, வெங்காயம் முதலியவற்றைச் சேர்த்தால் உடலின் வெப்பம் குறைந்து குளிர்ச்சியாக இருக்கும்.

★ வெய்யில் காலத்தில் அதிகமாகத் தாகம் எடுக்காமல் இருக்க அதிக அளவில் நீர்ச்சத்து நிறைந்திருக்கும் திராட்சை, ஒரேஞ், வெள்ளரிப் பிஞ்சு போன்றவற்றைச் சாப்பிடலாம். பகல் வேளையில் நுங்கு, இளநீர் போன்றவைகளைச் சாப்பிடுவதால் நம் உடலுக்குத் தேவையான தாது, உப்பு பொட்டாசியம் குளோரைட்டு போன்றவை இயற்கையாகவே கிடைத்துவிடும்.

★ வெய்யில் காலத்தில் முகத்தில் அளவுக்கு மீறிய ஒப்பனைகள் செய்து கொள்ளக் கூடாது. உதாரணமாக லைனருக்குப் பதிலாகக் கண் மை உபயோகிக்கலாம்.

# ஒரு நிமிடம்



குழந்தை பிறந்தவுடன் நன்றாக வாய்விட்டு அழவேண்டும். குழந்தையின் கைகள் நன்றாக விரிந்த நிலையில் இருக்க வேண்டும். கைகளை இறுக மூடியிருப்பின், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள் கூட கையை மூடி இருக்க வாய்ப்பு உண்டு. கால் கைகளை நன்கு உதைத்து குழந்தை அழ வேண்டும்.

குழந்தை பிறந்த உடனேயே அதை நன்கு போர்த்தி வைக்க வேண்டும். சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் குளிப்பாட்ட வேண்டும்.

குழந்தை பிறந்து 2 மணி நேரத்திற்குள்ளேயே தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

குழந்தை தொடர்ந்து 3, 4 மணி நேரம் அழலாம். இதனால் சிக்கல் ஏதும் எழாது.

குழந்தையை தினமும் குளிப்பாட்ட வேண்டும்.

குழந்தையின் சிறந்த உணவு தாய்ப்பால் மட்டுமே. சில சமயம் டாக்டரின் ஆலோசனையின் பேரில் மற்ற பால் வகைகளைக் கொடுக்கலாம்.

போலியோ, பி.சி.ஜி ஊசிகளை மருத்துவரின் ஆலோசனை கேட்டு போட வேண்டும்.

குழந்தை பிறந்து 48 மணி நேரம் கழித்து மஞ்சள் நிறம் கண்ணில் தெரிந்தால் அது தவறில்லை. 5 நாட்கள் சென்ற பின்னும் கண்ணில் மஞ்சள் நிறம் இருப்பின் உடனடியாக மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்.

குழந்தையை அதிகம் தூக்கக் கூடாது.

குழந்தை பிறந்து முதல் 1 வாரம் எடை குறையலாம். ஆனால் இரண்டாவது வாரம் முதல் தினம் 30 கிராம் எடை அளவு கூட வேண்டும்.


பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல 15

மகளிர் மட்டும்

-பரிசுப் போட்டி-

முதல் அதிஷ்டசாலிக்கு

தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.


## 'பெண்' மொழிகள்




★ பெண் குறுக்கிடும் போதுதான் ஓர் அறிவாளியோ முட்டாளோ ஆரம்பமாகிறான்.

★ அப்பாவிப் பெண் அடிமையாய் இருப்பாள்; புத்திசாலிப் பெண் அதிகாரத்தில் இருப்பாள்.

★ பெண்ணானவள் பிள்ளையை மட்டுமல்ல நன்மை-தீமை என்ற இரண்டையும் பிரசவிப்பவளும் அவளே.

★ ஆசையை வெளிக்காட்ட மாட்டாள் பெண். அன்பை வெளிக்காட்ட மாட்டான் ஆண்.

## உதடுகள் கறுப்பதேன்?



மட்டரகமான லிப்ஸ்டிக்குகளை உபயோகிப்பதன் மூலம் உதடுகள் கறுப்பாக மாறும் வாய்ப்பிருக்கிறது. உடலில் கல்சியம் குறைந்தாலும் உதடுகள் கறுப்பாகலாம். இதற்கு, கொத்தமல்லி இலைச் சாற்றைத் தினமும் இரவு படுக்கப் போவதற்கு முன் உதடுகளில் தடவிக் கொண்டு தூங்கலாம். இதன் மூலம் நாளடைவில் உதடுகள் சிவப்பாக மாறும்.

## வீட்டுக்குறிப்புக்கள்



தக்காளி ஜாம், தக்காளி ஜூஸ் செய்யும் போது, தக்காளிப் பழத்தின் தோலை உரிக்க சுலபமான வழி என்ன தெரியுமா? தக்காளியை கொதிக்கும் நீரில் போட்டு எடுத்த பிறகு, உடனே அதை குளிர்ந்த நீரில் போட்டால், தோலை சுலபமாக உரிக்க முடியும்.



சோறு கொதிக்கும் போது சோற்றுக்குள் இரண்டு, மூன்று துளி எலுமிச்சம் பழச் சாற்றைப் பிழியுங்கள். சோறு வெண்மையாக, தனித்தனியாக இருக்கும்.

★★★



வீட்டில் இருக்கும் சோபா செட்டை குறைந்தது ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது சுத்தம் செய்ய வேண்டும். சோபா செட்டைச் சிறிய பிரஷ் கொண்டு சுத்தம் செய்தால் மூலை முடுக்குகளிலும், சிறிய இடைவெளிகளிலும் உள்ள அழுக்குகள் போய்விடும்.

## சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது - சுகந்தினி)

### மட்டன் சமோசா

**தேவையான பொருட்கள்:-**

மாவு - 300 கிராம்
இறைச்சி- 150 கிராம்
உருளைக்கிழங்கு- 150 கிராம்
பட்டாணி - 100 கிராம்
பெரிய வெங்காயம் - 1
பச்சை மிளகாய்- 5
எலுமிச்சம் பழம் - 1
மல்லி - சிறிதளவு
எண்ணெய் - 250 மில்லி லீற்றர்
கரம் மசாலாப் பொடி -1 1/2 தேக்கரண்டி
கடுகு - 1/2 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

*செய்முறை:*

முதலில் மாவை நன்றாகத் தண்ணீர் விட்டுப் பிசைந்து ரொட்டி போல் தட்டி வைத்துக் கொள்ளவும். பட்டாணியை நன்கு ஊற வைக்கவும். பின் வாணலியில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி, கொதிபருவத்தில் இறைச்சி, பட்டாணி, உருளைக் கிழங்கு, தேவையான அளவு உப்பு, மல்லி, நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், கரம் மசாலாப் பொடி, எலுமிச்சம் பழச்சாறு, கடுகு சேர்த்து வேக வைக்கவும். நன்றாக வேக வைத்த பின் அவற்றை எடுத்து, ரொட்டி போல் தட்டி வைக்கப்பட்ட மாவில் வைத்து முக்கோணமாக மடித்து எண்ணெயில் பொரித்து எடுக்கவும். சுவையான மட்டன் சமோசா ரெடி.

# லேடீஸ் ஸ்பெஷல்

## அழகுக்கு அழகு

பெண்கள் கூந்தல் அலங்காரத்துக்கு ஏற்ற அணிகலன்களை அணிந்தால் தான் அழகாக இருக்கும்.

ஒற்றைச் சடை போட்டுக் கொள்ளும் பெண்கள், கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலியும், காதுகளில் கல் பதித்த அகலமில்லாத கம்மல்களையும் அணிந்தால் அழகாக இருக்கும்.

குதிரைவால் கொண்டை போட்டுக் கொண்டால் காதுகளில் வளையம் அணிந்தால் தான் எடுப்பாக இருக்கும்.

இரட்டைப் பின்னல் போட்டு தொங்கவிட்டு கொண்டால் காதுகளில் ஜிமிக்கி போன்ற தொங்கும் அணிகலன்களை அணிந்தால் கவர்ச்சியாக இருக்கும்.

பீட்ரூட் கிழங்கை துண்டாக வெட்டி அன்றாடம் உதடுகளில் தேய்த்து வந்தால் உதடுகள் சாயம் பூசாமலே கவர்ச்சிகரமான ஒருவித இயற்கை வண்ணத்தைப் பெறும்.

கரட் கிழங்கை துண்டித்து அதன் ஒரு பகுதியை கண்களின் புருவங்களில் தேய்த்து வந்தால் கண் புருவம் அடர்த்தியாகவும் ஒழுங்காகவும் கருமையாகவும் அமையும்.

மூக்குக் கண்ணாடி அணிந்த பெண்கள் மிகவும் அழகாகக் காட்சி தருகிறார்கள். பார்வைக் கோளாறு ஏதுமற்ற பெண்களும் குளிர்ச்சிக் கண்ணாடிகளை அணியலாம். கண்ணாடிகள் கண்களை விட அகன்றவையாக இருந்தால்தான் அழகாக இருக்கும். மெல்லிய கறுப்பு நிற பிரேம்கள் எல்லா வயது பெண்களுக்கும் கவர்ச்சியை அளிக்கும். தங்கமுலாம் பூசிய பிரேம்களும் அழகை பெருக்கிக் காண்பிக்கும்.



மழைகாலத்தில் அழுத்தமாக மேக்கப் செய்து கொள்ளக்கூடாது. ஈர வாடைப் பட்டால் செய்து கொண்ட மேக்கப் திட்டு திட்டாக கலைந்து அவலட்சணமான தோற்றத்தை உண்டாக்கிவிடும். மழை காலத்தில் வெளியே செல்லும் போது இரண்டொரு துளி மழைநீர் பட்டாலும் ஒப்பனை கலைந்துவிடும். மழைக் காலங்களில் வெறும் முகப் பூச்சோடு நிறுத்திக் கொள்வது நல்லது.

## முகத்துக்கு 'மேக் அப்'

விழாக்களுக்கோ, விருந்துக் கொண்டாட்டங்களுக்கோ செல்லும்போது 'மேக் அப்' போட்டு அமர்க்களமாகச் செல்ல ஆசையா? இதைப் படியுங்கள்!

முதலில் முகத்தை கிளென்ஸர் (CLEANCER) போட்டுச் சுத்தப்படுத்தவும். பிறகு கடைகளில் விற்கும் நல்ல தரமான ஃபவுண்டேஷனை சருமத்துக்கு ஏற்றவாறு தேர்ந்தெடுத்து நன்றாக முகத்தில் பரவலாகத் தடவவும். பிறகு, டின்டின் பௌடரை முகத்தில் (காது, கழுத்து உட்பட) தடவவும். பிறகு முகத்திற்கு ஏற்ப புருவத்தை வடிவமைத்துக் கொள்ளவும். தங்கள் நிறத்திற்குப் பொருந்தும்படியான ஐஷடோவை (EYE SHADOW ) தேர்ந்தெடுத்து கண்களின் மேல் தடவவும். பிறகு தடிப்பான கறுப்புப் பென்சிலால் (DARK PENCIL) கண்களுக் குள்ளே மை எழுத வேண்டும். பிறகு ஐ லைனரால் (EYE LINER) கண்களுக்கு அழகாக வடிவம் கொடுத்து விட்டு மஸ்கராவால் (MASCARA) கண்



இமைகளைப் பெரிது படுத்தவும். பிறகு மிதமான லிப்ஸ்டிக் போட்டுக் கொள்ளவும். கன்னங்களில் லேசாக ரூஜ் கொண்டு டச் அப் செய்துவிட்டு முகத்திற்கேற்றபடி அழகான பொட்டு வைத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்குப் பிடித்தமான சென்ட்டை ஸ்பிரே செய்து கொண்டு தயாராகவும்.

## வித்தியாச விருந்து

## வெளுக்கப் போட வேண்டிய சிலுக்கு

*தமிழக கவிஞர் மு.மேத்தா சொன்ன கிண்டல் கலந்த குத்தல் இது:*

அந்த ஆராய்ச்சி மாணவர்களின் கேள்வியில் அவள் வந்தாள்.



"தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள், சிலுக்கைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்கள்.

இப்போதெல்லாம் அழுக்குத் துணியைப் பார்த்தால் கூட எனக்கு ஆத்திரம் வருவதில்லை. சிலுக்குத் துணியைப் பார்த்தாலே சீற்றம் வருகிறது!

இந்த அவஸ்தைகளின் தேசத்தில், எதைப்பற்றியெல்லாம் அபிப்பிராயம் சொல்வதென்று ஒரு விவஸ்தையில்லாமல் போய் விட்டது.

இருந்தாலும் சொல்கிறேன்;

சிலுக்கைப் பற்றி மற்றவர்கள் சொன்னதில் எனக்குப் பிடித்தது:

"சிலுக்கை இனி
வெளுக்கப் போட வேண்டும்"

சிலுக்கைப் பற்றி நான் சொன்னதில் எனக்குப் பிடித்தது:

"இது என்ன
முரண்பாடு...
முன்பெல்லாம்
துணிக்குத்தான் சிலுக்கென்று
பெயராய் ஆச்சு!
இப்போது
துணியில்லா
திருப்பதுவே
சிலுக்காய் போச்சு"

கவிஞர் மு. மேத்தா

## சின்னச் சின்னக் கவிகள்

மேகத்திரளுக்கு
மின்னல் கோடெதற்கு–
உச்சி வகிடு.

☆☆

பாவம் அணில்கள்
கடிக்க முடியவில்லை–
அவள் இதழ்கள்.

✱✱

குளவிகள் கொட்டின
வலிக்கவில்லை–
அவள் விழிகள்.

☆☆

நீருக்குள் மீனுக்கு
வேர்த்துக் கொட்டியது–
அவளால் நான்.

**ஒட்டமாவடி அறபாத்.**



## காத்திருப்பேன்!

எதிர்காலத்தை
மறந்து
நிகழ்காலத்தை
கவிதைகளாக்கி
உனக்காக என்றும்....

▫▫

உயிரினோரம்
துளிர்விடும்
பசுமையான
அந்த–நினைவுகளை
கனவுகளாக்கி
இளமையை இழந்து
முதுமையை அரவணைத்து–,

▫▫

குருதியின் வாடையை
கந்தகத்தின் நாற்றமதை
நிதமும் முகர்ந்து
மணநுகர்வு சிதைந்து
பதுங்கு குழியினுள்
ஒதுங்கியிருந்து–,

▫▫

புயல்வரும் தெருவில்
நீ–பவனிவருவதுண்டு
தடைகளை மறந்து
ஒளிவேகத்தில் வந்து
'செக்கிங் போஸ்ற்றில்'
கியூவில் நின்று
உணர்வுகளை உறைந்து–,

▫▫

சமாதானக் கீற்றுபோல்
கண் சிமிட்டும் வேளையில்


புள்ளியாய்த் தேயும்
உன்னைப் பார்த்திருந்து
நிலவுபோல்
தேய்ந்து...வளர்ந்து...

▫▫

உயிரின் சிதிலங்கள்
உடலில் எஞ்சியிருக்கும்
வரைக்கும் காத்திருப்பேன்!

▫▫

**ஆரையம்பதி மனோ-ஆரையம்பதி கிழக்கு.**



## மோசம் போன தேசம்!

உங்களைத்தான்
ஒரு நிமிஷம்...!

✈✈

சமூகம்
சப்தமில்லாமல்
சயனைட்
சாப்பிடுவதை அறிவீர்களா?

✈✈

அழிவின் முகம்
ஒப்பனை செய்து கொண்டு
உலா வருது
தெரியுமா உங்களுக்கு..?

✈✈

இன்னும் சனக் கழுதை
தன் முன்னே நீள்கிற
'கரட்' துண்டுக்காக
கணக்கற்ற சுமையுடன்
கால்கடுக்க ஓடுகிறது!

✈✈

அறிவுச் சுரப்பிகள்
அடைபட்டுப்போக....
அரசியல் ஆலைகளோ
வியர்வைச் சுரப்பிகளை
விலை பேசி விட்டன!

✈✈

இன்னமும்
சமாதானப் புறாவோ
பீரங்கிகளுடன்தான்
பேச்சுவார்த்தை நடத்துகிறது!

✈✈

மின் மினிப் பூச்சிகளின்
கண் சிமிட்டலுக்கு
விட்டில்கள்
தன்னையே ஈந்துவிட்டுத்
தத்தளிக்கின்றன!

✈✈

வாழ்க்கை எனும்
முட்டாள் ஒட்டகம்
முட்களையே மெல்லுகிறது

✈✈

அணிகலின் பூட்டி
அழகு காட்டிய பெண்மைக்கு
இப்போதெல்லாம்
ஆபாசமே
ஆபரணமாய் போனது!

✈✈

மூடச் சடங்குகளில்
முடமாய்ப் போன
சப்பாணிச் சமூகம்,
ஒட்டப் பந்தயத்திற்கு
ஒத்திகை பார்க்கிறது!

✈✈

இலங்கை வரைபடம்
இனிக் கிழிந்து விடாமல்
காக்க வேண்டுமானால்.....

✈✈

தேசியக் கொடியைத்
தாங்கும் கம்பம்
தள்ளாடாமல்
சம(ய)தர்ம நெறி
தாங்கி நிற்க வேண்டும்!

**இனியவன் இஷார்தீன்-அட்டாளைச்சேனை**

## நீ சிரித்தால்...!

நீ சிரித்தால்
கீழ் வானம்
கீழிறங்கும்!

••

நீ சிரித்தால்
மூண்ட நெருப்பும்
முத்தமிடும்!

••

நீ சிரித்தால்
மலர்கள் கூட
மகுடம் சூடும்!

••

நீ சிரித்தால்
வானம் கூட
வணக்கம் செலுத்தும்!

••

நீ சிரித்தால்
அடிக்கும் காற்றும்
கும்பிடு போடும்!

••

நீ சிரித்தால்
கவலை கூட
காற்செருப்பாகும்!

**ஷஹிர்ஷா தாஹிம்-தர்கா நகர்.**

## கவிஞனாய் நடப்பேன்

வானம்
எனக்கு கைக்குட்டை
பூமி கூட கூடைப்பந்து.

காற்றை கிழிப்பேன்
அதில் என்
பாட்டையும் பொறிப்பேன்.

நிலவை பிசைந்து
ஒரு பேனா சமைப்பேன்.
இந்த கடலை காய்ச்சி
மையாய் உருக்கி
நதியின் முதுகில்
கவிதை வடிப்பேன்.

சூரியச் சூட்டில்
மலைகளை உருக்கி
இந்த வரண்ட பூமிக்கு
குளிராய் கொடுப்பேன்.

மேகத்தை வழித்து
புதிய தேகங்கள் அமைத்து
அதில் ராகங்கள் மீட்டுவேன்
சுக–தாளங்கள். கொட்டுவேன்.

பறவைகள் முழுக்க
என்னுடன் பேசும்
பாம்புடன் எனது
கவிதைகள் உறங்கும்

மலர்களும் சிரிக்கும்
நான் நடக்கையில்
புற்கள் கம்பளம் விரிக்கும்
பனித்துளி மெல்ல
என் பாதங்கள் நனைக்கும்

மேகங்கள் சூழ்ந்து
குடை வந்துபிடிக்கும்
தோகைகள் அருகில்
சாமரம் வீச
நான் கவிஞனாய் நடப்பேன்
பூமியில் முழுக்க.

**கன்ஸியா.**






## இரவு

நிலவெனும்
சமாதானக் கொடியைக்
காட்டியும்
ஏகப்பட்ட
நட்சத்திரத் தோட்டாக்கள்!

★★

நித்திரை 'பங்கரைத்' தேடி
இத்தரை ஜீவன்கள் ஓடும்!

★★

இருட்டுச் சிப்பாய்கள்
இடத்தை நிரப்ப
முத்த வேட்டுக்களால்
இளமை சரணடையும்!

★★

உறவுச் சிறைக்குள்
அடைபட்ட சொர்க்கம்
இடைவெளியின்றித்
திணறிப்போகும்!

★★

இரவு...அது
எனக்கும் அவளுக்கும்
மட்டும்!!

**எம். சுரேஷ்**

## விழிகள் எழுதும் கவிதை



அன்பே,
உன் மோக விழி
பார்வைகளால்
என் இளைய தேகம்
நனைகின்றது!

❥❥


உன் இதழ்கள்
அசையும்
உஷ்ணத்தில்
என் இதயம்
தீயாய் சுடுகின்றது!

❥❥



உன் வார்த்தை தரும்
கவிதைகளில் என் காதல் ஸ்வரங்கள்
துடிக்கின்றன!
என்னிடம் 'நீயும்'
உன்னிடம் 'நானும்'
வாழ்நாளெல்லாம்
வாழ்ந்துகொண்டேயிருப்போம்!

❥❥



அதற்காகவாவது,.....
உன் காலைநேர
தரிசனங்களை
எனக்காக!,
தந்துகொண்டேயிரு!

**ஹெந்தளை நவா**







| மீனம்: | சுப நேரம் |
|---|---|
| (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) | |
| **ஞாயிறு**- தொழில் நிலைச்சிறப்பு, கௌரவம். | காலை 7 மணி |
| **திங்கள்**- மனமகிழ்ச்சி, வீண்விரயம். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, மனக்கவலை. | காலை 7 மணி |
| **புதன்**- பயனற்ற செயல், தொழில் உயர்ச்சி. | காலை 6 மணி |
| **வியாழன்**- மனமகிழ்ச்சி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| **வெள்ளி**- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| **சனி**- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 11 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

| மேடம்: | சுப நேரம் |
|---|---|
| (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) | |
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| **திங்கள்**- பணக்கஷ்டம், மனக்கவலை. | பகல் 11 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, மனப்பயம். | காலை 6 மணி |
| **புதன்**- பயனற்ற செயல், எதிர்பார்ப்பு தடை. | பகல் 12 மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, வீண்மனஸ்தாபம். | மு.ப. 10 மணி |
| **வெள்ளி**- துன்பம் மிகுதி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| **சனி**- துன்பம் நீங்கும், பணவரவு. | காலை 7 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய் அதிஷ்ட இலக்கம்-4**

| இடபம்: | சுப நேரம் |
|---|---|
| (கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை) | |
| **ஞாயிறு**- தொழில் நிலைமந்தம், கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |
| **செவ்வாய்**-முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| **புதன்**- துயர் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| **வியாழன்**- மனப்பயம் நீங்கும், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| **சனி**- பணக்கஷ்டம், பிரயாண மிகுதி. | பி.ப. 1 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**

| மிதுனம்: | சுப நேரம் |
|---|---|
| (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) | |
| **ஞாயிறு**- தொழில் மந்தம், செலவு கஷ்டம். | காலை 7 மணி |
| **திங்கள்**- அந்நியர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | காலை 8 மணி |
| **புதன்**- பயனற்ற செயல், உயர்ந்தநிலை. | பி.ப. 1 மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், வீண் பிரச்சனை. | காலை 7 மணி |
| **வெள்ளி**- தூர இடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **சனி**- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

| கும்பம்: | சுப நேரம் |
|---|---|
| (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி) | |
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, காரியசித்தி. | பகல் 12 மணி |
| **திங்கள்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| **செவ்வாய்**- காரிய சித்தி, வீண் விரயம். | பி.ப. 1 மணி |
| **புதன்**- தனலாபம், செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| **வியாழன்**- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| **வெள்ளி**- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| **சனி**- மனமகிழ்ச்சி, தொழில் சிறப்பு. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7**

## ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன், புதன், வெள்ளி |
| சிம்மம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

★ **சந்திரன்-கர்க்கடகம்,சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.** ★

| கர்க்கடகம்: | சுப நேரம் |
|---|---|
| (புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்) | |
| **ஞாயிறு**- பொருள் வரவு, தேகசுக நன்மை. | காலை 7 மணி |
| **திங்கள்**- தொழில் நிலை மந்தம், மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, வீண் மனஸ்தாபம். | காலை 8 மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| **வியாழன்**- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| **வெள்ளி**- மனமகிழ்ச்சி, உறவினர் உதவி. | பகல் 11 மணி |
| **சனி**- செலவு மிகுதி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 9**

| மகரம்: | சுப நேரம் |
|---|---|
| (உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) | |
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, பணக்கஷ்டம் நீங்கும். | காலை 6 மணி |
| **திங்கள்**- அந்நியர் சவகாசம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| **புதன்**- துயர் நீங்கும், வீண் மனஸ்தாபம். | காலை 6 மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், காரிய சித்தி. | பகல் 11 மணி |
| **வெள்ளி**- துன்பம் விலகும், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| **சனி**- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -9**

| சிம்மம்: | சுப நேரம் |
|---|---|
| (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) | |
| **ஞாயிறு**- அந்நியர் உதவி, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| **புதன்**- அந்நியர் நட்பு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| **வியாழன்**- துன்பம் நீங்கும், வெளியிடப் பயணம். | காலை 9 மணி |
| **வெள்ளி**- பயனற்ற செயல், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |
| **சனி**- மனக்கலக்கம், கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

| தனு : | சுப நேரம் |
|---|---|
| (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) | |
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| **திங்கள்**- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| **புதன்**- புதிய முயற்சி, தொழில் மேன்மை. | காலை 7 மணி |
| **வியாழன்**- பயனற்ற செயல், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| **வெள்ளி**- பணச் செலவு, வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| **சனி**- மனக்கவலை நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 11 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -1**

| விருட்சிகம்: | சுப நேரம் |
|---|---|
| (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) | |
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- உறவினர் உதவி, கௌரவம். | காலை 8 மணி |
| **புதன்**- முயற்சி மேன்மை, வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| **வியாழன்**- துயர் அதிகம், கௌரவம். | காலை 7 மணி |
| **வெள்ளி**- அந்நியர் சகவாசம், வீண் செலவு. | பகல் 12 மணி |
| **சனி**- பொருள் விரயம், காரியத் தடை. | காலை 7 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2**


| துலாம்: | சுப நேரம் |
|---|---|
| (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) | |
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 9 மணி |
| **புதன்**- தனலாபம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, செல்வாக்கு. | காலை 7 மணி |
| **வெள்ளி**- அந்நியரால் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| **சனி**- தொழில் நிலை மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்: 6**

| கன்னி: | சுப நேரம் |
|---|---|
| (உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) | |
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| **செவ்வாய்**- புதிய முயற்சி, கௌரவம். | காலை 8 மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, பலவித பேறு. | பகல் 12 மணி |
| **வியாழன்**- மனக்கலக்கம், பணவிரயம். | காலை 7 மணி |
| **வெள்ளி**- தொழில் நிலை மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| **சனி**- மனமகிழ்ச்சி, வீண்விரயம். | பகல் 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7**





## தகுதி வரும்

அளவுக் கதிகம் உண்டாலே
அமுதும் நஞ்சாய் உருமாறும்!
வரவுக் கதிகம் செலவழித்தால்
வறுமை நம்மை வந்தடையும்!

பொறுமை விட்டுப் போனாலே
பொல்லாப் புவரும் தன்னாலே!
அருமையான நட்பாலே
ஆனந்தம் பெருகும் அன்போடு!

கருத்தில் நல்லவை கொண்டாலே
கவலை நம்மை வந்தணுகா!
வருத்தி நன்கு உழைத்தாலே
வளமை விளையும் வாழ்வினிலே!

தொண்டுப் பாண்மை கொண்டாலே
தலைமை ஏற்கும் தகுதிவரும்!
அண்டை அயலார் பயனுறவே
ஆன மட்டும் உதவிடுவாய்!

ச. குருசாமி

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!
-சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறு கதை

# பேரனின் அறிவு

பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்த சுரேஷுக்கும், வினிதாவுக்கும் ஒரு சந்தோசமான செய்தி காத்திருந்தது. ஊரிலிருந்து அவர்களின் பாட்டி பார்வதி வந்திருக்கிறார் என்பதுதான் அந்தச் செய்தி.

பார்வதிப்பாட்டி அவர்கள் இருவரையும் மடியில் வைத்துக் கொண்டு, ராஜா ராணி கதைகள், மந்திரவாதிக் கதைகள், பேய் பிசாசுக் கதைகள், காட்டு விலங்குக் கதைகள் என்று பல விதமான கதைகள் சொல்வார். அதுமட்டுமன்றி விடுகதைகள் சொல்வார். நாட்டுப்புறப்பாடல்களைப் பாடிக்காட்டுவார். சுரேஷும், வினிதாவும் கண் கொட்டாது பாட்டி சொல்கிற கதைகளைக் கேட்பார்கள். சந்தோஷப்படுவார்கள்.

இன்று பாட்டி வந்திருப்பது தெரிந்ததும் பாடசாலை உடைகளைக் கூடக் கழற்றாமல், சாப்பிடாமல் அப்படியே பாட்டியிடம் ஓடினார்கள்.

"பாட்டி..! பாட்டி.....! எப்போதும் கதைகள் சொல்லுவீர்களல்லவா? இன்றைக்கு விடுகதைகள் சொல்லுங்கள் பாட்டி" என்றார்கள் இருவரும்.

"விடுகதையா, சொல்லுகிறேன்... முதலில் பாட்டி கொண்டு வந்திருக்கும் பட்சணங்களைச் சாப்பிட்டுக் கொண்டே கேளுங்கள்" என்று சொல்லி தட்டில் பலகாரங்களை வைத்துக் கொடுத்தார் பாட்டி.

பிறகு "குழந்தைகளே! விடுகதை ஒன்றிரண்டு வார்த்தைகளில் இல்லாது சின்னச் சின்னக் கதைகளாக இருக்கும். விடையை நீங்கள் சொல்ல வேண்டும்." என்றார்.

"சரி" என்றார்கள் சுரேஷும், வினிதாவும்.

"முதல் விடுகதை-கழுதை ஒன்றும், குருவி ஒன்றும் நண்பர்களாக இருந்தன. கழுதையின் முதுகில் உட்கார்ந்து குருவி கதை சொல்லிக்கொண்டோ பாட்டுப்பாடிக் கொண்டோ செல்லும். கழுதையும் அதைக் கேட்டுக்கொண்டு உற்சாகமாகச் செல்லும். அவையிரண்டும் உணவு தேடி அலைகின்ற சிரமத்தைக் குறைத்துக் கொள்ளத் தாங்களே தங்களுக்குத் தேவையான உணவைப் பயிர் செய்து கொள்ளலாமென்று முடிவு செய்தன. பயிர் செய்து முடிந்த பிறகு பங்கு போட்டுக்கொள்வதில் சண்டை வரக்கூடாது என்பதால் யார் யாருக்கு என்ன பங்கு என்பதை முன் கூட்டியே பேசி வைத்துக்கொண்டன.

அதன்படி முதல் பயிரில் குருவிக்கு மேல்பகுதி என்றும், கழுதைக்குக் கீழ்ப்பகுதி என்றும் முடிவு செய்து கொண்டன. முதல் பயிர் செய்து அறுவடைசெய்தபோது புத்திசாலியான குருவிக்கு இலாபம் கிடைத்தது. கழுதை ஏமாந்து போய் நஷ்டமடைந்தது.

இரண்டாவது பயிர் செய்யும் பொழுது இந்தத் தடவை ஏமாந்து போய் விடக் கூடாதென்று எண்ணிக்கொண்ட கழுதை பயிரில் மேல் பகுதி தனக்கென்றும் அடிப்பகுதி குருவிக்கும் என்று சொல்லிற்று. பயிர் அறுவடை முடிவடைந்ததும் அப்



படியே கழுதையும், குருவியும் பங்கிட்டுக் கொண்டன. ஆனால் இப்போதும் கழுதை நஷ்டமடைந்தது. புத்திசாலிக் குருவியோ இரண்டாவது முறையும் இலாபமடைந்தது.

மூன்றாவது பயிர் செய்யும் போது, இரண்டு முறை ஏமாந்தது போல் மூன்றாவது முறையும் ஏமாந்து போய் விடக்கூடாது என்று நினைத்த கழுதை, மூன்றாவது பயிரில் மேல் பகுதியும், அடிப்பகுதியும் தனக்கென்றும் நடுப்பகுதி குருவிக்கென்றும் என்று சொன்னது. அதற்குக் குருவியும் சம்மதித்தது.

மூன்றாவது பயிர் செய்து முடித்து அறுவடை நடந்தது. இப்போதும் கழுதை ஏமாந்து போயிற்று. குருவிக்குத்தான் இலாபம் கிடைத்தது.

ஒவ்வொருவமுறையும் கழுதை ஏமாந்து போக, குருவிக்கு மட்டும் இலாபம் கிடைத்தது. அப்படி அவை என்னதான் பயிரிட்டன? சொல்லுங்கள் பார்ப்போம்." என்றார் பாட்டி.

"முதல் பயிர் நெல், இரண்டாவது பயிர் கடலை, மூன்றாவது பயிர் கரும்பு" என்றான் சுரேஷ். பாட்டியும் விடை சரி என்று சொன்னார்.

"இன்னொரு விடுகதை சொல்லுங்கள் பாட்டி" என்றாள் வினிதா.

"இது விடுகதை அல்ல. ஒரு புதிர்க் கணக்கு" என்று சொல்ல ஆரம்பித்தார் பாட்டி.

"ஒரு வீட்டில் மூன்று சகோதரர்கள். அம்மா வடை சுட்டு தட்டில் வைத்தாள். சகோதரர்கள் மூவரும் சாப்பிட வந்தார்கள். இருந்த வடைகளில் அரைவாசியையும் கூட ஒன்றையும் மூத்தவன் சாப்பிட்டான். பிறகு மீதமுள்ள வடைகளில் அரைவாசியையும் கூட ஒன்றையும் இரண்டாமவன் சாப்பிட்டான். அதன்பின் மீதமிருந்த வடைகளில் அரைவாசியையும் கூட ஒன்றையும் மூன்றாமவன் சாப்பிட்டான். கடைசியில் தட்டில் ஒரே ஒரு வடை மட்டும் தான் இருந்தது.

"அம்மா மொத்தம் எத்தனை வடை சுட்டார்? ஒவ்வொரு பிள்ளைகளும் எத்தனை வடைகள் சாப்பிட்டார்கள்? சொல்லுங்கள் பார்ப்போம்" என்றார் பாட்டி.


"அண்ணா! நீதான் கணக்கில் புலியாயிற்றே? நீயே சொல்லு!" என்றாள் வினிதா.

சுரேஷ் நன்றாக யோசித்து விட்டு, பிறகு சொன்னான்.

"பாட்டி! மொத்தம் சுட்ட வடைகள் இருபத்திரெண்டு. மூத்தவன் சாப்பிட்டது அரைவாசியும் கூட ஒன்றும்-அதாவது பதினொன்றும் கூட ஒன்றும். பன்னிரெண்டு வடைகள். மீதம் பத்து வடைகள். இரண்டாமவன் சாப்பிட்டது ஐந்தும் கூட ஒன்றும். மீதம் நான்கு. கடைசிப் பையன் சாப்பிட்டது இரண்டும் கூட ஒன்றும், மீதி வடை ஒன்று!" என்றான் சுரேஷ்.

தன் பேரனின் அறிவைப் பாராட்டி சுரேஷை அணைத்துக்கொண்டார் பாட்டி.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.06.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 93
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 90

பரிசுக்குரியவர்:
எம்.டபிள்யூ.எம். நபாஸ்
முஸ்லிம் வித்தியாலயம் நாங்கல்ல

பாராட்டுக்குரியவர்கள்

கிருஷ்ணி மாணிக்கசிங்கி
பிஷப் கல்லூரி கொழும்பு 3

டி. பிரசாந்த் றோயல்
கல்லூரி கொழும்பு.

எம்.எம். பாத்திமா சகிய்யா, பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம் புத்தளம்.

சாமர பிரசாட், வருசவித்தான பதுளை மத்திய. ம. வித்தியாலயம்.

செல்வி. ஜெ. நர்மதா. சென் ஜோன்ஸ் ம.வி. கொழும்பு-15

யோ. துவாரகா. 139, மாவத்தை வீதி கொழும்பு-14


பீ. புனிதசாந்தினி, கிரான்லி த. வித்தியாலயம் அக்கரப்பத்தனை.

## அந்தப் பத்து


பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி. அந்தப் பத்தும் எவை தெரியுமா?

மானம், குணம், கல்வி, வன்மை, அறிவுடமை, தானம், தவம், முயற்சி, ஊக்கம், காமம். இவைதான் பத்தும்.

## செய்து பாருங்கள்.




இருபது சென்ரிமீற்றர் நீளம், 2 சென்ரிமீற்றர் அகலமும் உள்ள மூன்று நீளமான தாள்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றைப் பாதியாக மடியுங்கள். இப்போது 1, 2, 3 ஆகிய மடிக்கப்பட்ட மூன்று தாள்கள் கிடைக்கும். அவற்றைப் படத்தில் காட்டியுள்ளபடி முக்கோண வடிவில் இணையுங்கள். 3வது தாளை 1வது தாளுடனும், 2வது தாளை 3வது தாளுடனும் படத்தில் காட்டியுள்ளபடி இணையுங்கள். பின் அவற்றை நடுவில் சேர்த்து அதை ஒரு பென்சில் முனையில் குத்துங்கள். காற்று அடிக்கும் போது அது சுற்றும்.



பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:

பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பொ. இல. 1772
கொழும்பு.

## வாரம் ஒரு நாடு

### சிலி



**அமைவிடம்:** தென் அமெரிக்காவின் மேற்குக்கரையோரமாக அமைந்திருக்கும் நீளத்தால் மிகவும் கூடிய நாடு சிலி. சிலியின் கிழக்கே ஆர்ஜன்ரீனாவும் வடமேற்கே பெருவும், வடகிழக்கே ஸாலிவியாவும், மேற்கே தென் அத்திலாந்திக் பெருங்கடலும் எல்லைகளாக உள்ள இந்நாட்டின் தென் முனை, தென் துருவத்தைத் தொடுவது போல் கேப்ஹோர்ணையும் தாண்டிச் செல்கிறது.

இதன் நீளம் ஏறத்தாள ஆர்ஜன்ரீனாவின் நீளத்தை ஒத்திருப்பதால் நாட்டின் காலநிலை இடத்துக்கு இடம் மாறுபட்டே இருக்கும்.

**பரப்பளவு:** 756,626 சதுர கி.மீ (292,130 சதுர மைல்)

**மக்கள் தொகை:** 12,866,000பேர்.

**தலைநகரம்:** சாண்டியாகோ (4,600,000 பேர்)

**ஆட்சிமுறை:** குடி ஆட்சி.

ஸ்பானிய குடியேற்ற நாடாக விளங்கிய சிலி, 1810 செப்டம்பர் 18ல் சுதந்திரம் பெற்ற தன்னாட்சி நாடானது. தென் அமெரிக்க நாடுகளில் முதன்முதல் மார்க்சிய தத்துவத்தின் அடிப்படையில் சமதர்ம குடியரசினை சிலியே ஏற்படுத்தியது; எனினும் 1973ல் இடம்பெற்ற இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து குடியரசு நாடாகப்பிரகடனப்படுத்தப் பட்டது.

**பேசும்மொழி:** ஸ்பானிமொழி பேசுவோரே பெரும் பான்மையினர்; ஓரளவு ஆங்கிலம் பேசுவோரும் உள்ளனர்.

**மதம்:** உரோமன் கத்தோலிக்கம்.

**சிறப்பம்சங்கள்:** மிக நீளமான கடற்கரையைக் கொண்டுள்ளதால் கடல்படு பண்டங்கள் அதிகம். வகைவகையான மீன்கள் பிடிக்கப்பட்டு தன்நிறைவு பெற்று மீதி பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகிறது. கோதுமை உற்பத்தி உண்டு. இருப்பினும் உணவுப் பொருட் களில் மூன்றில் ஒரு பங்கு இறக்குமதி செய்யப் படுகிறது. பழ வர்க்கங்களும் ஏராளமாகப் பயிரிடப்படுகின்றன. இவற்றின் மூலமும் அந்நியச் செலாவணி கிடைக்கிறது.

உலகிலேயே அதிகமான செம்பு இங்குள்ள கனிமச் சுரங்கங்களில் பெறப் படுகிறது. தங்கம், வெள்ளி, நைத்தரேட்டு, இரும்புத் தாது ஆகியவற்றுடன், நாட்டின் 50 சதவிகிதமான தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிலான எண்ணையும் கிடைக்கிறது.

**பார்க்க வேண்டியவை:** ஸ்பானிய நாட்டின் புராதனக் கடலோடிகளின் ஆதிக்கத்துக் குள்ளிருந்த இந்நாட்டின் பெரும்பாலான இடங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களைக் கொண்டு விளங்குகின்றன.

தலைநகரான சாண்டியாகோ எழில் மிக்க நகரமாக விளங்குகிறது. பழமை மாறாத தோற்றத்துடன் நவீன மயமான அம்சங்களும் இரண்டறக் கலந்து விளங்குகின்றன. சாண்டியாகோவில் 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சான் ஃபிரான்சிஸ்கோ தேவாலயம், 17ம் நூற்றாண்டில் எழுந்த தேவாலயம் ஆகியவை, அக்கால கட்டத்தின் சிறப்பு மிக்க கட்டடக்கலை அம்சங்களை வெளிப்படுத்துவனவாக உள்ளன. வரலாற்றைச் சித்தரிக்கும் நூதன சாலைகளுடன் நவீன ஓவியக்கூடங்களும் பார்வையாளர்களுக்குப் பெருவிருந்தாக விளங்குகின்றன.

சாண்டியாகோவிலிருந்து 2,300 மைல் மேற்கேயுள்ள ஈஸ்டர் தீவுகளில் புராதன அக்கு அக்குவி கருங்கற் சிற்பங்கள் தொகையாகக் காணப்படுகின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த சிற்பிகளால் வடிவமைக்கப்பட்ட இச்சிற்பங்கள் எத்தகையோரால் வடிக்கப் பட்டன என்பதனை சரியாக கண்டு பிடிக்க முடியாதிருக்கிறது.

சிலியில் காணப்படும் களிமண் மிகவும் சிறப்பானது. இதனால் இங்கு வாழும் மக்கள் மட்பாண்டங்களை வனைவதில் வல்லவர்கள். கலை நுணுக்கங்கள் கொண்ட இந்நாட்டு மட்பாண்டங்கள் உலகப் பிரசித்தமானவை. உல்லாசப் பயணிகள் சாண்டியாகோ நகரை அண்டிய கிராமப்புறங்களுக்குச் சென்று கிராமிய மக்கள் மட்பாண்டங்களை எவ்வாறு வடிவமைக்கிறார்கள் என்பதை நேரடியாகப் பார்த்து மகிழ்வார்கள்.

திகில் தொடர்

# 2

தனக்குப் பின்னால் பயங்கர ஆபத்து காத்திருப்பதை உணராமலே வீட்டைக் கழுவித் தள்ளிக் கொண்டிருந்தாள். ஷோபா.

"நாளைக்கு அமாவாசை, மாமாவுக்கு ஐதீகம் அதிகம். விடிய விடிய அள்ளி முடித்த கொண்டை உச்ச நிலையில் குந்தியிருக்க பூ வேலை தவிர எதுவும் இல்லாத மார்பும் தொந்தியுமாக புரோகிதர் வருவார் சின்ன ஓலைக் குடையுடன்.

நாலுநாளாக விடாது பெய்யும் மழையையும் அலட்சியப் படுத்தி மாமா இருவரும் பித்ருக்களுக்கு திதி, தர்ப்பணம் என்று உட்கார்ந்து விடுவார்கள்.

வீடு துப்புரவாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மாமாவுக்கு பயங்கர கோபம் வரும்.

"ரடி மோளே ஷோபே இவிட நோக்கு" என்று ஆரம்பித்து சரமாரியாக அரை மணிநேரத்திற்கு செம டோஸ் விடுவார் மலையாளத்தில்.

உள்ளே குழந்தை அழுதது.

செம்பையும் துடைப்பத்தையும் தரையில் போட்டுவிட்டு ஆசையாக அள்ளிக் கொண்டாள்.

"ராஜா, என் ராஜா. பசிக்குதா?"

(இதற்கு மேல் வரும் வசனங்களை மலையாளம் தெரிந்தவர்கள் மலையாளத்தில் மொழி பெயர்த்துக் கொள்ளலாம். காரணம் அவர்கள் பேசும் பாசை அது!)

தோளில் சாத்திய துண்டுக்குள் கைவிட்டு சோளி பட்டனைப் பிடித்து குழந்தையின் உணவகத்தை விடுதலை செய்து-துண்டுக்குள் குழந்தையின் தலையை மறைத்துக் கொண்டாள்.

"ராஜா மவனே! என் பொன்னு மவனே" என்று பாசமாகத் தலையை வருடினாள்.

பெரிய இடியொன்று உருண்டு புரண்டு வந்து கூரைக்கு மேலே நின்று ஓசைப்படுத்திவிட்டு எங்கோ சென்று தொலைவில் மறைந்தது.

பயந்து போய் குழந்தை சிணுங்க, "இல்லே மவனே அம்மா இருக்கேன். ஏன் பயப்படறே?"

எடுத்து முத்தம் கொடுத்துவிட்டு மீண்டும் துண்டுக்குள்ளே புதைத்துக் கொண்டு ஊட்டினாள்.

"வேகமாகட்டும்டா மகனே" கெஞ்சினாள். "அம்மாவுக்கு வேலை இருக்குடா தாத்தா கத்துவாருப்பா" தூங்கி விட்ட குழந்தையை தொட்டிலில் தவழ விட்டு-

ஹாலுக்கு வந்தபோது-

அந்தப் பெண் வாசலில் நின்றிருந்தாள். திண்ணையை இடது கையில் அழுத்திக் கொண்டு குறித்த நிலையில் இவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"யாராம் அது?" என்ற இவள் கேள்விக்கு பதில் சொல்லாமல்-

எந்த உணர்ச்சியும் காட்டாமல் விழித்துப் பார்த்தவாறு நின்றாள்.

"கேட்கிறேன்னில்லே யார் நீ?"

பதில் சொல்லாமல் அவள் சிரிக்க- சிரிப்பு மெலிதாக பயமுறுத்தி வயிற்றை லேசாகக் கலக்கியது.

எழுந்து வந்தாள்.

"என்ன வேணும்?"

பதில் சொல்லாமல் மெலிதாகச் சிரித்தாள் அவள்.

"கேட்குறேன்னில்லே? சொல்லு. யார் நீ?"

மீண்டும் அதே அர்த்தமற்ற கீற்றுப்போன்ற மெலிதான சிரிப்பு.

"என்ன வேணும்? குடிக்கத் தண்ணியா?"

தலையசைத்து மறுத்தாள்.

"பின்னே என்ன? பசிக்கு ஏதாவது?"

மீண்டும் தலையசைத்து மறுத்தாள்.

"சொல்லு அலேன். என்ன தான் உனக்கு வேணும்?"

இவள் சொல்லி முடிக்க முன்-

சட்டென்று சொன்னாள் அவள்- சுட்டு விரலால் நீட்டினாள்.

அதிர்ந்து போனவள் வாய் திறக்கு முன்-

"ஷோபா" என்றது கணவனின் குரல் அசரீரியாக.

"டவல் கொண்டு வா"

குளியலறையில் இருந்து கத்தும் கணவனுக்காக போகத் திரும்பிய ஷோபா சந்தேகமாகப் பார்த்த போது- நீட்டிய விரலை இறக்காமல் பார்க்கும் பார்வை மாறாமல் அந்தப் பெண் இருக்கவே- கொஞ்சம் பயந்தாள்.

'பைத்தியமாக இருக்குமா? உள்ளே வந்து எதையாவது திருடிக் கொண்டு போய்விடுவாளோ?'

கதவை அறைந்து சாத்தி தாள் போட்டு விட்டு துவாலையுடன் குளியலறையை நோக்கிப் போனாள்.

துவாலையை வாங்கும் சாக்கில் கையை தொட முயலும் கணவனைப் பார்த்தாள்.

"கோயிலுக்குப் போகணும். இப்படி எல்லாம்தொட்டால் மறுபடி குளிக்கணும் பரவாயில்லையா?"

போலியாகப் பயந்தான். "வேண்டாம்மா இந்தக் குளிர்லே ஒரு தடவை குளிச்சதே பெரிய விசயம். வீட்டை மெழுகியாச்சா?"

"ரெண்டே நிமிசம்"

"சீக்கிரம் முடி. சோட்டானிகரா ஒண்ணும் பக்கத்துத் தெருவிலே இல்லே முப்பது மைலுக்கு மேலே போகணும். அதுவும் குதிரை வண்டியிலே."

"இப்ப வரேன்"

மறுபடியும் ஹாலுக்கு வந்தபோது நின்றாள். அவள் சிரிப்பு உதட்டிலேயே உறைந்தது.

தாள் போட்ட கதவுக்குப் பின்னால் இருக்கும் அந்தப் பெண்ணின் நினைவு வந்ததும் மெலிதாக நடுங்கினாள்.

"அப்பா என்னமாய் ஒரு பார்வை" கதவைத் திறக்க முயன்று தயங்கினாள். "இன்னமும் இருப்பாளோ?"

அவசரமாய் மெழுகுவதில் இறங்கும் போது-கதவு தடதடவென்று இடிக்கப்படவே பயந்து போனாள்.

மீண்டும் மீண்டும் ஓசை வர- இவள் திணற-

"கதவு தட்டறாங்களே திறக்கக்கூடாது?" என்றபடி கதவைத் திறக்க முயலும் கணவனை குரலால் தடுத்தாள்.

"இருங்க"

"ஏன்?"

"அங்கே யாரோ ஒருத்தி என்னமோ மாதிரி பார்க்கிறா."

"யாரு?" என்று அவன் கேட்கும் போது-

"தெரியல்லீங்க. பயமா இருக்கு" என்று இவள் சொல்லும் போதுதான். "ஷோபா கதவைத் தெறடி" என்றது அப்பாவின் குரல்.

கதவைத் திறந்தாள்.

"இங்கேயே இருந்து இவ்வளவு நேரமா கதவைத் திறக்காம இருக்கே?"

அவருக்குப் பின்னால் ஆராய்ந்தாள். இல்லை. அவள் இல்லை.

நிம்மதி மூச்சு வந்தது ஷோபாவுக்கு. "போய்விட்டாள். அப்பா....அந்தக் கண்கள்! கண்களா அவை? பயங்கரம்"

காரணமின்றி அவளுக்கு உடம்பு சிலிர்த்தது.

"நீங்கன்னு நினைக்கல்லே அந்தப் பொண்ணுன்னு நினைச்சேன்"

"எந்தப் பொண்ணுமா?"

மறுபடியும் வாசலைக் கண்களால் துழாவினாள். இல்லை. அவள் இல்லை.

"ஏன் இப்படிக் குழம்பிப் போறே. போ. போய்க் குளிச்சிட்டு வா"

"சரி."

"மெழுகியாச்சுல்லே?"

"ஆச்சு"

குளிக்கப்போனாள்.

தலையை முடியாமல் காதோரங்களில் ஹேர்பின்களைச் செருகி அடக்கினாள். சந்தனத்தை தீற்றிய நெற்றிக்கு மேலே குங்குமப் பொட்டு வைக்கும் போது நினைவுக்கு வந்தது.

அந்தப் பெண்ணுக்குத்தான் எவ்வளவு பெரிய குங்குமப் பொட்டு இருந்தது. அந்த அகலமான பொட்டே அவளை நல்லவளாகக் காட்ட மறுத்தது.

"ஆச்சா?"

கணவனின் குரலுக்கு அவசரமாக குழந்தையை அள்ளிக் கொண்டு கிளம்பினாள்.

வாசலில் குதிரையின் கனைப்பு கேட்டது. அதில் ஒருவிதமான பீதி கலந்தாற் போல-

"சே....என்ன வந்துவிட்டது எனக்கு? ஏன் இப்படி பயப்படுகிறேன்?"

கணவனை முன்னே போக விட்டு நடந்தாள்.

திறந்த கதவு வழியாக சாரட்டில் பூட்டிய குதிரைகளின் அமைதியின்மை அவைகளின் கால் மாற்றங்களிலே துல்லியமாகத் தெரிந்தது.



# ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்

## திகில் கதை மன்னன் ராஜேந்திரகுமார்

"வா" என்று நடந்த கணவனைத் தொடர்ந்து வாசற்படியைத் தாண்டியவளின் கண்ணில் பட்டது அது.

திண்ணையில் அவள் கையூன்றி நின்ற இடத்தில் இருந்தது அது. சந்தனமும் குங்குமமும் இட்டு ஊசியால் குத்தப்பட்ட ஒரு எலுமிச்சம்பழம். காற்றில் மெலிதாக அசைந்தது. பயங்கரமாக இருந்தது.

"என்ன வேடிக்கை பார்த்துக்கிட்டு நிக்கிறே?" என்று அதைத்தொடப்போன கணவனை இழுத்தாள்.

"தொடாதீங்க. ஏதோ பில்லி சூனியம் வெச்சதாக இருக்கும். "இருங்க துடப்பத்தால தள்ளிவிட்டு வந்திடுறேன்".

"மறுபடியும் குளிக்க நேரமில்ல. வந்து பார்த்துக்கலாம் வா என்று சாரட்டுக்கு இழுத்துப் போனான் அவள் கணவன் சசீதரன்.

சோட்டானிக்கார பகவதி கோயிலுக்கு இவர்களின் சாரட் போய்ச் சேரும் போது இருட்டத்துவங்கியிருந்தது.

இவர்கள் படியேறும் போதே சரேலென்று எழுந்த ஜென்டா மேளம் ஓசைக்கு ஷோபா நின்று விட்டாள்.

"என்ன நின்று விட்டே?"

"பூஜை ஆரம்பிச்சாச்சு போலிருக்கு"

"பூஜை பார்க்கிறது தானே விசேஷம்."

"ஆனா குழந்தை பயப்படுவான். ஜென்டா மேள ஓசையுடன், பேயாடுகிறவங்க கூச்சலும் அவனுக்கு ஆகாது"

"குழந்தையை வண்டியில விட்டுட்டு வாயேன்" என்றவன் அவள் பார்வையைச் சந்தித்ததும்

"சரி-சரி. நீ அப்புறம் வா. நான் மட்டும் போறேன்." என்று படியேறிப் போய்விட்டான்.

படிக்கட்டு ஓரமாகப் போய் அமர்ந்து கொண்டாள்.

"என்டே பொன்னு மவனே" என்று கொஞ்சின மகனைத் தூங்க வைக்க மடியிலிட்டு ஆட்டும் போது-

அந்த நிழல் அவள் எதிரே நீண்டு வந்து நின்றது. நீண்டு வந்து நின்றதும்-

மெல்ல கண்களை உயர்த்திப் பார்த்தவளுக்கு கவிந்துவிட்ட இரவின் காரணமாக அடையாளம் காட்ட மறுத்தது-

உற்றுப் பார்த்தவள் அடையாளம் தெரிந்ததும்-

பதறிப் போய் எழுந்தாள். "நீயா?"

வாசலில் பார்த்த அதே சூனியப் பார்வையுடன் அதே இளிப்புடன் கூடிய சிரிப்பாக நின்றாள்.

"நீ....நீ....நீ...." சுட்டிக் காட்டினாள்.

கதறலாகக் கணவனைத் தேடி படியேறி உள்ளே போனாள்.

மேளம் உச்சக்கட்டத்தை அடைந்து சட்டென்று நின்றது.

"ஏய்! என்ன இப்படி ஓடி வரே" என்ற கணவன் மார்பில் ஒடுங்கி நடுங்கினாள்.

"பயம்.....எனக்கு பயமாய் இருக்கு"

"இங்கே சாமியாடுறவங்களை பார்க்கிறது என்ன புதிசா? ஏன் என்ன பயம்?"

"அவளை அங்கே பார்த்தேன்"

"யாரை?"

"அந்தப் பெண். காலையில் வீட்டு வாசல்லே நின்னாளே அவ."

"எந்தப் பெண்? எதுக்காக நின்னா? நீ ஏன் அவளைப் பார்த்துப் பயப்படுறே?"

"எதையும் சொல்லாம அவளும் பார்வையாலேயே பயமுறுத்துறாங்க."

"சரி. சரி." அர்ச்சனை முடிஞ்சுச்சு. திரும்பலாம். இப்ப போனாத்தான் பத்து மணிக்கெல்லாம் வீடு போய்ச் சேர முடியும். படியில் குழந்தை தூங்குறானா? என்கிற சாக்கில் அவள் மார்பைத் தொட்டான்.

முறைத்துவிட்டு நகர்ந்தாள். படியிறங்கிப் போய் சாரட் வண்டியில் ஏறினாள்.

எடுத்த எடுப்பில் நான்கு குதிரைகளும் பாய்ச்சல் காட்டி ஓடின.

பின் பக்க ஜன்னல் திரையை விலக்கிப் பார்த்தாள்.

அவள் ஓடி வந்து கொண்டிருந்தாள். அவள்-

அதே பெண்! மிக வியந்தாள்.

"நாலு குதிரைகள் பூட்டிய சாரட்டின் வேகத்தோடு ஈடு கொடுத்து ஒரு பெண் ஓடி வருகிறதாவது!"

"என்ன பார்க்கிறே ஷோபா?"

"அங்க பாருங்க"

"என்ன?"

"அந்தப் பெண் எவ்வளவு வேகமாக ஓடி வரா! ஓடி வராளா இல்லே இறக்கையாலே பறந்து வராளா?"

பார்த்தான். "உனக்கென்ன பைத்தியமா? சாரட் சக்கரம் கிளப்பற தூசுதான் வருது. பெண் யாரும் இல்லையே.என்ன நீ இன்னைக்கு ரொம்பவும் குழப்பமாத் தெரியுறே?"

"புரியலீங்க. அந்தப் பெண் யாரு? எதுக்காக என்னைப் பின்தொடர்ந்து வரா? எதுவுமே புரியல்லே!"

"பொண்ணுமில்லே பேயுமில்லே. சும்மா பயப்படாதே!"

திரையை இழுத்து மூடினாள். "தூசு பறந்து வருது. குழந்தைக்கு ஒத்துக்காது.

அவள் முழுவதுமாக திரையை மூடு முன் பார்த்தாள். சாரட் சக்கரங்களின் கோடு போட்ட செம்மண் தரையின் நடுவில் தன்னிச்சையாக காலடிகள் பதிந்தன. தொடர்ந்தன.

அவளே அவசரமாக திரையை சரியாக எடுத்து மூடினாள். நிம்மதியில்லாமல் தவித்தாள்.

"அதென்ன இப்படி நெளியறே? வேர்த்து வேற போகுது- இந்த மழையிலே?"

என்று கேட்கும் கணவனைப் பார்த்தாள்.

"என்னமோ தெரியல்லே. என் முடிவு நெருங்கிட்டு வருகிறதாக உணர்றேன்."

"உளறல். வெறும் உளறல். முட்டாள் தனமான உளறல்."

"இல்லே. என் மனசுக்குள்ளே ஏதோ ஒரு மரண பயம் வருது. அது ஏன்னுதான் எனக்குப் புரியல்லே. உங்களை ஒண்ணு கேட்கட்டுமா?"

"என்ன?"

"அப்படியே எனக்கு ஏதாவது ஆயிட்டா- என் குழந்தையை பார்த்துக்க நல்ல பெண்ணாகக் கொண்டு வரதில கவனமாயிருங்க."

"என்ன ஆச்சு? இன்னைக்கேன் இப்படி விபரீதப்பேச்செல்லாம் பேசறே?"

உடனடியாக பதில் சொல்லாமல் தயங்கினாள். பிறகு சொன்னாள்-

"என்னமோ சொல்லணும் போல தோணுச்சி..... சொன்னேன்."

"நீ எதுவும் சொல்ல வேண்டாம். சும்மா இருந்தாலே போதும்.

சாரட் போய்க்கொண்டிருந்தது வேகமாக.

"அவள் யார்? ஏன் என்னைத் துரத்தணும்? எதுவுமே எனக்குப் புரியல்லையே" என்றவள்-

கணவன் முறைத்ததும்-

அடங்கிப் போனாள் ஜன்னல் வழியாகப் பார்த்தபோது எங்கோ தொலைவில் கீழ்த் திசையில் கருப்பாக குவியலாக மேகங்கள் மேலெழுந்து வந்துகொண்டிருந்தன. கலைந்தும் இணைந்தும் முதலில் மின்னல்களையும் பிரசவித்தும் பின் இடியாகி முழங்கிக் கொண்டுமிருந்தன.

மனதில் ஏதோ இனம் புரியாத பயம் அழுத்தவே-

மல்லாந்து சாய்ந்துகொண்டாள். பெருமூச்சு விட்டாள்.

வீட்டு வாசலில் வண்டியை விட்டு இறங்கும் போது வீடு பூட்டியிருந்தது. மாமா வெளியே போயிருக்க வேண்டும்.

தன் இடுப்பிலிருந்த கொத்துச் சாவியை எடுத்து-

இடது கையில் குழந்தையை தாங்கிக் கொண்டு வலது கையால் பூட்டைத் திறக்க முயல,

"நீ நகர். நான் திறக்கிறேன். வா இப்பால்" என்று கணவன் கொஞ்சம் பலமாக இழுத்துத் தள்ள-

தடுமாறித் திண்ணையில் கையூன்றப் போக உள்ளங்கையில் ஊசி குத்திக் கொண்டுவிட்டது.

எலுமிச்சம்பழத்தில் குத்திவைத்த ஊசி!

**தொடர்ந்து வரும்**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்:-கே. ரவி
வயது:-21
முகவரி:-இல. 8, பள்ளிக் குடியிருப்பு, தோப்பூர்.
பொழுது போக்கு:- பத்திரிகை, வானொலி.



பெயர்:-எ. நல்லா
வயது:-28
முகவரி:-REST ZEUGHAUSKEELLER, WAAGGASSE-06 8001-ZURICH, SWITZERLAND.
பொழுது போக்கு:- வழமையானது



பெயர்:-எம். சபீனா
வயது:- --
முகவரி:-பிரதான வீதி, மாவடிச்சேனை, வாழைச்சேனை.
பொழுது போக்கு:-பத்திரிகை, கதைப்புத்தகம், தொலைக்காட்சி.



பெயர்:-எஸ். விக்டோரியா
வயது:
முகவரி:P.o.BOX-63 KAFARCIMA, BEYRUT. LABANON.
பொ.போ:-பேனா நட்பு, சினிமா, தொலைக்காட்சி.



பெயர்:-எம். நஸ்வர்
வயது:-23
முகவரி:-49/12, ஹம்ஸா லேன், முகத்துவாரம், கொழும்பு-15.
பொழுது போக்கு:- பத்திரிகை,கிரிக்கெட்.

பெயர்:-கே. மணிவேந்தன்
வயது:-18
முகவரி:-183, பிரதான வீதி,கொழும்பு-11
பொழுது போக்கு:-பத்திரிகை, கதை, நாவல் வாசித்தல்

பெயர்:-எம். பஷீர் யூசுப்
வயது:-24
முகவரி:-P.O BOX- 10020 RSAF/KKAB KHAMIS MUSHAYT 11451 K.S.A.
பொழுது போக்கு:-வழமையானவை.

# தாய்

**மக்சீம் கார்க்கி**

**27**



"அம்மா, நம்மிடம் பணம் மட்டும் இருந்தால்!...... இன்றும் நாம் பிறர் தரும் பணத்தைக் கொண்டுதான் நம் காரியங்களைச் செய்கிறோம். உதாரணமாக, நிகலாய் இவானவிச்சுக்கு எழுபத்தைந்து ரூபிள்கள் மாதச் சம்பளம்; அதில் அவன் நமக்கு ஐம்பது ரூபிள்களை நன்கொடையாகத் தருகிறான். அவன் மாதிரித்தான் மற்றவர்களும். அரைப் பட்டினி கால்பட்டினியாகக் கிடந்து படிக்கும் கல்லூரி மாணவர்கள்கூட, காலும் அரையுமாக வசூலித்த காசுகளை நமக்கு நன்கொடையாக அனுப்பிவைக்கிறார்கள். சொல்லப் போனால், சீமான்களில் எத்தனையோ ரகம்; சிலர் விட்டுப் பிரிவார்கள்; சிலர் ஏமாற்றுவார்கள். அவர்களில் மிகவும் நல்லவர்கள்தான் நம்முடனே சேர்ந்து நமது கொள்கைக்காகப் பாடுபடுவார்கள்...."

அவன் தன் இரு கைகளையும் கட்டிக் கொண்டு ஆர்வத்தோடு பேச ஆரம்பித்தான்.

"நம்முடைய இறுதி வெற்றிக்கு நாம் எவ்வளவோதூரம் போயாக வேண்டும். எனினும் மேதின விழாவைச் சிறிய அளவிலாவது கொண்டாடுவோம். மகிழ்ச்சியாயிருக்கும்."

ரீபினுடைய பேச்சினால் தாயின் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த கவலை அவனது உற்சாகத்தினால் துடைத்தெறியப்பட்டது. அந்த ஹஹோல் தன் தலைமயிரைக் கலைத்துக் கொதியபடி, தரையையே பார்த்தவாறு மேலும் கீழும் நடந்தான்.

"சமயங்களில் இதயத்தில் ஏதோ ஒரு புதுமை உணர்ச்சி நிரம்புகிறது, தெரியுமா உங்களுக்கு? எங்கெங்கு சென்றாலும், அங்குள்ள மனிதர்களெல்லாம் தோழர்கள் என்று தோன்றும். அவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து ஒரே நெருப்பாய் எரிவார்கள். அவர்கள் அனைவரும் நல்லவர்களாகவும், குதூகலமும் அன்பும் நிறைந்தவர்களாகவும் இருப்பார்கள். வாய்ப் பேச்சின் உதவியின்றியே ஒருவரையொருவர் புரிந்து கொள்வார்கள். அவர்கள் கோஷ்டிகானமாய் வாழ்ந்து கொண்டிருப்பார்கள், எனினும் ஒவ்வொருவரின் இதயமும் அவரவர் பாட்டைப் பாடிக் கொண்டிருக்கும். அந்த கீத நாதமெல்லாம் சிற்றாறுகளைப் போல் ஒரே ஜீவநதியில் சங்கமமாகும்; அந்த ஜீவநதி விரிந்து பெருகி சுதந்திர வேகத்துடன் செல்லும்; இறுதியாக, புதிய வாழ்க்கை என்னும் சந்தோஷ சாகரத்தோடு கலந்து சங்கமித்து ஒன்றாகிவிடும்!"

தாய் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். தான் லேசாக அசைந்து கொடுத்தாலும் அவனது சிந்தனையோ பேச்சோ அறுபட்டு நின்று போகக் கூடும் என அவள் அஞ்சினாள். அவள் எப்போதுமே மற்றவர்களை விட அவனையே மிகவும் கூர்ந்து கவனித்துக் கேட்பாள்; அவனும் மற்றவர்களைப் போலல்லாது, எளிய சாதாரண வார்த்தைகளையே உபயோகித்துப் பேசுவான். எனவே அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் அவளது இதயத்துக்குள் நேராகச் சென்று புகுந்து பதிந்துவிடும். எதிர்காலக் கனவின் எண்ணத்தையும், கற்பனையையும் பற்றி பாவெல் எப்போதுமே பேசுவதில்லை. ஆனால் ஹஹோலோ எப்போதுமே அந்த எதிர்காலக் கனவின் இன்ப உலகிலேயே வாழ்ந்து கொண்டிருப்பது போலத் தான் தோன்றும். அவன் பேச்சுக்களெல்லாம் இந்தப் பூலோக மாந்தர் அனைவருக்கும் வரப்போகும் புதிய வாழ்வையும், புதிய மகிழ்ச்சியையும் பற்றியதாகவே இருக்கும். இந்தப் பேச்சுக்கள்தான் தாய்க்குத் தன்வாழ்க்கையின் அர்த்தத்தையும் தன் மகன் எடுத்துக் கொண்டுள்ள வேலையின் நோக்கத்தையும், அனைத்து தோழர்களின் சேவையின் காரணத்தையும் விளங்கச் செய்யும்.

"இந்தக் கனவிலிருந்து விடுபட்டு உணர்ச்சி பெறும் போது...." என்று தன் தலையை உலுப்பிவிட்டுப் பேசத் தொடங்கினான் ஹஹோல்; "சுற்றுமுற்றும் பார்த்தால், எல்லாமே விறைத்துப்போய், அசிங்கமாகத் தோன்றுகிறது. ஒவ்வொருவரும் களைத்துச் சோர்ந்து எரிந்து விழுகிறார்கள்..."

அவன் மேலும் துக்கம் தோய்ந்த குரலில் பேசத் தொடங்கினான்:

"மனிதனை நம்பக்கூடாது என்பதும், அவனிடம் பயப்படவேண்டும், அவனை வெறுக்கக் கூட வேண்டும் என்பதும் கேவலமான விஷயமே. ஆனால் அது அப்படித்தான். ஒரு மனிதனுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. நீ மனிதனை நேசிக்க மட்டுமே விரும்பலாம். ஆனால் அது எப்படி முடியும்? உன் மனத்திலே உருவாகி உயிர் பெற்றுத் துடிக்கும் புதிய இதயத்தைக் காணாமல் உன் முகத்திலேயே ஓங்கி அறைவதற்காக, உன்மீது காட்டு மிருகம் மாதிரிச் சாடியோடிவரும் மனிதனை நீ எப்படி மன்னிக்க முடியும்? அதை உன்னால் மன்னிக்கவே முடியாது. அதற்குக் காரணம் உனது தற்காப்புச் சிந்தை அல்ல. உன்னால் எதையுமே தாங்கிக் கொள்ளக்கூட முடியலாம். ஆனால், அப்படி அறைவதை நீ ஒப்புக் கொண்டு விடுவதாக அவர்கள் நினைக்கும்படி நீ விட்டுவிட மாட்டாய். மற்றவர்களை எப்படி அடித்து நொறுக்குவது என்பதற்குப் பழக்கப் படுத்திக்கொள்ள நீ உன் முதுகைக் குனிந்து கொடுத்து அவர்களை அடிக்க விட்டுவிடுவாயா? ஒரு நாளும் உன்னால் அப்படி விட்டுக்கொடுக்க முடியாது."

அவனது கண்களில் உணர்ச்சியற்ற நெருப்பு கனல்வது போலிருந்தது; அவனது தலை பலமாகக் குனிந்து போயிருந்தது. அவன் மேலும் உறுதியோடு பேச ஆரம்பித்தான்:

"எந்தத் தவறானாலும் சரி. அது என்னைப் பாதித்தாலும் பாதிக்காவிட்டாலும் சரி. அதை மன்னித்து, விட்டுக் கொடுக்க எனக்கு உரிமை கிடையாது. இந்த உலகில் நான் ஒருவன் மட்டுமே உயிர்வாழவில்லை. இன்றைக்கு எனக்கு ஒருவன் தீங்கிழைப்பதை நான் விட்டுக்கொடுத்து விடலாம்; அவனது தீங்கு அவ்வளவு ஒன்றும் பிரமாதமில்லை என்ற நினைப்பால், அதைக்கண்டு நான் சிரிக்கலாம்; அது என்னைச் சீண்டுவதில்லை. ஆனால், நாளைக்கோ என்மீது பலப் பரீட்சை செய்து பழகிய காரணத்தால், வேறொருவனின் முதுகுத் தோலையும் உரிக்க அவன் முனையலாம். ஒவ்வொருவரையும் ஒரே மாதிரிக் கருதிவிட முடியாது. மிகவும் ஜாக்கிரதையாக, நெஞ்சிளக்க மற்று ஆட்களை எடைபோட வேண்டும்; பொறுக்கியெடுக்க வேண்டும். 'இவன் நம் ஆள்-இவன் வேறு' என்று தீர்மானிக்க வேண்டும். இதெல்லாம் உண்மைதான். ஆனால், இதுமட்டும் ஆறுதல் தராது."

என்ன காரணத்தினாலோ சாஷாவைப் பற்றியும் அந்த மஞ்சள் மூஞ்சி அதிகாரியைப்பற்றியும் நினைத்துப் பார்த்தாள் தாய்.

"ஆமாம், உமியும் தவிடுமாக மாவிருந்தால் ரொட்டி எப்படிச் சுடுவது?" என்று பெருமூச்சுடன் சொன்னாள் தாய்.

"அதுதான் இதிலுள்ள சங்கடம்!" என்றான் ஹஹோல்.

"ஆமாம்" என்றாள் தாய். அவளது நினைவில் அவளது கணவனின் உருவம் தோன்றியது: பாசியும் பச்சையும் படர்ந்து மூடிய பாறாங்கல்லைப்போல் உணர்ச்சியற்றுப்போன தடித்த சொரூபியான கணவனின் உருவம் நிழலிட்டது. அதே வேளையில் அவள் வேறொன்றையும் கற்பனை செய்து பார்த்தாள். நதாஷாவை ஹஹோலும் சாஷாவை பாவெலும் மணந்து கொண்டால் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்த்தாள்.

"சரி. இதெல்லாம் இப்படியிருக்கக் காரணம் என்ன?" என்று மீண்டும் தன் பேச்சில் சூடுபிடிக்கப் பேச ஆரம்பித்தான் ஹஹோல். "உன் முகத்தில் மூக்கு இருப்பது எவ்வளவு தெளிவாயிருக்கிறதோ, அவ்வளவு தெளிவானது இது. மக்கள் அனைவரும் ஒரே சமநிலையில் இல்லாதிருப்பதுதான் இதற்கெல்லாம் மூல காரணம். நாம் இந்த ஏற்ற இறக்கத்தைத் தட்டி நொறுக்கிச் சமதளப் படுத்துவோம். மனித சிந்தனையும், மனித உழைப்பும் சாதித்து வெற்றி கண்ட சகல பொருள்களையும் நாம் நமக்குள் பங்கிட்டுக் கொள்வோம். பயத்துக்கும் பொறாமைக்கும் மக்கள் அடிமையாகாமல், பேராசைக்கும் முட்டாள் தனத்துக்கும் துளாகாமல் நாம் அவர்களைக் காப்பாற்றுவோம......"

இதன் பிறகு அவர்கள் இதே மாதிரிப் பல பேச்சுக்களைப் பேசிக்கொண்டார்கள்.

அந்திரேயை மீண்டும் தொழிற்சாலையில் வேலைக்கு எடுத்துக்கொண்டு விட்டார்கள். அவன் தன் சம்பளத்தையெல்லாம் தாயிடமே கொடுத்துவிட்டான். அவளும் எந்த விதக் கூச்சமோ தயக்கமோ இன்றி பாவெலிடமிருந்து பெறுவது போலவே சாதாரணமாக அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டாள்.

சமயங்களில் தன் கண்களைச் சிமிட்டிக் கொண்டே அந்திரேய் தாயைப் பார்த்துச் சொல்லுவான்:

"என்ன அம்மா, கொஞ்சம் பாடம் படிப்போமா?"

அவள் சிரிப்பாள்; கண்டிப்பாகப் படிக்க மறுப்பாள். அவனது கண்ணின் குறும்புத்தனம் அவளைத் துன்புறுத்திவிடும்.

"நான் பாடம் படிப்பது உனக்கு ஒரு வேடிக்கையாயிருந்தால் என்னை ஏன் நீ படிக்கச் சொல்கிறாய்?" என்று அவள் தனக்குள்ளாகவே நினைத்துக் கொள்வாள்.

ஆனால் எத்தனை யெத்தனையோ முறை அவள் அவனை நெருங்கி ஏதாவது ஒரு அரும்பதத்துக்கு அர்த்தம் கேட்பாள். அப்படிக் கேட்கும்போது அவள் தன் பார்வையையும் வேறுபுறமாகத் திருப்பிக் கொள்வாள். கேட்கின்ற பாவனையிலும், தான் அதில் அக்கறை கொண்டிருப்பதாகக் காட்டிக்கொள்ள மாட்டாள். என்றாலும், அவள் இரகசியமாய்க் கல்வி கற்று வருகிறாள் என்பதை அவன் ஊகித்துக்கொள்வான். அவளது அடக்கமான குணத்தைக் கண்டு வியந்து, அவளைப் பாடம் படிக்குமாறு கேட்டுக்கொள்வதை நிறுத்துக் கொண்டு விட்டான்.

"என் கண்கள் வரவர மோசமாகி வருகின்றன. அந்திரியூஷா! எனக்கு ஒரு கண்ணாடி வேண்டும்" என்று அவள் அவனிடம் ஒருநாள் சொன்னாள்.

"அதற்கென்ன? போட்டால் போகிறது" என்றான் அவன்: "ஞாயிற்றுக் கிழமையன்று நகரிலுள்ள டாக்டரிடம் அழைத்துப் போகிறேன்; கண்ணாடியும் வாங்கிக் கொள்வோம்."

□□

பாவெலைப் பார்க்க அனுமதி கோரி அவள் மூன்றுமுறை சிறைக்குச் சென்றாள். பெரிய மூக்கும், சிவந்த கன்னங்களும் நரைத்த தலையும் கொண்ட பொலிஸ்காரர்களின் ஜெனரல் ஒருவன் அங்கிருந்தான். ஒவ்வொரு முறையும் அவன் அவளிடம் இதமாகப்பேசி, அனுமதி தரவே மறுத்துவிட்டான்.

"அம்மா, நீ இன்னும் ஒருவார காலமாவது பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும், ஒருவாரம் கழியட்டும். அப்புறம் பார்க்கலாம். ஆனால் இப்போது மட்டும் அது முடியாத காரியம்" என்பான்.

அவன் உருண்டு திரண்டு கொழுத்துப் போயிருந்தான்; பழுத்து அதிக நாளாகி, பூஞ்சைக் காளான் படர்ந்துபோன காட்டிலந்தைப் பழத்தைப் போல அவன் அவளுக்குத் தோன்றினான். அவன் எப்போதும் ஒரு சிறு மஞ்சள் நிறமான ஈர்க்குச்சியால் தனது சின்னஞ் சிறுஙான வெள்ளைநிற உளிப்பற்களைக் குத்திக் கொண்டிருந்தான். அவனது சின்னஞ்சிறு பசிய கண்கள் அன்பு ததும்பிச் சிரித்தன. அவன் எப்போதுமே நட்போடு பேசினான்.

"அவன் மிகவும் அடக்கமானவன்" என்று அவள் ஹஹோலிடம் சொன்னாள்; "எப்போதும் சிரித்த முகத்தோடேயே இருக்கிறான்....."

"ஆமாம்!" என்றான் ஹஹோல்; "அவர்கள் எல்லோருமே ரொம்ப நல்லவர்கள். அவர்கள் மரியாதை தவறமாட்டார்கள்; சிரித்த முகத்தோடேயே பேசுவார்கள். ஆமாம்! 'இதோ ஒரு கண்ணியமான யோக்கியமான புத்தி நிறைந்த மனிதன் இருக்கிறான்; இவன் ஒரு பயங்கரமான ஆசாமி என நாங்கள் நினைக்கிறோம். எனவே, உங்களுக்குச் சிரமமில்லாவிட்டால், இவனை வெறுமனே தூக்கில் போட்டு விடுங்கள்!' போதும் என்று அவர்கள் சொல்வார்கள், அப்புறம் அவர்கள் சிரித்துக் கொண்டே அவனைத் தூக்கிலும் போட்டு விடுவார்கள். போட்ட பிறகும் சிரித்துக் கொண்டே இருப்பார்கள்."

"ஆனால் இங்கே சோதனைபோட வந்தானே ஒருத்தன், அவன் வேறு மாதிரிப் பேர்வழி. அவன் ஒரு பன்றிப் பிறவி என்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்து கொள்ளலாம்" என்று சொன்னாள் தாய்.

"அவர்களில் யாருமே மனிதப் பிறவிகள் அல்ல. அவர்கள் மக்களைச் செவிடாக்கும் சம்மட்டிகள்தான் அந்தப் பிறவிகள். நம்மை மாதிரி, ஆட்களையெல்லாம் மட்டம் தட்டிச் சீர்படுத்தி, கையாள்வதற்குச் சுலபமானவர்களாக நம்மை மாற்ற முனையும் கருவிகள்தான், அவர்கள். அவர்கள் நம்மை அதிகாரம் செய்யும் மேலிடத்தைக் கைக் கருவிகளாக ஏற்கெனவே தம்மை மாற்றிக்கொண்டு விட்டவர்கள். தங்களுக்கு இட்ட எந்த ஆணையையும் எந்தவித முன்பின் யோசனையுமின்றி, உடனே நிறைவேற்றி வைத்து விடுவார்கள்."

கடைசியாக ஒரு நாள் அவளுக்குத் தன் மகனைப் பார்ப்பதற்கு அனுமதி கிடைத்துவிட்டது. ஞாயிற்றுக்கிழமையன்று சிறைச்சாலை ஆபிஸில் ஒரு மூலையில் அவள் மிகவும் பணிவோடு அடங்கி ஒடுங்கி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அட்டும் அழுக்கும் நிறைந்த அந்தத் தாழ்ந்த கூரை கொண்ட அறைக்குள்ளே வேறு பலரும் இருந்தார்கள். அவர்களும் கைதிகளைப் பார்ப்பதற்காகக் காத்துக் கிடப்பவர்கள்தாம். அவர்கள் அங்கு அப்படிக் காத்துக் கிடப்பது அதுவே முதல் தடவை அல்லவாதலால், அங்குள்ள மனிதர்கள் நாளாவட்டத்தில் ஒருவருக்கொருவர் பழகிக்கொண்டு விட்டார்கள்; எனவே சிலந்தி வலை பின்னுவதைப் போல் அவர்கள் அமைதியாக ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள்.


**(தொடர்ந்து வரும்.)**

---

**உம்மாவின் கண்களில் பளீர் என்ற ஒளிப் பிரவாகம்! வாப்பாவின் முகம் பூராவும் சந்தோஷச் செழுமை! என் மனதுக்கு ஒரு போர்வீரனின் தைரியம்!**

# உயிர் கொல்லித் தொழில்

- மாவனல்லை ரிஸ்கி ஷெரீப் -



இருபத்தியைந்து வயதில், ஆறடி உயரத்தில், பரந்த மார்பையும் முறுக்கேறிய கரங்களையும் வலுவான தோளையும் கொண்ட திடகாத்திரமான உடம்பு எனக்கு. தெளிவான கண்பார்வை.... கூர்மையான செவிப்புலன் தவிர பீ.ஏ. படிப்பு, மரதன், சைக்கிளோட்டம், நீச்சல், உதைபந்து என அத்தனை விளையாட்டுக்களிலும் ஈடுபாடு. இவற்றுக்கப்பால்.... போர் வீரர்களுக்கு இல்லாததோர் 'எக்ஸ்ட்ரா' குவாலி ஃபிகேசன் என்னவென்றால்....நான் விரும்பும்... என்னை விரும்பும் கவிதைகள் அடங்கிய இலக்கிய ஈடுபாடு எனக்குள் இருக்க....

"நான் ஆர்மியில சேரப்போறேன்...." என்றதும் என் பெற்றோர் என்னைப் புழுவாய்ப் பார்ப்பார்கள் என்று நான் நினைக்கவில்லைதான். அவர்களது முகத்தில் அப்படியொரு அதிர்ச்சி-பயம் எழுமென்று நான் எள்ளளவும் எதிர்பார்க்கவில்லைதான். என்றாலும்....

அவர்களது முகத்தில் ஒரு சோகமான அதிர்ச்சி படர்ந்ததை நான் உணரத்தான் செய்தேன். உம்மா சோபையிழந்து போன தன் முகத்தில் சுருக்கங்களைக் கொணர்ந்து.... கண்களை அகல விரித்துப் பார்க்க...

சமையல் கட்டோரமாய் ஒருங்கிணைந்திருந்த பாத்ரூம் வாசலுக்கு அண்மையாக, சுவரில் தொங்கிய கண்ணாடியில் முகம் பார்த்து சவரம் செய்து கொண்டிருந்த வாப்பா திடுமென நிமிர...."ஹுவ்" என்று தடுமாறினார். அவர் தாடையில் பிளேட் கீறிவிட கோடாய் ரத்தம் வழிந்தது.

"என்ன சொன்னே?"

வாப்பா கேட்க...

நான் தடுமாறினேன்.

"இவனுக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கு போல..... ஆர்மியில் சேரப் போகிறானாம்." உம்மா மெல்லமாய்ச் சொல்ல..... நான் மவுனமாயிருந்து பின் சொன்னேன்:

"நானும் பீ ஏ படிச்சு முடிச்சு ஒரு வருஷமாச்சு. இன்னும் எந்தத் தொழிலும் கிடைச்சபாடில்லை. என்ன பண்றது....? வீட்டுல உட்கார்ந்து தண்டச் சோறு சாப்பிட்டு சாப்பிட்டு....ஏண்டா பொறந்தோம்னு எல்லாமே வெறுத்துப் போச்சு. அதான்.....ஆர்மியில ஆள் எடுக்கிறானாம்.... பேப்பர்ல பார்த்தேன். எழுதிப்போடலாம்னு இருக்கேன்."

உம்மா பயத்தில் தடுமாறினாள். வாப்பா சுள்ளென்று வார்த்தைகளைச் சீறினார்.

உம்மாவின் கண்களில் கண்ணீர். என் மனத்துக்குள் ஏதோ அடைத்தது.

"த்த பாரு நீதான் கதை, கவிதை, இலக்கியம்னு நெறையப் பத்திரிகைக்கு எல்லாம் எழுதுவியே..... அந்தமாதிரி ஏதாவது பத்திரிகைத்துறையிலயாவது ஒரு கௌரவமான தொழிலைத் தேடிக்க மவன்.... ஆர்மித் தொழிலெல்லாம் வேணாம்டா...."

உம்மா சொல்லிக் கொண்டே போனாள்.... பத்திரிகைத்தொழில் போர்வீரனது வாழ்க்கையைவிட பயங்கரமானது - ஆபத்தானது என்பதை அறியாமல், எப்படியோ... தாயின் பாசத்துக்குள் நான் அடங்கிப்போனேன்.

சரியாகப் பதினைந்தாம் நாள்..., மதியச் சாப்பாட்டு வேளையில்..... உம்மா வாப்பாவுக்கு சாப்பாடு பரிமாறிக் கொண்டிருக்க..... திடுமென நான் சந்தோஷமாய் வீட்டினுள் நுழைய, உம்மாவும் வாப்பாவும் ஏதோ ஆச்சர்....யமாகப் பார்க்க, நான் சொன்னேன்:

"எனக்கு கொழும்பில பத்திரிகை ஆபிசுல வேலை கிடைச்சிருக்கு. நாளைக்கே வேலைக்கு வரச்சொல்லி லெட்டர் வந்திருக்கு."

-லெட்டரைக் காட்டினேன்.

உம்மாவின் கண்களில் பளீர் என்ற ஒளிப்பிரவாகம். வாப்பாவின் முகம் பூராவும் சந்தோஷச் செழுமை.

என் மனதுக்குள் ஒரு போர்வீரனின் தைரியம்.

-வாப்பா சாப்பிடுவதை நிறுத்திவிட்டு கடிதத்தை வாங்கிப் படித்து விட்டுச் சொன்னார்:

"நாளைக்கே வேலையில சேரணும்... எப்படியோ அதிகாலை பஸ்ஸுக்குப் போனால்தான் முடியும். உடுப்புப் பெட்டி..... சர்டிபிகேட் எல்லாம் ரெடி பண்ணு....." என்றவர் என்மேல் இருந்த பார்வையை உம்மாவின் பக்கமாய் திருப்பிச் சொன்னார், நான் என் அறையை நோக்கி நடந்தபடியே செவிமடுத்தேன். வாப்பாவின் குரல் கரகரத்தது.

"நமக்கு ஒரே புள்ள.... அவனும் வேலைக்கு கொழும்புக்குப் போகப் போறான். கோழிக்கறியாக்கி அவனுக்கு சாப்பாடு போடு செய்னம்பு......"

செய்னம்பு என்ற என் உம்மாவுக்கு நிச்சயம் கையும் ஓடாது காலும் ஓடாது . ஏனெனில்... அவ்வளவு சந்தோஷம்.

மதியம் சாப்பிட்டுவிட்டு (கோழிக்கறியோடு) ஒரு குட்டித்தூக்கம் போட்டுக் கொண்டிருந்தபோது (பகல் கனவுகளோடு) உம்மா அரக்கப் பரக்க என்னை எழுப்பினாள். நான் சுதாகரித்து எழ...உம்மாவின் முகம் முழுக்க வியர்வை படிந்துபோய் ஏதோ பீதி தென்பட்டது. உம்மாவே கேட்டாள்-

"உனக்கு பத்திரிகை ஆபிசுல என்ன வேலை கெடைச்சிருக்கு மவன்?"

"ஜேர்னலிஸ்ட்!"

"அப்படீனா...?"

"பத்திரிகையாளன்...!"

"ஐயையோ..." உம்மா பதறினாள்.

"ஏன்மா?"

"ஐயோ... உனக்கு இந்தப் பத்திரிகையாளன் தொழிலும் வேணாம்டா. ஆர்மித் தொழில்மாதிரி இதுவும் ஆட்கொல்லித் தொழிலாக இருக்கும் போலயிருக்கு... இப்போ ரேடியோவில விஷேச செய்தியில சொன்னாங்க..... யாழ்ப்பாணத்துல நடக்கிற சண்டையில விமானம் வெடிச்சு, ஆர்மிக் காரங்களோடு சேர்ந்து கொழும்புப் பத்திரிகைக்காரங்க மூன்று பேரும் கொல்லப்பட்டாங்களாம்.... பயங்கரமான தொழிலாகயிருக்கும்போல.... வேணாம்டா இந்தத் · தொழில்... உயிர் கொல்லித் தொழில் வேணாம். உனக்கு வேறு நல்லதொழில் கிடைக்கும்.இந்தத் தொழில் வேணாம் விட்டுவிடு மவன்....."

உம்மா யதார்த்தமாய் அழத்துவங்கினாள்.

# சொல்ல வைத்தவன்

அக்குறணை-என்.எம்.என். நவ்ரஜி

"நீங்கதான் என்ன மன்னிக்கனும்.....ம்... ஏன்னா, நானும் ஒரு விஷயத்த - உங்ககிட்ட மறச்சிட்டன்....!"

ஜவானி நிமிர்ந்து பார்த்தாள், கேள்விக் குறிகள் அவள் கண்களில் தெரிந்தன.

"ஆமா, நாளக்கி காலைல நாம ரெண்டு பேரும் பேராதன கார்டன்ஸ் போறோம்." என்று நிம்ரூஸ் அவளை நோக்கியே மீண்டும் சொன்னான்.

"அது......வந்து .....பேராதன .... கார்டன்ஸ்..... போயிருக்கேனே....." என்று மென்று விழுங்கி ஜவானி சொல்ல முயற்சிக்க,

"நோ.....நோ.... இது நாம ரெண்டு பேரும் சேர்ந்து போற முதலாவது ட்ரிப், மறுக்காதே ஜவானி, எல்லா ஏற்பாடுகளையும் செய்து வை" கணவன் சொல்லிவிட்டுச் சென்றபோது ஜவானிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

□□

வயதுக்கு வந்த பெரிய இடத்துப் பெண் போல, செழித்து வளர்ந்து நாணிக் கோணி காணப்பட்டது பேராதனைப் பூங்கா.வசந்தகாலச் சுவடுகள் அப்பட்டமாக தெரிந்தன. மரங்களைச் சுற்றி விழுந்த மலர்களை, இளமை உள்ளங்கள் பார்க்கும் போது, அவற்றின் மேல் பாய்ந்து விழுந்து கண்ணயர்ந்து கனவுகள் காண வேண்டும் என்ற நினைப்பைத் தோற்றுவிக்கும்.

நிம்ரூசும் இரசித்துக் கொண்டு வந்தான். கூடவே 'உம்' என்று வந்துகொண்டிருக்கும் ஜவானியைப் பார்தபோது பெருமூச்சுத்தான் வந்தது.

"அந்த இடத்தப் பாத்தியா ஜவானி? எவ்வளவு அழகாயிருக்கு.... விழுதுகளால காவலரண் கட்டி.....வா, அங்க கொஞ்ச நேரம் இருப்போம்...." என்று நிம்ரூஸ் அழைத்தபோது மௌனமாகப் பின் தொடர்ந்தாள்,

"ஜவானி, எனக்கு மனசே சரியில்ல....."

அவள் ஏறிட்டுப் பார்த்தாள்,

"ஆமா உங்கிட்ட ஒரு உண்மையை மறச்சுட்டன்.... அதச் சொல்லத்தான் உன்னை இங்க கூட்டிக்கிட்டு வந்தேன்"

கண்ணீர் அரும்பிய கண்களுடன் நிம்ரூஸ் கூற, ஜவானி நிதானமாக - ஆழ்ந்து தன் கணவனைப் பார்த்தாள்.

"என்னை மன்னிச்சிடு ஜவானி, உன்னைக் கலியாணம் முடிக்க முன்னர், நானும் ஆஷா என்ற பொண்ணும் ஒருத்தர ஒருத்தர் விரும்பிக்கிட்டு இருந்தோம், பிறகு ஆஷா பணத்துக்கு ஆசப்பட்டுக்கிட்டு வேறு ஒருத்தர கலியாணம் பண்ணிக்கிட்டு அவுஸ்திரேலியா போய்விட்டாள். வீட்டாரின் வற்புறுத் தலால்தான் உன்னைக் கரம் பிடிச்சேன். என்னை மன்னிச்சிடு ஜவானி"

கண்ணீர் மல்க நிலம் நோக்கியவனாகக் கூறி முடித்தான் நிம்ரூஸ்.

ஜவானியும் தாரை தாரையாக கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

"ம்.....ம்.....நீ.....நீ.....ங்கதான் என்ன



மன்னிக்கணும்.... ஏ..ன்னா நானும் ஒரு விஷயத்த உ..உங்ககிட்ட ம..மறச் சிட்டேன்....அது மனச உறுத்திக்கிட்டே இருக்கு.... அதாலதான் .....உங்களோட நெருங்கி வாழ முடியாம இருக்கேன்....."

நிம்ரூஸ் யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். ஜவானி தொடர்ந்தாள்,

"உங்களப் போலவே... நானும் அன் பாஸ்ன்னு...... சொல்லி ஒருவரும் ஒருத்தர ஒருத்தர் விரும்பிக்கிட்டோம், அவருதான் என் வருங்காலத் துணைவர்னு நெனச்சுட்டி ருந்தேன். நாலு மாசம் இருக்கும்.... பணத்துக்கு ஆசப்பட்டு கைவிட்டுட்டாரு...... நான் நல்லாவே ஏமாந்துட்டேன்.....இந்த விஷயத்தால எனக்கு கலியாணமே கைகூடல்ல...... இதெல்லாம் மறச்சி உங்கட தலைல என்னக் கட்டிவச்சிட்டாங்க..... உங்களுக்கு நான்தான் துரோகம் இழச்சிட் டன்...... என்ன மன்னிச்சிடுங்க......"

ஜவானி விம்மத் தொடங்கியிருந்தாள்,

நிம்ரூஸ் அவளை உற்றுப்பார்த்தான்,

"எல்லாம் சொல்லிட்டே இல்ல ஜவானி? - வேற ஒண்டும் இல்லையே....?" நிம்ரூஸ் திடீரென ஏளனமாகச் சொல்லிச் சிரிக்க, ஜவானிக்கு மின்சாரம் தாக்கியது போல் இருந்தது.

இப்போது நிம்ரூஸ் வாய்விட்டுச் சிரித்தான்.

"ஜவானி! இந்த விஷயங்கள உன் வாயால எடுக்கத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டேன்....... என்ன ஜவானி, அப்படிப் பார்க்கிறே......? இன்னும் ஒண்டு - இந்த ஆஷா, நான் பழகினது எல்லாம் சுத்தப் பொய்......"

நிம்ரூஸ் முடிக்கவில்லை, ஜவானிக்கு மயக்கம் வரும்போல-அல்ல வந்துவிட்டது.

"நீங்க...... நீங்க....... என்ன சொல்றீங்க.....?"

ஜவானி தலையைப் பிடித்துக் கொண்டாள்.

உடனே, ஆதரவாகக் கையைப்பிடித்து, விழாதவாறு தழுவிக் கொண்டான் நிம்ரூஸ், அவனை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மெதுவாகக் கேட்டான்,

"குழம்பிட்டியா?...... ஸ்ஸ்...... பயப் படாதே ஜவானி." குழப்பம் தெளியவில்லை.

"உன்னைப் பத்தி ஏற்கனவே எனக்குத் தெரியும்." பரிதாபமாகப் பார்தாள்.

"உன்னைக் கைவிட்டுச் சென்ற அன்பாஸ் என் நெருங்கிய நண்பன்- என்ன உனக்குத் தெரியவாய்ப்பில்ல. கொழும்பில இருந்தேன். உன்னைக் கைவிட்ட விஷயத்துக்கு அவனோட எவ்வளவோ வாதாடிப்பார்த்தேன், பணம் அவன் கண்கள மறச்சிட்டுது. அதுக்குப் பிறகு நடந்ததும் எனக்குத் தெரியும், நண்பன் செய்த தப்புக்காக காலமெல்லாம் வாழாவெட்டியாக இருக்கணுமா? ஏன் நீ ஒரு புது வாழ்க்கையை அமைச்சுக்கப் படாது? நான் விரும்பித்தான் உன்னைக் கலியாணம் முடிச்சன். இது உனக்குத் தெரியாது- இல்ல."

ஜவானி இன்னும் சிலையாகத்தான் நின்றாள்.

"உன் கடந்த கால வாழ்வ என்னிடம் வாய்விட்டுச் சொல்ல முடியல. அதால, அது மனசுக்குள்ள இருந்துட்டு உன்னை குடைஞ் சிக்கிட்டே இருந்துச்சு.... என்னோட நெருங்கிப் பழக உன் மனசாட்சி தடுத்திச்சு... எங்கட மெரெஜ் நடந்து ரெண்டு வீக் ..... நீ அந்நியமாகவே நடந்துக்கிட்டு வந்தாய்.... என்னப் பொறுத் தவரைல உன்னப் புதுமைப் பெண்ணா பார்க்க விரும்புறன்..... இதுக்காகத்தான் ஒரு சின்ன நாடகம் போட்டு பழைய சம்பவங்களை வெளியே எடுத்து வீச வச்சன். இந்த பேராதனை கார்டன்ஸ் விசிட், எல்லாம் முன் ஏற்பாடுதான். இதுக்கு மேல உன் முடிவுதான்."

நிம்ரூஸ் அழுத்தம் திருத்தமாகக் கூறி முடித்தான். அப்போதுதான் ஜவானியால் நிம்ரூஸை முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

ஐந்துநிமிட நேர மௌனம்.

ஜவானி, மெதுவாக தலை உயர்த்தி நாணத்துடன் புன்னகை பூத்தாள்.

# சொல்லாமல் தனிவழியே....

அம்தரவல்ல நிலா வாசன்



ஒரு உண்மை கதையாகிறது ⇒

இந்திகா பதினாறு வயதுப் பருவச் சிட்டு. காண்போரைக் கவரும் கவர்ச்சியும் கண்ணொளிக் கிளர்ச்சியும் அவளிடம் அதிகமாகவே இருந்தன. தங்கல்ல கிராமத்தின் தங்கப் பதுமையாக வளர்ந்தாள் அவள்.

ஓ/எல் பரீட்சைக்காக படித்துக் கொண்டிருந்த இந்திகாவுக்கு கல்வியில் போன்றே பொதுச்சேவையிலும் ஈடு பாடுண்டு. எப்போதும் பாடசாலை ட்யூஷன்; இல்லை என்றால் தங்கல்ல ஹொஸ்பிட்ட லில் சேவை என்று அவள் நாட்கள் சுறுசுறுப்பாக நகரும்.

அப்படியானால் எப்படி அவள் இருளுக்குள்ளானாள்? அப்படி ஒரு புயலுக் குள் அகப்பட யாருக்கு அவள் என்ன பாவம் செய்தாள்?

அந்த நாள் கடந்த மார்ச் மாதத்தின் ஒரு சனிக்கிழமை. இந்திகா தன் நண்பி வீடு போய் வரத் தீர்மானித்தாள். எப்போதும் ஏதோ ஒரு தேவைக்காக அலைந்து கொண்டிருக்கும் இந்திகாவுக்கு வீட்டில் சொல்லி விட்டுப் பயணப்படக் கூடிய அவசியம் இருக்கவில்லை. தனிவழிப் பயணம் எப்போதும் அவளுக்குத் தடையாக இருந்ததில்லை.

அன்று சூரியன் சுட்டெரிக்கும் நேரம். சூன்யமும் தனிமையும் நிறைந்த சரளைக் கல் பாதையில் அவள் தன் நண்பி வீடு நோக்கி நடந்துகொண்டிருக்கும் போது....

விதிக்கு விடையெழுதும் கதை நடக்க ஆரம்பித்தது. அவளை நெருங்கி வந்து நின்ற ஆட்டோ ஆபத்தை எடுத்து வர உள்ளே அமர்ந்திருந்த மூவரும் காமத்தைப் பூசிப்பார்தார்கள். அவளுக்கு சூழ்நிலை புரிந்து கொண்டிருக்கையிலேயே.....

இந்திகா ஆட்டோவுக்குள் இழுத்துப் போடப்பட்டாள். உடைப் பெடுத்த அவளின் அழுகையும் ஓலமும் அவர்களை எதுவும் செய்துவிடவில்லை. அந்தத் தனிவழிப் பாதையில் தாவரங்களைத் தவிர அவள் ஓலம் கேட்டு உதவ வேறு மனிதர்களும் இல்லை.

இந்திகா தன் சார்பில் தனிமையானாள். மூன்று மிருகங்களை முறியடிக்கும் அவள் முனைப்பு முடங்கிப் போனது. ஆட்டோ பாதையைக் கிழித்துப் பறந்து வந்து ஒரு ஹோட்டலின் முன்னால் நிற்க, தனக்கு

மாலை மங்கும் நான்கு மணியளவில் கதவு மெதுவாகத் திறக்க இந்திகாவுக்கு நடுக்க மெடுக்கிறது. ஒருவர் பின் ஒருவராக உள்ளே நுழைந்த அந்த மூன்று பேரும் கொண்டு வந்த சாப்பாட்டு பார்சலை அவளை நோக்கி எறிய, தள்ளி விட்டாள். தன்னிலை யுணர்த்திக் கெஞ்சினாள். வீடு போக அனுமதிக்கும்படி வேண்டி நின்றாள். அனைத்து வேண்டுதல்களும் புறக்கணிக் கப்பட்டன. ஒருவன் மாத்திரம் தரித்து நிற்க மற்ற இருவரும் வெளியேறினர். தரித்தவன் அவளுடன் சம்பாஷிக்க முயல புறக்கணித் தாள். அதற்காக வந்த விதி வெறும் கையுடன் போகுமா-.....?

வெளியில் போன இரு வாலிபர்களும் இரவு ஏழு முப்பது மணியளவில் வந்து சேர கையில் சாராய போத்தல்களும், கொறிப்பதற்கு சிறு பொட்டலங்களும் இருந்தன. இந்திகா ஒரு பறவைக் குஞ்சாகப் பதுங்கினாள். சுவர் பக்கம் தலை வைத்து கண்ணீர் வடித்தாள்.

மது குடித்து கண்களில் வெறியோடு அவளை அணுகிய ஒருவன் அவள் உடைகளைக் கழற்றச் சொல்ல, மறுத்தாள்.

நடக்கப் போகும் அபாயம் பற்றி அச்சொட் டாக புரிந்தது அவளுக்கு.

உள்ளே போக மறுத்தாள். உடைப் பெடுத்த அழுகையை ஆயுதமாக்கி கெஞ்சி நின்றாள். அந்தக் கொடிய மிருகங்களுக்கு புள்ளி மானின் கெஞ்சுதல் கூட கொஞ்ச லாகியது. இழுத்துச் செல்லப்பட்டு ஏற்கனவே 'புக்' செய்யப்பட்டிருந்த அறைக்குள் அடைக்கப்பட்டாள் இந்திகா. அவள் கண்கள் குழமாகின. தான் தீனியாகப் போவதை நினைத்து தேம்பியழ ஆரம்பித்தாள். ஆனாலும் இனிமேல் என்ன நடக்கப் போகிறது என்று எதிர்பார்ப்பதைத் தவிர அவளால் வேறு எதுவும் செய்ய முடிய வில்லை.

வெறுத்தாள். ஆனால் அவளால் போராடவும் தண்டிக்கவும் முடியவில்லை. அவள் விரும்பாமலே அவளது உடைகள் அகற்றப் பட்டன. ஒரு ஆணின் பலத்தை அந்தப் பெண்மையால் சமாளிக்க முடியவில்லை.

அவள் தன் குரல் வலிமையைப் பயன்படுத்திக் கத்தியபோது பக்கத்து அறையில் ஒரு வானொலி தீப்பிடித் தவர்களின் ஓலம்போல் திடீரெனக் கத்த அவள் ஓலம் அந்த அறைக்குள்ளேயே அடங்கிப் போனது.

மறுநாள் காலையில் இந்திகா அசதி முறித்து எழுகிற போது அவளது உலகமும் இருண்டு கிடந்தது.

தம் மகளைக் காணவில்லை என்று அவள் பெற்றோர் அங்கலாய்த்துக் கொண்டிருக்க.....அவள் பாதையில் தனித்து விடப்பட்டாள். இந்திகா தன் வீடு போக வில்லை. தன் பெற்றோருடன் வெளிப் படையாகக் கதைக்க முடியாது .....என்று எண்ணினாள் போலும். ஆன்டீ வீடு போனாள். விடயங்களை ஒப்புவித்து விட்டு விமோசனத்துக்கு வழி தேடினாள்.

அடுத்த சில நிமிடங்களில் இந்திகா தன் ஆன்டியுடன் தங்கல்ல போலீஸ் 'எஸ்பி' முன்னிலையில் சகல விடயங்களையும் ஒப்புவிக்க, உடன் நடவடிக்கை எடுக்கப் படுகிறது. 'எச்கிவ்ஜ' தலைமையிலான ஒரு குழு குறிப்பிட்ட ஹோட்டல் போய் அந்த மூன்று மிருகங்களுக்கும் விலங்கு மாட்டியது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உத்தரவாதமளிக்கப்பட்டது.

இந்திகா மாத்தறை ஹொஸ்பிட்டலில் மருத்துவப் பரிசோதனைக்காக அனுமதிக்கப் பட்டாள். ஆனால் அவள் வாழ்க்கை ......?

**சொல்லாமல் தனிவழி போக வேண்டாம் சோதரி!**

# வெளிநாட்டு மாப்பிள்ளை

கிண்ணியா சபருள்ளா



மரகதத்திற்கு தன் ஒரே மகளான கல்யாணியை வெளிநாட்டில் வேலை பார்க்கும் ஒருவனுக்கு திருமணம் முடித்துக் கொடுத்து அவளை வெளிநாட்டில் செட்டிலாக்க கொள்ளை ஆசை. மற்ற வர்களிடம் 'என் மகளும் மாப்பிள்ளையும் வெளிநாட்டுலதான் வசிக்கிறாங்க' என பெருமை அடித்துக்கொள்ளலாமே.

கல்யாணிக்குக்கூட ஃபொரின் மாப்பிள்ளை கட்டத்தான் ஆசை. அதனால் உள்ளூர் மாப்பிள்ளைமார்களை வெகு உதாசீனம் பண்ணினாள். அவள் ஃபொரின் கனவுகளில் அடிக்கடி மிதந்துகொண்டி ருந்தாள்.

மரகதத்தின் திட்டப்படி தரகர் பொன்னையா அன்று வந்திருந்தார். "நீங்க சொன்ன மாதிரி செஞ்சேனுங்க. பொடியன் கனடாவில வேலை பார்க்கிறவன். மூணு வருசம் கழிச்சி இப்பதான்வந்திருக்கான். மீண்டும் ஒரு மாசத்துல கனடா திரும் பணுமாம். அதான் அவசரமா வந்தேனுங்க. உங்களுக்கு விருப்பமா இருக்கும்னு நினைக் கிறேன்...ஆ...மறந்தே போயிட்டேன். அவங்க நல்ல பசையுள்ள குடும்பம். பொடியனக் கேட்டு ஏக போட்டியாம். நீங்க சுருக்கா முடிச்சீங்கன்னா வசதியாயிருக்கும். இந் தாங்க பையனோட ஃபொடோ." சொல்லி விட்டு ஃபொட்டோவை மரகதத்தின் கையில் கொடுத்தார்.

வாங்கிப் பார்த்த மரகதம் மனதிற்குள் திருப்திப்பட்டுக்கொண்டாள். கல்யாணிகூட வாங்கிப் பார்த்தாள். 'சா, எவ்வளவு அழகாயிருக்கார். இவரக்கட்டிக்கப்போறவ பாக்கியசாலிதான்.' முகம் சிவந்தாள். மகளின் நிலையைக் கண்ட மரகதம்மூத்த மகன் சேகரனின் சம்மதம் பெறாமலே தலை கொள்ளாத சந்தோசத்துடன் "அப்ப சரிங்க எல்லாம் பார்த்து முடிச்சிடுங்க." என்றாள்.

அடுத்த காரியங்கள் யாவும் மளமள வென நடைபெற்றன! பெண்பார்க்கும் படலம்...அதில் எவ்வளவு சீதனத்தொகை- அத்தோடு நல்லதினத்தில் நிச்சயதார்த்தம் செய்வதாய் முடிவெடுக்கப்பட்டது.

மாப்பிள்ளை கல்யாணியை ஓரக் கண்ணால் சைட் அடித்து விட்டுப் போனான். கல்யாணிக்குள் ஏக்கம் எட்டிப் பார்த்தது, எப்போதும் அந்தத் தினம் வரும் என்று.

நிச்சயதார்த்தத்திற்கு இன்னும் ஒரே நாள் இருக்க, காலையிலேயே டெலிபோன் அலறியது! மரகதம் தான் எடுத்தாள். "ஹலோ... அப்படியா....உடனே வாறோம்." முகம் மாறினாள். அடுத்து கருக்கட்டிய மேகங்களை முகத்தில் கட்டிக்கொண்டு கண்ணில் பீதியோடு ஹொஸ்பிட்டல் நோக்கி கல்யாணி, மரகதம், சேகரன் மூவரும் புறப்பட்டனர்.



கல்யாணிக்கு பார்த்த கனடா மாப் பிள்ளை வேகமாக மோட்டார் பைக்கை ஓட்டி வந்தபோது எதிரே வந்த லொறியுடன் மோதிவிட்டானாம்.....அடுத்து இங்கே ஹொஸ்பிட்டலில் படுத்துக் கிடக்கின்றான். அவனது அப்பாதான் போனில் விசயத்தைச் சொன்னார். கல்யாணி உள்ளுக்குள் கதறி அழுதாள். இல்லாத கடவுள்களைஎல்லாம் வேண்டினாள். மரகதமோ ' இதென்னடா அபசகுனம் மாதிரி' என துக்கப்பட்டுக் கொண்டு நேர்த்திவைத்தாள். பல மணி நேரங்களின் பின் ஒபரேசன் தியேட்டருக்குள் இருந்து டாக்டர் வெளிப்பட்டார். மாப்பிள்ளை பையனின் குடும்பத்தாரை விட கல்யாணி முந்திக்கொண்டாள். "டாக்டர் அவருக்கு எப்படி இருக்கு? ரொம்ப சீரியஸா?" அழுதாள். அவளை ஏறிட்ட டாக்டர் "நீ அவருடைய மனைவியா?" சந்தேகத்தோடும் கேள்விக்குறியோடும் கேட்டார். மரகதம் "இல்ல டாக்டர்; அவருக்கும் அவளுக்கும் பேசி இருக்கு. நிச்சயதார்த்தம் வச்சிருந் தோம். ஆனா.... அதற்கிடையில இப்படி யாயிற்று." சோகம் பூசினாள்.

நிம்மதி மூச்சொன்றை விட்ட டாக்டர் "எப்படியோ நீங்க தப்பினீங்க; இந்த விபத்தால இரத்தம் நல்லா சேதமாயிட்டு. நாங்க இரத்தம் கொடுக்க அவருடைய இரத்தத்தை பரிசோதிச்சோம். அப்பதான் அந்த பயங்கர உண்மை தெரிந்தது. அவர்ட குருதியில இப்ப 'எய்ட்ஸ்' வைரஸ் மரணத்தின் கதை எழுதிட்டு இருக்கு. எப்படியோ உங்க மகள் தப்பினா. ஆமா...... அவர் ஃபொரின்ல இருந்து வந்தாராமே......." கல்யாணியினதும் மரகதத்தினதும் கால்கள் பூமிக்குள் நழுவிக்கொண்டிருந்தன.

# ஏமாற்றம்



ஹப்புத்தளையூர்-எஃப். லெனாட் குமார்

அன்று மஹரகம பஸ்ஸில் அளவுக் கதிகமான சனம் நிரம்பி வழிந்திருந்தது. வெய்யில் பலமாக இருந்ததால் வியர்வைத் துளிகள் என் உடம்பை ஈரப்படுத்தியிருந்தன. கோட்டைப் புகையிரதப் பாதைக்கு முன் 'தொத்தி' ஏறிக் கொண்டதால் தான் அந்த அப்பிள்பழ கன்னத்தழகிக்கு அருகில் அமரவரம் கிடைத்திருந்தது.

பேரூந்து நடத்துனரிடம் 3 ரூபாய் கொடுத்து டிக்கட் பெற்று சம்பளப்பணத்தை ஒழித்து வைத்திருந்த பேர்சுக்குள் பத்திரப் படுத்திக் கொண்டேன்.

பின், பக்கத்தில் அமர்ந்திருந்த பைங் கிளியை நோட்டம் விட்டேன். உண்மையில் அவள் அழகிதான். நான் கூர்ந்து பார்த்ததை அவதானித்தவள் பட்டென என்னை நோக்க நான் கண்விலக்கி முன்நோக்கி பார்த்து உதடு கடித்தேன்.

பேரூந்து 'தும்முள்ள' சந்தியை வந்தடைய, சிலர் இறங்கி, பலர் ஏறியிருந்தார் கள். அதனால் எனக்கு அவளை இடித்துப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. சற்று நேரத்துக்குப் பின் கீழே குனிந்தவளை நோக்கிய எனக்கு மூக்கு வியர்த்தது. (செருப்பை கழட்டுகிறாளா என்று!)

ஆனால் கீழே குனிந்தவள் எதையோ கையிலேடுத்து "மேக்க ஹெரயாகேத?" என்று நீட்டிய மென்கரத்துக்குள் 50 ரூபா நோட் டொன்று தவித்துக் கொண்டிருந்தது. அந்தச் சில கணத்துக்குள் எனக்குள் ஆயிரம் எண்ணங்கள் உருவாகி மறைந்து போயின.

"ஒவ் ....மகே தமய்! ஸ்தூதிய்!" என்று வாங்கியபோது அவள் விரலை மெல்ல தடவிவிட்டேன். அவள் சிரித்துக் கொண்டாள். உண்மையில் இந்த 50 ரூபா என்னுடைய தல்ல. கிடைப்பதை ஏன் நழுவவிடுவான் ? அதனால்தான் என்னுடையதென்றேன். தொடர்ந்து என்னருகில் அவள் ஒட்டி வந்தாள். அதற்கிடையில் நான் இறங்க வேண்டிய 'மயூரா பிளேஸ்' வந்திருந்தது. மீண்டும் அவள் மென்கரத்தைத் தொட்டு அமுக்கிவிட்டு இறங்கிக் கொண்டேன். பஸ் என் பார்வையை விட்டு மறைந்திருந்தது.

50 ரூபா கிடைத்த மகிழ்ச்சியிலும் புது அனுபவம் தந்த திருப்தியிலும் அலை மோதிய மனதை கட்டுப்படுத்திக் கொண்டு பொக் கற்றுக்குள் கைவிட்ட என் மனதுக்குள் திக்கென்றது. சம்பளப் பணம் வைத்திருந்த பர்ஸ் காணாமல் போயிருந்தது.

எனக்கு லேசாக தலை சுற்றியது. நடந்தது என்ன வென்று நொடியில் விளங்கி விட்டது. ஆனால் பைங்கிளி என். பர்ஸையும் திருடிவிட்டு என் தலையில் கட்டிவிட்ட 50 ரூபா நோட்டுமட்டும் என்னை பரிதாபமாக பார்த்துக் கொண்டிருந்தது.



தருவது ரசிகன்

இலக்கிய நயம்

# உயிரே விலகாதே!

தலைவாழை இலை போட்டு தன் நாயகனின் நாவுக்குச் சுவையாக விருந்திட்டாள்.

நாலு கறியோடு நாசி கமகமவென்று மணம் அறிய, நாவு ஆகா இதுவன்றோ சுவையென்று சிந்தைக்குச் செய்தி சொல்ல, "கண்ணே உன் கைப்பக்குவம்தான் என்னே!" என்று வியந்து சொல்லி ஒரு பிடி பிடிப்பான் வழக்கமாக.

ஆனால், இன்றோ திருப்தியாய் இல்லாதது போல விருந்துண்டு கை நனைத்தான்.

தேவி வாடிப்போனாள். அவன் கை நனைக்கச் சென்ற போது உப்பிருக்கிறதா, புளிப்பிருக்கிறதா, காரம் சரியாக இருக்கிறதா என்று நாலு கறியிலும் கொஞ்சம் நாவில் வைத்து உணர்ந்து பார்த்தாள்.

'எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது' என்று நினைத்துக் கொண்டாள்.

தாம்பூலம் தரித்துக் கொண்டு இருந்தான் மணிமாறன்.

"இன்று சமையல் நன்று இல்லையோ?" என்று கேட்டாள்.

"நீ சமைத்தால் என்று தான் நன்று இன்றிப் போயிருக்கிறது. இன்றும் அப்படித்தான் பிரமாதம்."என்றான். ஒப்புக்காகச் சொல்கிறானா அல்லது மனம் ஒன்றிச் ,சொல்கிறானா? அவளுக்குள் சந்தேகம்.

"திருப்தியாக உண்ணவில்லையே நீங்கள்!"

அவன்-மணிமாறன் நிமிர்ந்து புன்னகைத்தான். தேவிக்கோ அவன் புன்னகையிலும் பூரிப்புக் குறைந்திருப்பதாய் தெரிந்தது.

இரவு பஞ்சணையில் மல்லாந்து விழிகளை மூடியபடி கிடந்தவன், தேவி வந்ததும் தெரியாமல் சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

பஞ்சணையில் அமர்ந்த தேவி தன் இடக்கரம் நீட்டி அவன் மார்பை இதமாய் வருடினாள்.

மெல்லக் கண் திறந்து, தன் மார்பில் தவழ்ந்த அவளின் கரம்மீது தன் கரம் வைத்து அழுத்திக் கொண்டான்.

"என்னத்தான், உங்கள் முகத்தில் வாட்டம் காணத்தான் இருப்பது ஏன் அத்தான்? எனக்கும் சோகம்தான்!"

என்றாள் தேவி. மெல்ல முகம் கவிழ்ந்து மணிமாறனின் நெற்றியில் இதழ்களை ஒற்றியெடுத்தாள்.

அளவாக வெட்டிவைத்த பலாச்சுளைகள் போனற அவள் இதழ்கள், நிலாவில் ஒரு துண்டை வெட்டிச் செய்தது போன்ற அவள் நெற்றி, மன்மதனின் பொல்லாத ஆயுதங்களாக மார்பில் கனிந்த இரு பலா, மாலை தொடுக்கும் நூலாய் மெலிந்த இடை, 'எடுத்துக்கொள் இன்பக் கதை படித்தே இந்த இரவைக் கொல்' என்பதுபோல் அழைக்கும் விழிகளால் அவனை விழுங்கிக் கொண்டிருந்தாள் பொன் வண்ண அன்னப் பெண்.

வாட்டத்தை விரட்டிவிட்டு பூந்தோட்ட மேனியில் நாட்டம் கொண்டான் மணிமாறன்.

தேவியின் முதுகை வருடித் தவழ்ந்த கரம் சுற்றிவந்து மடியில் ஊர்ந்து செல்ல, கூச்சத்தால் மடங்கி, அவன் மார்பில் முகம் புதைத்து தானும் விஷமம் செய்தாள் தேவி.

அவள் மடங்கிக் குனிந்தபோதும் அவள் மடிமீது தங்கிவிட்ட மணிமாறனின் கரம் விஷமத்தின் உச்சிக்கு விரைந்து கொண்டிருந்தது.



தேவி நெளிந்து நிமிர முயல மணிமாறன் மறு கரம் அவள் முதுகை அழுத்தியது.

"விருந்துண்ணும் போது மட்டும் இந்த உற்சாகம் எங்கே போனதாம்?"

அவன் வயிற்றை இதமாக விரல்களால் வருடிக்கொண்டு கேட்டாள். அவன் நகைத்தான்.

"இப்போது மட்டும் என்ன மருந்தா உண்ணுகிறேன்."

"பேச்சுக்கு ஒன்றும் குறைச்சலில்லை."

"வேறு எதில் குறைச்சல்? வாழை மடல் விருந்தில் போதும் என்று நான் சொன்னால் உனக்குக் கோபம் வரும். வண்ண உடல் விருந்தில் வேண்டும் இன்னும் வேண்டும் என்று நான் எடுத்தாலும் போதும் இன்று-இது போதும் என்று நீ தடுப்பாய். இப்போது சொல்! குறைச்சலாயத் தருவது யார்?"

"வேறு பேச்சே வராதாக்கும்...."

"சபை அறிந்து பேசுபவனே சான்றோன்! தருணம் அறிந்து வாள் வீசுபவனே சரியான வீரன்!"

"அடடே....அவ்வளவுதானா?"

"இன்னும் உண்டு. கேள்; பாற்கடல் எதிரே இருக்க பச்சைத் தண்ணீர் தேடிக் கொண்டிருப்பவன் படுமுட்டாள்! தேனுக்குள் நனைத்தெடுத்த சுளையிதழ்கள் காத்திருக்க பசிக்கிறதே என்று தவிக்கின்றவன் படு மூடன்!"

"சே..ச்....சே....என்னால் தாங்க முடியவில்லை."

"ஏன் கண்ணே?"

"என்னத்தான் தன்னையே தான் இப்படித் தாழ்த்திக் கொள்ளலாமா?"

கேலி புரிந்து மணிமாறன்,

"அடியே கள்ளி! என் வாளைப் பறித்து எனக்கே திருப்புகிறாயா நீ? நானோ முட்டாள்...? நானோ மூடன்...? தங்கத் தாம்பாளத்தில் துணி மூடிக் கிடக்கும் அறுசுவை விருந்து ஆறிப்போகும் என்று எண்ணாமலிருந்து ஏதேதோ கதைகள் பேசும் நான் மூடன்தான்! மூடன் இப்போது வீரனாகிறான் பார்!"

தேவியின் இதழ்கள் போர்க்களமாகின. வண்ண மேனிக்கு இருள் மட்டும் துகிலாய் நின்றது. நிலா கூட எட்டிப்பார்ப்பது நாகரீகம் இல்லையென்று மேகத்தை இழுத்து தன் முகத்தை மூடிக்கொண்டது.

புலன்கள் யாவும் மயங்கும் வேள்வி. வேள்வி முடிய தேவி கேட்டாள்,

"கவலைகள் யாவும் காற்றில் கரைந்த கற்பூரமானதோ?"

மணிமாறன் அதற்குப் பதில் சொல்லாமல், பார்வை ஒன்றையே பாவையின்மீது செலுத்தினான்.

"மீண்டும் வேதாளம் முருங்கை மீதிலோ?"

"தேவி! சொல்வதைக் கேட்டு நீ சுளிக்கக் கூடாது முகம்."

"அப்படி என்னதான் சொல்லப் போகிறீர்கள்?"

"எண்ணி இருபது நாள், இருபதே நாள், இரண்டு பத்து நாள்....."

பீடிகை போட்டுவிட்டு தொடராமல் நிறுத்த, அவள் கேட்டாள்,

"விரதமிருக்கப் போகிறீர்களா? அப்பாடா தப்பித்தேன்!"

அவள் செவ்விதழில் பூத்த கேலிச் சொற்கள் அவனை மகிழ்விக்கவில்லை. வாட்டமாய் சொன்னான்,

"விரதமல்ல, இருபது நாள் விலகியிருக்க வேண்டும்."

"எ..என்ன?"

"ஆம் தேவி! வெளியூர்ப் பயணம்!"

வாடிய மலரானது தேவியின் வதனம். அவன் மார்பில் குறுக்காக போட்டிருந்த தனது கரத்தை எடுத்துக் கொண்டாள்.

நிமிர்ந்து பஞ்சணையில் அமர்ந்து கொண்டாள். மணிமாறன் அவள் நிலை புரிந்து,

"கோபமா தேவி?"

"உச்சிக்கு அழைத்துச் சென்றுவிட்டு அங்கிருந்து உருட்டிவிட்டால் கோபமா வரும்? உயிர்தான் போகும்!"

"தேவி..!"

"சொன்னதற்கே இப்படி பதறுகிறீர்களே, சொன்னதுதானே நடக்கும்-நீங்கள் சொன்னபடி நடந்தால்!"

"என்ன தேவி இது, சிறு குழந்தையா நீ?"

தேம்பி அழத் தொடங்கினாள் தேவி. விழிகளில் இருந்து சொரிந்த நீர் மணிமாறனின் முடிவை எரித்தது.

இருபது நாளைப் பத்து நாளாக குறைத்துக் கொள்ளலாம் என்று புது முடிவு செய்தான்.

"அழாதே தேவி. என் முடிவைக் கேள்!"

அவள் அழுதுகொண்டே சொன்னாள்:

"நான் சொல்வதைக் கேட்டு பின் உங்கள் முடிவைச் சொல்லுங்கள்"

"சொல்!"

**"பிரிந்து செல்லாத நிலையாக இருந்தால் எனக்குச் சொல்; பிரிந்து சென்று விரைந்து வருதைப் பற்றியானல் அது வரையில் உயிர் வாழ வல்லவர்க்குச் சொல்"**

**"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்**
**வல்வரவு வாழ்வார்க்கு உரை"**

அதிகாரம் 116-குறள் 1151

மணிமாறன் வெளியூர் பயணத்தை கனவிலும் நினையாத முடிவு செய்தான்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—103

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | |
| | ■ | | ■ | | ■ | ■ |
| 4 | | | | | ■ | 5 |
| | ■ | | ■ | 6 | | |
| | 7 | ■ | 8 | | | |
| ■ | | ■ | | | ■ | |
| 9 | | | | ■ | 10 | |

### இடமிருந்து வலம்

01 அரசாங்கம் வருமானம் பெறுவதற்கு இது அவசியம்.
03. பலருடைய அனுதாபத்தை இயல்பாகவே இவள் பெறுவாள்.
04. ஒரு குடும்பத்தில் என்றும் இது இருந்தால் வேறு குறையே ஏற்படாது.
06. இந்தியாவில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டியடிப்பதற்குக் காரணகர்த்தாக்களில் ஒருவர்.
08. பணிபுரிவதே இவர்கள் தொழில்.
09. சத்தியாக்கிரகம் மூலம் நடைபெறும் ஒரு வகைப் போராட்டம்.
10. அழகான ஒன்றை அள்ளி முகர தடையாக நிற்கிறது.

### மேலிருந்து கீழ்

01. இருளைப்போக்க வல்லது.
02. நம்மைத் தாங்கி நிற்பது.
03. இது பிடித்தவர்கள் விரைவில் அழிந்து போவார்கள்.
05. காலையில் இருந்து மாலைவரை நம்மைத் தாக்குகின்றன.
07. இந்தக் காலத்தில் கையில் இது இல்லாமல் சிலருக்குத் தூக்கம் வராது.
08. காலமறிந்து நம்மை விழிப்பூட்டும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 10.06.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-103
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-101ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 கி | ளி | 2 யோ | 3 பா | ட் | ரா | ■ |
| ர | ■ | கி | ரி | ■ | 4 ம | 5 து |
| 6 க | 7 தி | ■ | ச | ■ | தி | ம் |
| ம் | ரு | ■ | 8 வா | ய் | ப் | பு |
| ■ | ப் | ■ | 9 த | ப் | பு | ■ |
| 10 அ | ப | ய | ம் | ■ | ■ | 11 கோ |
| 12 வி | தி | ■ | ■ | 13 ந | த் | தை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 101இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. திருமதி. எஸ். சிவானந்தன், கொட்டாஞ்சேனை.
2. செல்வி.எம்.எச். கதீஜா, கண்டி.
3. பி. மணிவண்ணன், வத்தளை.
4. செல்வி. எஸ். சுகிர்தா, வவுனியா.
5. எம். பௌஸ், டிக்வெல்ல.
6. ஆர். துஷ்யந்தன், நீர்கொழும்பு.
7. செல்வி. எஸ். பனிமலர், நுவரெலியா.
8. எம். இர்ஷாத், கொழும்பு-14.
9. கே. திருநாவுக்கரசு, கந்தப்பளை.
10. எம். அஸீம், திருகோணமலை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.





**சிவாஜி கணேசனுக்கு செவாலியே விருது கிடைத்தது பற்றி?**

உஷா ராமநாதன்-மட்டக்களப்பு

*செவாலியேக்கு சிவாஜி கிடைத்தது தான் பெருமை. விருதுகளுக்கு கௌரவம் உரியவைரச் சேரல்.*

□□

**'கூலி' ரி.வி.யில் பார்த்தீர்களா? எப்படியிருந்தது?**

கே.மோகனதாஸ்-கொழும்பு 5

*வாசுவின் முன்னைய படங்களான உழைப்பாளியில் கொஞ்சம், பணக்காரனில் கொஞ்சம் எடுத்து கலந்து சரத்குமாருக்காக நல்ல மசாலா சேர்த்து விறு விறு குறையாமல் தரப்பட்ட கூலி-விஜயகுமாரின் மகளுக்கு நல்ல எதிர்காலம் நிச்சயம்.*

□□

**தற்போதைய கவிஞர்களில் தமிழுக்கு தங்க நல்ல நாற்காலி கொடுக்கக் கூடியவர்கள் யார்?**

ஏ.தர்சிகா-பண்டாரவளை

*ஏற்கனவே தங்க நாற்காலியில் தானே தமிழ் இருந்து கொண்டிருக்கிறது.*

□□

**தலை கால் மறந்து ஆட்டம் போட்டால் என்னாகும்?**

எம்.ஏ.நசீர்-மருதானை.

*சூப்பர் ஹிட்டாகும்.!காதலன் படத்தில் பிரபுதேவா போட்ட ஆட்டத்தைப் பற்றிச் சொல்கிறேன்; நீங்கள் அதைப்பற்றித்தானே கேட்டீர்கள்?*

□□

**பிரபாகரன் பி.பி.சிக்கு கொடுத்த பேட்டி பற்றி?**

வி.சாஜகான்-கண்டி

*பி.பி.சி.ஆனந்திக்குத்தான் நல்ல பிரபல லாபம். ஒரே பேட்டியை எத்தனை பத்திரிகைகளுக்குக் கொடுத்து ஜமாய்த்து விட்டார் தெரியுமா?*

□□

**நம் பாராளுமன்றத்திலும் அமளியாமே?**

கு.சிவகரன்-நுவரெலியா.

*செய்தியறிந்தால் அயல்நாட்டு அரசியல்வாதிகளுக்கு திருப்தியாக இருக்கும்.'அப்பாடா இனி நம்மை மட்டும் கேலி செய்ய முடியாதல்லவா!, என்று நினைத்திருப்பார்கள்.*

□□

**ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது உண்மையா?**

தேவிகா பாலன்-சிலாபம்.

*உண்மைதான். ஒரு உதாரணம் சொல்லவா தேவிகா. ஜீப் ஒன்று குடை சாய்ந்துவிட்டது. தூக்கி நிறுத்த உதவிக் கொண்டிருந்த மக்கள் மீது வேன் ஒன்று மோதிவிட்டது. பலர்பலி. சாரதி நழுவிவிட ஆத்திரம் கொண்ட கூட்டம் வேனுக்கு நல்ல சாத்துப்படி. கொழுத்தியும் விட்டார்கள். அத்தோடு விட்டார்களோ! கொழுத்தப்பட்டது வேன் மட்டுமல்ல, குடை சாய்ந்த ஜீப்பும்தான்.*

□□

**பாரதியார் மீண்டும் பிறந்தால் எப்படியிருக்கும்?**

ஏ.பால்ராஜ்-கொழும்பு-7

*பிறந்தவர் மறுபடி சாகும்வரை அவரைக் கண்டுகொள்ளாமல் இருப்பார்கள்.*

□□

**உண்மையான காதலர்களை கண்டதுண்டா சிந்தியா?**

ஆர்.மல்லிகா-திருகோணமலை.

*பாட்டியை இன்னமும் பாசத்தோடு கவனிக்கும் தாத்தா. தாத்தாவுக்கு தலைவலி வந்தால்கூட தவித்துப் போகும் பாட்டி. இவர்கள்தான் உண்மையான காதலர்கள். காதலிப்பவர்களுக்கு வயதாகலாம். காதலுக்கு வயதாகக்கூடாது.*

□□

**நீங்கள் செய்த துணிச்சலான காரியம் ஒன்றைப் பகிர்ந்து கொள்வீர்களா?**

அ.ஜனார்த்தனன்-கண்டி.

*கொள்ளலாமே! பஸ்ஸில் 'ஃபுட் போர்'டில் தொங்கிக் கொண்டு பயணம் செய்திருக்கிறேனே!*

□□

**உங்களுக்கு பிடித்த நேரம் எது?**

கே.கங்கா-சிலாபம்.

*தினமுரசு வெளியானவுடன் ஒரே மூச்சில் அ முதல் ஃ வரை படித்து முடிக்கும் நேரம்.*

□□

**பெண்கள் எவ்வாறான உடை அணிய வேண்டும்?**

எம்.ஜோதீஸ்வரி-மட்டக்களப்பு.

*தேவைக்கும். சௌகரியத்துக்கும் ஏற்ற வகையில்!*

□□

**யாருடைய ஆலோசனைகளைப் பின்பற்றி நடப்பீர்கள்?**

ஏ.எப்.ரகீம்-கல்முனை.

*"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண் பதறிவு"*

□□

**மறுபிறப்பில் நம்பிக்கை உண்டா?ஆம் எனின் எவ்வாறு அவதரிக்க ஆர்வம் உண்டு?**

எஸ்.கேசவன்-வவுனியா.

*கேசவன்! நீர் என்ன பரீட்சை வினாத்தாள் தயாரிப்பவரா என்று அறிய ஆவல், நிற்க, ம.பி.வில் நம்பிக்கை ஒரு இன்ச் கூடக் கிடையாது. இருந்தாலும் சொல்கிறேன்: சமாதானப் புறாவாகப் பிறக்க ஆசை. ஏன் தெரியுமோ, அப்போதுதானே பறந்து திரியும் தொல்லையில்லாமல் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்க முடியும்!*

□□

# மகாபாரதம்

அங்கம் 81



**இவ்வாரம் (11.06.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

**காலத்தின் குரல்**

**காரிருள் சூழ்ந்த குருச்சேத்திரமுனை**
**கதிரவனுதயம் காண மறந்ததோ?**
**போரின் முடிவின் போக்கினை உணரா**
**வீரரின் வினாவில் வெதும்புகின்றதோ?**

**பாண்டவர் படைக்குப் பக்கபலமதாய்**
**ஆண்டவன் கண்ணனே அருந்துணையாகினான்;**
**ஆணவப் போர்வையை ஆவலுடனணைத்தே**
**பூண்ட கவுரவர் புலம்பினர் தனிமையில்.**

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரம் - துரோணரின் பாசறை -துரியோதனன் வருகிறான்.

**துரி:** ஆச்சாரியார் எங்கே போயிருக்கிறார் என்பது உனக்குத் தெரியுமா காவலனே.....?

**கர்ண:** தெரிந்திருந்தால் எப்போதோ கூறியிருப்பானே நண்பனே.....!

**சகுனி:** தன்னுடைய அன்புக்கு பாத்திரமான பாண்டவர்களிடம் போயிருப்பார்! நாளை யுத்தத்தின்போது எத்தகைய தந்திரோபாயங்களைக் கடைப்பிடிக்கப் போகின்றார் என்பதை அவர்களிடம் கூறத்தான் போயிருப்பார்......! ஏன் என்னை அவ்வாறு பார்க்கிறீர்கள்......? கங்கையின் மைந்தரே, தன்னை, எவ்வாறு வீழ்த்தலாம் என்ற இரகசியத்தை அவர்களிடம் கூறிய போது, அவர்களுடைய குருவான ஆச்சாரியார் ஏன் தனது போர் தந்திரங்களைப் பற்றிக் கூறமுடியாது? இவ்விரு பெரியாரும் ஒரேதரமான இராஜ விசுவாசமுடையவர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம் மருமகனே.......!

**கர்ண:** பெருமைக்குரிய சகுனி மாமா...! கங்கை மைந்தர் பீஷ்மர் மற்றும் ஆச்சாரியார் துரோணர் ஆகிய பெரியார்களின் விசுவாசத்தைப் பற்றி நம்பிக்கையிழப்பதைப் போன்ற மற்றுமோர் பெருங்குற்றம், இந்தப் போர்க் காலத்தில் வேறு எதுவுமே இருக்க முடியாது! இத்தகைய மாபெரும் வீரர்களை தன்னுடைய அணி வீரர்களாகக் கொண்டிருப்பதே துரியோதனனுக்குப் பெரும் பாக்கியமாகும். தாங்கள் கூறும் குற்றச்சாட்டுக்களை நான் ஏற்கமாட்டேன். மாபெரும் வீரர்களும் பெரியார்களுமான அத்தகையோர் பற்றி மரியாதையாகப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**சகுனி:** அங்கதேசத்துக்கதிபதியே! நான் மதிப்பளிக்க விரும்பாதவர்கள் பற்றி நான் எவ்வாறும் கருத்துக் கூறுவேன். எங்கள் நாட்டுப் பழக்கமும் அதுதான்.! ஆச்சாரியார் துரோணர் பெரு வீரர்தான்...! ஆனால் அவருடைய இராஜ விசுவாசம் தான் சந்தேகத்துக் குரியதாகும்.

**கர்ண:** காந்தார மன்னர் அவர்களே....! நான் துரியோதனனுக்கு கடனாளியே தவிர அவனுக்கு கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும் என்ற கட்டாயம் எனக்கு கிடையாது. எனது கடனைச் செலுத்தி முடிந்ததன் பின்னரே வேறு எதைப் பற்றியும் நான் கருத்தில் கொள்ள முடியும். கட்டுப்பாட்டுக்கும் கடமைப்பாட்டுக்கும் பாரதூரமான வித்தியாசம் இருக்கிறது மாமா....! அவர்களோ இராஜ விசுவாசத்துக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதில் சந்தேகமே இல்லை! அதனால் தான் கங்கையின் மைந்தர், தான் பாண்டவர்களைக் கொல்லப்போவதில்லை என்பதை மறைத்து விடாமல் வெளிப் படையாகச் சொன்னார். அவர்களெல்லாம் போற்றுதற்குரியவர்களே....!

**சகுனி:** அங்க நாட்டதிபதியே... உம்முடைய தொனியில் ஏதோ ஒரு மாற்றம் தெரிகிறதே? என்ன பிரச்சனையோ......?

**கர்ண:** மாமா..! சுத்த வீரன் எப்போதும் தடுமாறமாட்டான். பவித்திரமில்லாத எப்பணியில் அவர்கள் ஈடுபட்டாலும், தங்கள் மதிப்பினை அவர்கள் இழக்க மாட்டார்கள்!

**துரி:** நண்பனே......! நீ எனக்கு கடனாளி என்பதனால்தான் என்னுடன் இணைந்திருக்கிறாய் என்றால்...... அக்கடனிலிருந்து உன்னை இக்கணமே நீக்கிவிடுகிறேன். அன்புப் பிணைப்பால் தான் இன்றுவரை நீ என்னுடன் இணைந்திருக்கிறாய் என்று நான் தப்புக்கணக்குப் போட்டு விட்டேன். ஆனால் நீ எனக்கு வெறும் கடன்காரன் மட்டும்தான் என்று கூறி விட்டாயே....?

**கர்ண:** உனக்குரிய கடனை உரியமுறையில் செலுத்தினாலொழிய என்னுடைய கடமைப்பாட்டினை உனக்கு நிரூபித்துக் காட்ட முடியாது நண்பனே....! கடனாளியான ஒருவனுக்கு எதுவித உரிமையும் கிடையாது! இருப்பினும் என்னுடைய கடன் அடைக்கப்பட்ட பின்னர் நான் எவருக்கு விசுவாச முடையவன் என்பதனை அறிந்து கொள்வாய் நண்பா!

**துரி:** எனக்குரிய கடனிலிருந்து உன்னை விடுவித்து விட்டதாகத்தானே சொன்னேன்.....!

**கர்ண:** தர்மமாக இதுவரை எதனையும் நான் பெற்றதில்லை.... இனிமேலும் பெறப் போவதுமில்லை. தேவர்களே என்னிடம் வந்து தர்மம் பெற்றுச் சென்றுள்ளனர் நண்பனே.....! என்னுடைய விசுவாசத்தைப் பற்றி உனக்கு சந்தேகமிருக்குமானால் இதோ.......

**கர்ணன் தன் கட்டாரியால் வயிற்றைக் கீறி தற்கொலை செய்ய முயல்கிறான். துரியோதனன் தடுக்கிறான்.**

**துரி:** வேண்டாம்.... வேண்டாம்.... அவ்வாறு எதுவுமே வேண்டாம் நண்பனே.... என்னை மன்னித்துக்கொள்!

**கர்ண:** நண்பர்கள் மத்தியில் மன்னிப்புக்கு இடமே இல்லை நண்பனே........!

**காட்சி மாற்றம்**

குருச்சேத்திரம் - கவுரவர் பாசறை -துரோணாச்சாரியார் வருகிறார்.

**துச்சா:** எங்கு சென்றிருந்தீர்கள் குருதேவர் அவர்களே.....?

**சகுனி:** வணக்கம் குருதேவர் அவர்களே...! தங்களைக் காணாமல் கவலைப் பட்டோம்...!

**துரோ:** கங்கையின் மைந்தரைத்தான் பார்க்கப்போயிருந்தேன்..... அர்ச்சுனன் அருகில் இருக்கும்போது யுதிஷ்டிரனைக் கைது செய்வது அவ்வளவு சுலபமாக எனக்குப்படவில்லை....!

**கர்ண:** அர்ச்சுனனைப் பற்றி ஏன் கவலை....? அவனை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

**துரோ:** நானும் பரசுராமனின் மாணாக்கன் தான். கர்ணனும் பீஷ்மரும்கூடத்தான் அந்த மகானின் சீடர்கள்......! உமது வீரத்தைப் பற்றி எனக்கு அவநம்பிக்கை இல்லை. இருப்பினும் விராட நாட்டுப் போரில் அர்ச்சுனனின் பாணங்கள் எத்தகைய சுவை என்பதனை அறிந்தவர்தானே.....?

**கர்ண:** அப்போ சரணாகதி அடைந்து விடுவதுதானே...!

**சகுனி:** அங்கத்துக்கதிபனின் ஆலோசனையிலும் கருத்து இருக்கிறது ஆச்சாரியாரே...!

**துரோ:** (கோபமாக) காந்தார நாட்டரசரே.....!

**கர்ண:** மன்னிப்புக் கோருகிறேன் பிரதம தளபதியாரே......!

**துரி:** (கடும் கோபத்துடன்) நீங்கள் அனைவரும் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எனக்காகப் போரிடுகின்றீர்கள்..... எமது அணியில் கருத்துவேற்றுமைகள் இருக்குமானால் தோல்வி நிச்சயம். உங்களுடைய தனிப்பட்ட கருத்துக்களை தூர எறிந்து விட்டு ஒரே குறிக்கோளுடன் போரிட முன்வாருங்கள்! குருதேவரின் கருத்தில் உண்மையுண்டு...... அர்ச்சுனன் அருகிலிருக்கும்போது யுதிஷ்டிரரை அணுகுவது முடியாத காரியம்தான். யாராவது இருவரையும் பிரித்து தனிமைப் படுத்துவதற்கு முன்வரவேண்டும்.

**கர்ண:** என்னால் அத்தகைய போலித்தனமான காரியத்திலீடுபட முடியாது..... அவ்வாறு நான் நடந்து கொண்டால் அர்ச்சுனனிடமிருந்து நான் பின்வாங்குவதாக அர்த்தமாகிவிடும்.

**துரி:** இத்தகைய பணிக்கு திரிகத நாட்டரசன் சுசர்மனை ஏவுதல் நல்லது.

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரம் - திரிகதநாட்டரசன் பாசறை- துரியோதனனும் துரோணரும் அங்கு வருகின்றனர்.

**சுசர்:** இந்தச் சின்ன விடயத்துக்காக இளவரசரும் படைத்தளபதியாரும் என்னை நாடி வரவேண்டுமா....? ஆச்சாரியார் அவர்களே....! அர்ச்சுனனை போலித்தனமாகக் கடத்துவதென்பது உண்மையில் உயிராபத்தான காரியம்தான். இருப்பினும் அஸ்தினாபுரத்துக்காக போராட வந்திருக்கும் என் தம்பியும் நானும் அர்ச்சுனன் கணைகளால் கொல்லப்படுவதானாலும் பாதகமில்லை..... அர்ச்சுனனை யுதிஷ்டிரரிடமிருந்து அப்புறப் படுத்த முயற்சிக்கிறோம்.

**துரி:** இன்று முதல் துரியோதனனும் அஸ்தினாபுரமும் உங்களுக்கு கடன் பட்டவர்கள். எதிர்காலம் உங்களை வீரர்கள் வரிசையில் நிச்சயம் முன்வைக்கும்.!

**சுசர்:** நாளை அர்ச்சுனனைக் கொன்று விட்டுவருவோம்.... இல்லா விட்டால், அர்ச்சுனனால் சாகடிக்கப்பட்டு எங்கள் உயிரற்ற சடலங்கள் வந்து சேரும்.

**—காட்சி மாற்றம்—**

**குருச்சேத்திரம்–போர்க்காட்சிகள்– அர்ச்சுனனை திரிகத மன்னன் சுசர்மன் எதிர் கொள்கிறான்.**

**சுசர்:** பெயரற்ற அப்பாவி வீரர்களுடன் பொருதுவதுதான் உன்போன்ற வீரனுக்கு அழகா.....? சண்டையிட வேண்டுமானால் எம்போன்ற வீரர்களுடன் பொருதிப்பார்! சகோதரர்களான நாங்கள் இருவரும் உன்னிடம் போரிட்டு வெல்வது-அல்லாவிட்டால் வீரமரணமடைவது என்ற சபதத்துடன் வந்திருக்கிறோம்!

**அர்ச்:** யாரது.... திரிகத நாட்டரசனா.....?

**பீமன்:** தம்பி அர்ச்சுனா...! இது ஒரு சவாலாக எனக்குப் படவில்லை. குரு துரோணாச்சாரியாரின் தந்திரமாகவே இது எனக்குப் படுகிறது!

**அர்ச்:** இருப்பினும் அவன் எனக்குத்தானே அண்ணா சவாலிடுகிறான்!

**பீமன்:** இதனைப் பொருட்படுத்தாதே.... பெரிய அண்ணனைத் தனிமைப்படுத்தி அவரைக் கைது செய்து கொண்டு போய்விடுவதற்காக குரு அவர்கள் தயாரித்துள்ள திட்டம். இவர்கள் இருவரும் தந்திரமாக உன்னை இழுத்துக் கொண்டு போனபின்னர், சுலபமாக குரு அவர்கள் அண்ணாவை கைது செய்து விடுவார்!

**அர்ச்:** தாங்கள் மூத்த அண்ணாவின் பக்கத்திலிருக்கும் போது அவரருகில் எவரால் நெருங்க முடியும்....?

**பீமன்:** தம்பி....! முழு கவுரவப் படைதிரண்டு ஒன்றாக வந்தாலும் நான் அத்தனை பேரையும் கசக்கிப் பிழிந்து விடுவேன்...! ஆனால் நமது குருவின் முன்னேற்றத்தைத் தடுக்க என்னால் முடியாதே!

**சுசர்:** ஏ அர்ச்சுனனே...! உன்னைப் பெரிய வில் வீரன் என்கிறார்களே..... என் அறைகூவலுக்கு இதுவரை பதிலைக் காணவில்லையே.....? உன்னால் போரிட முடியாவிட்டால் உன் வில்லையும் அம்புகளையும் தூர எறிந்துவிடு...!

**அர்ச்:** அண்ணா.....! அவன் என்னைக் கோழை என்று கணக்கிட்டு விட்டான். அவனைக் கொல்லாமல் விடமாட்டேன்....! கேசவா...! இரதத்தை எடுங்கள்...

**பீமன்:** அர்ச்சுனா... அர்ச்சுனா....

**திரிகத மன்னனைத் தொடர்ந்து அர்ச்சுனன் செல்கிறான்**

****

**துரி:** குருதேவர் அவர்களே! திரிகத மன்னரும் அவர் தம்பியும் அதோ... அர்ச்சுனனை அப்பால் கொண்டு செல்லுகிறார்களே....! தாங்கள் ஏன் இன்னும் தாமதிக்க வேண்டும்?

**துச்சா:** அந்த மடையர்களும் ஏன் தாமதிக்கிறார்கள்.....? இன்னும் கொஞ்ச தூரம் அர்ச்சுனனை இழுத்துக் கொண்டு போகலாமே....?

**கர்ண:** துச்சாதனா..! நாம் தான் இப்போரில் தந்திரங்களைக் கையாள எத்தனிக்கிறோம்; அவர்கள் எமக்காகப் போராட வந்த வீரர்கள் என்பதை மறக்க வேண்டாம்! அர்ச்சுனனின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவர்கள் திணறுகிறார்கள் போலும்!

****

**யுதிஷ்:** தம்பி பீமா....! அர்ச்சுனன் வெகு தூரம் சென்றுவிட்டான்போல் தோன்றுகிறதே? என்னைக் கைது செய்து விட்டால், அத்துடன் எல்லாமே முடிந்து விடும் அல்லவா? யுத்தக் கைதியான பிறகு நாம் எத்தகைய உரிமையையும் பெறமுடியாதவர்களாகி விடுவோமல்லவா....?

**நகுலன்:** அர்ச்சுன அண்ணா இல்லாவிட்டால் எல்லாமே ஒழிந்து விடுமே அண்ணா..?

**பீமன்:** அர்ச்சுனனைத் தவிர வேறு எவராலும் குரு துரோணாச்சாரியாரின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாது தம்பி.....!

**—காட்சி மாற்றம்—**

**துரி:** குருதேவர் அவர்களே....! தங்களுடைய விசுவாசம் யார் பக்கம் இருக்கிறதென்ற சந்தேகம் இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கிறது.....! யுதிஷ்டிரரின் அருகிலிருந்து அர்ச்சுனனை அப்பால் கடத்திச் செல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து தந்தேன்! அர்ச்சுனன் வெகு தூரத்துக்கு அப்பால் போன பின்னரும் தாங்கள் யுதஷ்டிரரைக் கைது செய்யவில்லை!

**கர்ண:** துரியோதனா....நண்பா.....!

**துரி:** நண்பனே....... நான் எப்படியாவது இந்தப் போரில் வெற்றி பெற்றாக வேண்டும். ஆச்சாரியாருக்கு மாபெரும் பதவியினை வழங்கியிருப்பதனால், குருவுக்குரிய மதிப்பளிக்க முடியவில்லையே என்ற விசனம் இருந்த போதிலும், அவருடைய கருத்தினை அறிய வேண்டிய கடமைப்பாடு எனக்கிருக்கிறது! குருதேவர் அவர்களே தங்களை நம்பலாமா.....?

**துரோ:** துரியோதனா! உன்னுடைய நம்பிக்கையையும் அவநம்பிக்கையையும் பற்றி எனக்கு அக்கறையில்லை! யுதிஷ்டிரனை விட்டு அர்ச்சுனன் போதுமான அளவு தூரம் போகவில்லையே என்பதுதான் என்னுடைய அனுமானம். எப்படியாவது யுதிஷ்டிரனை கைது செய்து உன்னிடம் ஒப்படைப்பேன்.....நாளை நான் சக்கரவியூகம் அமைக்கப் போகிறேன். இதனை ஊடறுத்து வெற்றி காண அர்ச்சுனனால் மட்டும்தான் முடியும்.

**பாசறையில் நடைபெற்ற இந்த உரையாடலை இரகசியமாக வெளியில் நின்று ஒட்டுக் கேட்டுவிட்டு வெளியேற முனையும் ஒரு வீரனை பல காவலர்கள் பிடித்துக்கொண்டு வந்து துரோணரின் முன் நிறுத்துகின்றனர்.**

**துரோ:** காவலனே! எங்கே போகப் போகிறாய்....?

**காவ:** யுதிஷ்டிரமகாராஜாவிடம் செல்லப் போகிறேன்.....!

**துரோ:** காரணம்.....?

**காவ:** மாலையானதும் அன்றையப் போர் முடிவடைகிறது..... அதன் பின்னர் ஓரணியிலிருப்பவர்கள் எதிரணியிலிருக்கும் எவரையும் பார்க்கப் போகலாம் என்ற விதி இருக்கும் போது தாங்கள் என்னிடம் இத்தகைய கேள்வியினைக் கேட்கலாகாது!

**துரோ:** விதிகளைப் பற்றி இங்கு நான் வினவவில்லை. இந்த வேளையில் யுதிஷ்டிரர் முகாமுக்கு நீ ஏன் போகிறாய்.....?

**காவ:** யுத்த தர்மப்படி இத்தகைய கேள்வியினைக் கேட்க தங்களுக்கு உரிமை கிடையாது!

**அஸ்வத்:** (கோபமாக எழுகிறான்) படைத்தளபதியிடம் பேசுகிறாய் என்பது உனக்கு ஞாபகமிருக்கட்டும்....!

**காவல:** எனக்கு நினைவிருக்கிறது...ஆனால் தளபதி போன்றாருக்குத்தான் போர் பற்றிய விதி முறைகள் மறந்துவிட்டன போலும்..!

**துரோ:** ஆத்திரப்படாதே அஸ்வத்தாமா....! காவலனே! நான் எதை மறந்து போனேன்?

**காவ:** தங்களுடைய விசுவாசம் உண்மையில் எத்தகையது என்பதை மறந்து விட்டீர்கள். அஸ்தினாபுரத்தின் மீது விசுவாசம் கொள்வதாகக் கூறிக் கொண்டு அரசருடைய மற்றும், இளவரசருடைய சுயநலத்துக்காக நீங்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கிறீர்கள். நான் யுதிஷ்டிரரையும் அர்ச்சுனனையும் கண்டு, தாங்கள் நாளை சக்கரவியூகம் அமைக்கப் போவதைப் பற்றிககூறப் போகிறேன். அர்ச்சுனனை-யுதிஷ்டிர மாமன்னரை விட்டுப் பிரியலாகாது என்று எச்சரிக்கப் போகிறேன். அஸ்தினாபுரத்தின் விசுவாசமுள்ள குடிமகன் என்பதனால் இதுவே என் கடமையாகப்பட்டது.

**இவ்வாறு கூறிய காவலன் ஆச்சாரியாரை தலை தாழ்த்தி வணங்குகிறான்.**

**அஸ்வத்:** அப்பா! அவனுக்கு ஏன் தாங்கள் மரண தண்டனை கொடுக்காமல் விட்டு விட்டீர்கள்?

**துரோ:** அவன் தனக்கு தன் கடமை எது எனப்பட்டதோ அதனைச் செய்ய முன்வந்துள்ளான் மகனே! உண்மையில் வாசுதேவன் மற்றும் அர்ச்சுனனைத் தவிர அந்தமுகாமில், சக்கரவியூகத்தை ஊடுருவ வேறு எவராலும் முடியாது.

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரத்தில் பாண்டவர் முகாம்- உத்தரையும் அபிமன்யுவும்.

**அபிமன்:** காதலுக்கும் போர்க்களத்துக்கும் நிரம்பிய ஒற்றுமைகள் இருக்கின்றன அன்பே! காதல் கலையில் நீயோ கைதேர்ந்தவள். உன் தலை முடி, உனது அதரங்கள், உனது புன்னகை அத்துடன் உனது நாணம் அத்தனையுமே எதிரியை வீழ்த்தும் ஆயுதங்கள்!

**உத்த:** தாங்கள் உதிர்க்கும் வார்த்தை அம்புகளை விடவா.....? தங்களுக்கு போர்க்கலையில் எதுவரை தெரியுமோ...?

**அபிமன்:** பாதிதான் கற்றுள்ளேன்...! சக்கர வியூகத்தைப் பற்றி நான் அறிந்தவற்றை கூறுவேன். இடையில் தூங்கிவிட மாட்டேன் என்று சத்தியம் செய்வாயா...?

**உத்த:** தாங்கள் சக்கரவியூகத்தைப் பற்றிச் சொல்வதற்கும் எனது தூக்கத்துக்கும் என்ன சம்பந்தம்?

**அபிம:** என் தாய் வயிற்றில் நான் இருக்கும் போது.... எனது தந்தையார் அம்மாவுக்குச் சக்கரவியூகம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். அதனுள்ளே ஊடுருவும் மார்க்கம் வரை சொல்லுமட்டும் அம்மா விழித்திருந்தார். கர்ப்பத்தில் இருந்து நானும் விழித்திருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அம்மா தூங்கியதும் நானும் தூங்கி விட்டேன். உட்செல்லும் மார்க்கம் மட்டுமே எனக்குத் தெரியும். வெளி யேறும் வழி எனக்குத் தெரியாது. மாமா கிருஷ்ணரிடம் கேட்டேன். அப்பாவிடம் கேட்டு அறிந்துகொள்ளச் சொன்னார். ஆனால் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லை. அதே போல் உன் வயிற்றில் வளரும் என் மகனும் பாதிக் கதையை மட்டுமே அறியலாகாதல்லவா?

**—காட்சி மாற்றம்—**

**கவுரவர் பாசறையிலிருந்து வெளியேறிய துரியோதனனும் துச்சாதனனும் சுசர்மனின் பாசறைநோக்கிச் செல்கின்றனர்.**

**காட்சி மாற்றம்**

அர்ச்சுனனுடைய பாசறை-கிருஷ்ணரும் அங்கிருக்கிறார்.

**ஆச்:** சுசர்மன் நாளையும் என்னை போருக்கு அழைத்து சவால் விடப்போகிறான். அவனுடைய சவாலினை நான் ஏற்கத்தானே வேண்டும் கேசவா....? அது சத்திரிய தர்மமல்லவா......?

**கிருஷ்:** சத்திரிய தர்மத்தைப்பற்றிய வியாக்கியானம் இப்போது முக்கியமல்ல பார்த்தா! இப்போரில் பாண்டவர்கள் தோற்றால், அதுவே சமுதாய நலன்கள் அத்தனைக்கும் வீழ்ச்சியாகும். சுசர்மனின் சவாலைப் பொருட்படுத் தாமல் முழுச் சமுதாயத்தின் நலனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். உன்னுடைய தன்னலத்தின் அடிப் படையில் சத்திரிய தர்மம் என்றுகூறி, அதற்கு முக்கியத்துவம் அளிப்பதானால் அப்படியே செய்...! நானோ உன் தேர்ப்பாகன்...! உன் கட்டளைப்படி தேரைச் செலுத்த வேண்டியதுதான் என் கடமை....!

**—காட்சி மாற்றம்—**

**சுசர்மனின் பாசறைக்கு துரியோதனனும் துச்சாதனனும் வருகின்றனர்.**

**துரி:** திரிகத மன்னர் சுசர்மரே.... தங்களிடம் ஒரு கோரிக்கையுடன் வந்திருக்கிறோம்!

**சுசர்:** என்னிடம் தேடி வந்து கோரிக்கைவிட வேண்டுமா.....? கட்டளையிட்டால் போதுமே!

**துரி:** நாளை தாங்கள் அர்ச்சுனனிடம் சண்டையிட வேண்டாம். அவனை தந்திரமாக எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் அழைத்துக் கொண்டு போய்விட வேண்டும்! பொழுது சாயும் வரை அர்ச்சுனன் இப்பக்கம் வராமல் இழுத்தடிக்கப்பட வேண்டும்.

**சுசர்:** அது கோழைகளின் செயல் அல்லவா....? இதனால் என்ன லாபம் கிடைக்கப்போகிறது.?

**துச்சா:** இதுதான் ஆச்சாரியாரின் தந்திரோபாயம். அர்ச்சுனனை அப்புறப்படுத்தினால் ஆச்சாரியார் யுதிஷ்டிரரை கைது செய்து விடுவார்.

**சுசர்:** அவர் கைதானால் என்ன நடக்கும்?

**துரி:** போர் முடிவடைந்து விடும். ஏன் போர் முடிவது தங்களுக்கு விருப்பமில்லையா.....?

**சுசர்:** இந்தப் போர் விரைவில் முடிவடைந்துவிட வேண்டும் என்பதே எல்லாருடைய விருப்பமுமாகும்! இளவரசரே எனக்குத் தாங்கள் ஒரு வாக்குறுதி தர வேண்டும்...!

**துரி:** என்ன அது?

**சுசர்:** யுதிஷ்டிரருக்கு நான் கடமைப்பட்டவன். விராட நாட்டுப் போரில் நான் அவரிடம் தோல்வி கண்டபோதும் அவர் என்னை விடுவித்துவிட்டவர். ஆகவே....நீங்கள் யுதிஷ்டிரரைக் கைது செய்தாலும் எனக்காக அவரை விடுவித்து விடுவீர்களானால், தாங்கள் கேட்டுக் கொண்டது போல் நாளை நான் அர்ச்சுனனை கடத்துகிறேன்!

**திரி:** அப்படியே ஆகட்டும் நண்பரே.... தங்களின் விருப்பப்படியே நான் நிச்சயம் அவரை விடுவித்து விடுகிறேன்.....!

**சுசர்:** கவலையை விடுங்கள் இளவரசரே.....! நாளைக் காலை யிலேயே நான் அர்ச்சுனனை இந்த உலகத்தின் எல்லை வரைக்குமே இழுத்துக் கொண்டு போய்விடுகிறேன்....!

**பின்னணிப் பாடல்:**

பொய்யும் புனை சுருட்டும் பூண்ட துரியோதனனின்
பொய்யுரையை மெய்யுரையாயேற்றி மறவனவன்
பாண்டவர் அருகிருந்து பார்த்தனைப் பிரிப்பதற்கு
பூண்டதொரு சபதமுடன் புறப்பட்டான் போர்முனைக்கே!

(தொடர்ந்து வரும்)


எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்

4 3 6 3 3 3 1
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# தருவது-வியோபிட



Kala

JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
4 3 3 6 8 6
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# இனிய இனிய நட்பு

பாடுவோர் பாடினால் ஆடத் தோன்றும். பழகும் முறையில் பழகினால் பாசம் கொள்ளத் தோன்றும். பாயும் புலிகூட பாசம் வைத்தால் தோழனாய் மாறிக் கொள்ளும்.

இங்கிலாந்தில் உள்ள மிருகக் காட்சிச் சாலையின் பராமரிப்பாளர் நிக். அங்குள்ள புலியோடு சிறு வயது முதலே செல்லம் கொஞ்சத் தொடங்கி விட்டார்.

வாட்ட சாட்டமாக வளர்ந்த பின்னரும் 'நிக்' மீது மாறாத பாசத்தோடு சுற்றி வருகிறார் புலியார்.

பராமரிப்பு வேலை செய்யும் போது புலியார் செய்யும் அன்புத் தொல்லை தாங்க முடியவில்லை என்கிறார் நிக்.

கூண்டுக்குள் புலி இருந்தாலே அருகே செல்ல அச்சம் வரு மல்லவா. ஆனால் நிக் அணைத்து மகிழ்கிறார்.

மனிதரில் மிருகம் உண்டு. ஆனால் மிருகத்தில், சில மனிதரை விட-சிறந்தவையும் உண்டு.



# என்னுயிரே இனி நான் உனதே!



மூன்று வருடம் சிறையில் சுழித்த சோர்வே இல்லாமல் நல்ல 'மூட்'டில் இருக்கிறார் மைக் டைசன்.


'மூட்' சிறக்கக் காரணம் காதலி மோனிகா. விரைவில் டாக்டராகப் போகும் மோனிகா டைசனின் வேதனைகளுக்கு மருந்தாகி விட்டார்.

அழகிகளைக் கண்டாலே கை நுழு நுழுக்கும் டைசனுக்கு- என்று ஒரு குற்றச் சாட்டு இருப்பது.

அது உண்மையோ பொய்யோ இனிமேல் நுழு நுழுக்கும் கைகளுக்கு கட்டுப்போட்டு வைத்திருக்க மோனிகா இருக்கிறார்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் மீண்டும் களத்தில் குதிக்கிறார் டைசன். பீட்டர் மெக்னிலியுடன் மோத உடலைத் தயார் படுத்தும் டைசனுக்கு மோனிகாவும் அருகிலிருப்பது வீட்டின் மாத்திரை போல் இருக்கும்.

# ராசி நல்ல ராசி





டேவிட் அவரது துணைவி சங்க் இருவரும் காட்டுக்கு வேட்டையாடப் போனார்கள்.

தாயை பறிகொடுத்துவிட்டு இந்த மனிதக் குரங்கு அலைந்து திரிந்தது. அப்போது குட்டியாக இருந்த மனிதக் குரங்காரின் சுட்டித்தனம் தம்பதியினருக்கும் பிடித்து விட்டது.

மனிதக் குரங்காரை தம்மோடு அழைத்து வந்து ஒரு குழந்தை போலவே பராமரித்து வளர்த்தனர்.

டேவிட் தம்பதியினருக்கு குழந்தைகள் கிடையாது.

மொத்த பாசத்தையும் மனிதக் குரங்கார் மீது கொட்டி வளர்த்து வருகிறார்கள். மனிதர்கள் போலவே குரங்காருக்கும் விதம் விதமான ஆடைகள் அணிவித்துப் பார்த்து மகிழ்கிறார்கள்.

வெளியே போகும் போது நாலு சில்லு வண்டியில் வைத்து தமது குழந்தையை பாதம் நோக விடாமல் அழைத்துச் செல்கிறார் திருமதி சங்க் டேவிட்.

குரங்காருக்கு ராசிதான். அனுபவி ராஜா அனுபவி.

தினமுரசு வாரமலர்

# பழம்-கலை





கனிகளைக் கண்டால், கவைத்துப் பார்க்கத்தானே தோன்றும்! எட்ட நின்று ரசித்தாலும் கைக் கெட்டி விட்டால் சுவைக்காமல் இருக்க மனம் வருமோ?

ஆனால், பழங்களை வைத்து கலை ரசனையோடு வித்தை காட்டியிருக்கிறார் ஒருவர். அமெரிக்காவில் உள்ள 'டிஸ்னி லான்ட்'டில் சுற்றுலாப் பயணிகளின் விழிகளுக்கு தீனி போடும் காட்சி இது. அங்கு சமீபத்தில் நடந்த கண்காட்சி ஒன்றில் விதம் விதமான பழங்களால் பிரமாண்டமான சிங்கம் ஒன்று. அது தவிர கம்பியூட்டரில் வரைந்தது போன்ற அமைப்பில் பல்வேறு உருவங்கள் என்று அசத்தியிருக்கிறார்கள்.

உதடுகளால் உண்ணப்படும் கனிகளை, விழிகளால் உண்ணப் படும் கலை வடிவமாக்கி கலக்கி விட்டார் கலக்கி!